# உதயன்

வானிலை
கூ.வெ. 31°C
கு.வெ. 26°C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 185 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 17, ஞாயிற்றுக்கிழமை 31.05.2015


3 1 MAY 2015

### திருக்கேதீஸ்வரம் இரதோற்சவம் இன்று

மன்னார், மே 31
வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் இரதோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.
முற்பகல் 10 மணிக்குக் கௌரியம்பாள் சமேதராய் தேரில் ஆரோகணிக்கும் திருக்கேதீஸ்வர நாதரோடு பரிவார மூர்த்திகளுமாக பஞ்ச தேர் பவனி இடம் பெறவுள்ளது. (து)

### சு.க.வுக்குள் குழப்பம்

கொழும்பு, மே 31
புதிய தேர்தல் சீர்திருத்தம் உள்ளிட்ட 20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதா? அல்லது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதா? ஆகிய இரண்டில் எதனை முதலில் செய்வது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் குழப்பம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இது தொடர்பில் அண்மையில் தேசிய அரசிலிருந்து வெளியேறிய நாடாளுமன்ற விவகார முன்னாள் அமைச்சரும் மாத்தறை மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப் பினருமான மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் நேற்று பக்.21

### அம்பாறையில் குடும்பஸ்தர் கழுத்தறுத்து படுகொலை

அம்பாறை, மே 31
அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிந்தவூர், அட்டப்பள்ளம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கழுத் தறுத்துப் படு கொலை செய்யப் பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம் பெற்றுள்ளது. ஒரு குழந்தையின் தந்தையான அட்டப்பள்ளம் கிராமத்தின் முஹம்மது அலியார் வீதியைச் சேர்ந்த சித்திக் பவுஷன் (வயது - 27) என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.
மனைவியையும், குழந்தையையும் பிரிந்து வாழ்ந்து பக்.21

# இலங்கை அரசுடன் இராணுவ உறவுக்கு சீனா பெரு விருப்பம்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் நேரில் எடுத்துரைப்பு

பீஜிங், மே 31
இலங்கையுடன் நெருங்கிப் பழகி நட்புறவை வலுப்படுத்துவதற்கும், இராணுவ ரீதியிலான உறவுகளை அபிவிருத்தி செய்வதற்கும் சீன அரசு விருப்பம் தெரிவித்துள்ளது.
இலங்கையில் சீன முதலீட்டில் மேற்கொள்ளப்படும் துறைமுக நகரத் திட்டத்தின் மூலம் மைத்திரிபால அரசுக்கும் சீனாவுக்கும் இடையே முரண்பாடான நிலை நிலவி வரும் வேளையில் சீன அரசு இந்த விருப்பத்தை வெளியிட்டுள்ளது.
ஒரு சீனா என்ற கொள்கையையும், தென் சீனக் கடல் விவகாரத்தில், சீனாவின் நிலைப்பாட்டையும் முழுமையாக ஆதரிப்பதாக இலங்கைப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன சீனப் பாதுகாப்புத் தரப்பிடம் உறுதியளித்துள்ளார்.
சீன பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இந்தத் தகவல் இடம்பெற்றுள்ளது.
சிங்கப்பூரில் நடக்கும், சங்கிரி லா கலந்துரையாடலில் பங்கேற்கச் சென்றுள்ள, இலங்கைப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவை, நேற்று முன்தினம் பிற்பகல் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் பிரதித் தலைமை அதிகாரி அட்மிரல் சன் ஜியான்கூ சந்தித்துப் பேச்சு நடத் தினார்.
இந்தச் சந்திப்பின்போது தென் சீனக்கடல் விவகாரம் - பக்.21



## ஊடகவியலாளர்கள் கொலைகள்; விசாரணைகள் மீண்டும் வேண்டும்

*வலியுறுத்துகிறார் ஜனாதிபதி*

கொழும்பு, மே 31
கடந்த காலங்களில் கொல்லப்பட்ட மற்றும் காணாமற்போன ஊடகவியலாளர்கள் தொடர்பான விசாரணைகளை மீள ஆரம்பிக்க வேண்டும்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால.
காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (இ)



## 14 நாள்களில் 10 வன்புணர்வு

வடக்குக் குறித்து அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார் இராதாகிருஷ்ணன்

கொழும்பு, மே 31
கடந்த 14 நாள்களில் மாத்திரம் வடக்கு மாகாணத்தில் பாடசாலை மாணவிகள் 10 பேர் பாலியல் வன் புணர்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர் என்று தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று இராஜாங்க கல்வி அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித் துள்ளார்.
பாடசாலைக்கு வெளியிலுள்ள சிலரால் இந்தப் பாலியல் வன்புணர்தல்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், இதில் பாடசாலைகளில் கற்பித்துக் கொடுக்கும் ஒருசில ஆசிரியர்களாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை கவலையை அளிப்பதாக அமைச்சர் கூறியுள்ளார்.
கடந்த இரண்டு வாரங்களில் இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவங்களில் 10 மாணவிகள் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அவர் கூறியுள்ளார். பக்.21

## பிரதமர் ரணிலுக்கு எதிரான பிரேரணை சாத்தியமற்றது

கொழும்பு, மே 31
தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றியே ஆகவேண்டும் என்ற முனைப்பில் எதிர்க்கட்சி யினர் காய்களை நகர்த்திவரும் நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேறுவதற்கான சாத்தியக் கூறுகள் அரிதாக காணப்படுகின்றன என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.
ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னமும் நம்பிக்கையுடனான புரிந்துணர்வைக் கொண்டுள்ளமையானது நாடாளுமன்றில் சிறுபான்மை பலத்தைக் கொண்டுள்ள பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவது சாத்தியமற்றது எனச் சுட்டிக்காட்டும் அரசியல் அவதானிகள், அத்தகைய சூழ்நிலை ஏற்படும் இடத்து ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து விடும் சாத்தியக் கூறுகளே அதிகமாக காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.
பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக உத்தேச யோசனை முன்வைக்கப்பட்டு நான்கு மணிநேரத்திற்குள்ளாகவே 60 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைச்சாத் பக்.21

## வற்றாப்பளைக்கு நாளை விசேட பஸ் சேவைகள்

*கிராம மக்களும் பஸ்களைக் கோர முடியும்*

யாழ்ப்பாணம், மே 31
வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், அடியார்கள் அங்கு சென்று வருவதற்காக விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
வடக்கிலுள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள 7 டிப்போக்களிலிருந்தும் இந்தப் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ். சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார்.
கிராமப் பகுதிகளிலிருந்து கோயிலுக்குச் செல்ல உள்ள அடியவர்கள் போக்குவரத்தை இலகுவாக்கும் வகையில் ஒரு குழுவில் 40 பேருக்கு மேல் இருப்பின் அருகிலுள்ள சாலைக்குச் சென்று கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் பக்.21

## புலிகளை நினைத்து அஞ்சுகிறார் மஹிந்த

கொழும்பு, மே 31
தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணையக் கூடுமென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அச்சம் வெளியிட்டுள்ளார்.



விடுதலைப் புலிகள் மீளவும் நாட்டில் பயங்கரவாதத்தில் ஈடு படக்கூடுமென அவர் தெரிவித்துள்ளார்.
நாட்டில் மீளவும் பயங்கரவாதம் தலைதூக்காது பக்.21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ஆவது திருத்தம் முஸ்லிம்களுக்கு பெரும் பாதிப்பு

## நான்கு முஸ்லிம் அமைப்புகள் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 31

அமைச்சரவையில் அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட 20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால், நாட்டில் வாழும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பாதியாகக் குறையும் என நான்கு முஸ்லிம் அமைப்புகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு தசாப்த காலத்தில் அனுபவித்த தேர்தல் மோசடிகளை நிறுத்தக் கூடிய தேர்தல் முறை சீர்த்திருத்தத்தை தாம் விரும்புவதாகவும்,எனினும் அப்படியான சீர்த் திருத்தம் நாட்டில் வாழும் சிறுபான்மைச் சமூகத்தின் நாடாளுமன்ற அங்கத்துவத்தில் பாரதூரமான பலவீனத்தை ஏற்படுத்தும் எனவும் இந்த அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

அகில இலங்கை முஸ்லிம் இளைஞர் முன்னணி, தேசிய சூரா பேரவை, இலங்கை முஸ்லிம் கவுன்சில் மற்றும் கண்டி ஒன்றியம் ஆகிய முஸ்லிம் அமைப்புகள் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.

புதிய தேர்தல் முறையின் கீழ் சிங்கள இனத்தவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும். அதேபோல், தமிழ், முஸ்லிம், மலே மற்றும் பறங்கியருக்கும் அப்படியான நியாயமான பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும் எனவும் மேற்படி அமைப்புகள் தெரிவித்துள்ளன.

20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்திலும் முஸ்லிம் சமூகம் தற்போது கொண்டிருக்கும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை அப்படியே பேண வேண்டும் என கோரி பல யோசனைகளையும் இந்த அமைப்புகள் முன்வைத்துள்ளன.

9 பல் தேசிய தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற யோசனையும் அதில் அடங்கும். மேலும் தொகுதிகளை வரையறுக்க நியமிக்கப்படும் குழுவில் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதித்துவம் கட்டாயம் இருக்க வேண்டும் எனவும் முஸ்லிம் அமைப்புகள் கோரியுள்ளன. (த)

# கட்சி தாவினால் பொதுத்தேர்தலில் இடம் இல்லை

## *மைத்திரி ரணில் இணக்கம்*

கொழும்பு, மே 31

தேர்தலில் போட்டியிடும் நோக்கில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளில் இருந்து அணி மாறும் எந்த அரசியல்வாதிக்கும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்குவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.

நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை ஆரம்பிக்கும் நோக்கில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதியும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமரும் இந்த இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக இணைந்து அமைத்த அரசின் மூலம் மக்களுக்குப் பெரிய பணிகளை செய்ய முடிந்துள்ளதாக இரண்டு கட்சிகளின் பேச்சாளர்கள் சிலர் கூறியுள்ளனர்.

இதனால், அணி மாறுவதற்கு இடமளித்தால், இந்த ஒத்துழைப்புக்குப் பங்கம் ஏற்படும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இரண்டு பிரதான அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பலர் கட்சி மாறுவதற்குத் தயாராக இருக்கின்றனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கட்சி தாவும் விடயம் தொடர்பில் அறிந்து கொண்டதை அடுத்து இரு கட்சிகளின் தலைவர்களும் இது குறித்து விரிவாக கலந்துரையாடிய பின்னர் மேற்படி இணக்கத்திற்கு வந்துள்ளனர். (த)

# சுதந்திரக் கட்சி பிளவுபட்டுள்ளது

## *கூறுகிறார் சந்திரிகா*

கொழும்பு, மே 31

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்போது இரண்டாகப் பிளவுபட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கண்டி, மேல்நாட்டு கலைச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள பிளவானது அந்தளவுக்குப் பாரதூரமானதல்ல எனவும் முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி மைத்திரி - சந்திரிகா மற்றும் மகிந்த ராஜபக்ஷ அணி என இரண்டாக பிளவுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என அவரது அணியினர் கட்சியின் தலைமைக்குப் பிற கட்சியினர் ஊடாக அழுத்தங்களை கொடுத்து வருகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் மகிந்தவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த முடியாது என்ற திட்டவட்டமான முடிவில் இருக்கின்றனர். (த)

# சு.க அமைப்பாளர் பதவிகளில் மாற்றம்

## மஹிந்தவின் ஆதரவாளரை களையெடுக்கும் மைத்திரி

கொழும்பு, மே 31

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்களை களையெடுக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆரம்பித்துள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் பதவிகள் சிலவற்றில் உடனடியான மாற்றங்களைச் செய்ய, அந்த கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாக கட்சியின் உட்தரப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

எதிர்வரும் பொதுத் தேர்தலை இலக்கு வைத்து குருணாகல், நுவரெலியா, அனுராதபுரம் ஆகிய மாவட்ட அமைப்பாளர்கள் பதவியில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரபல ஆதரவாளர்கள், அமைப்பாளர்களாக இருக்கும் தொகுதிகளின் அமைப்பாளர்களாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு ஆதரவானவர்களை நியமிக்க உள்ளதாகத் தெரியவருகிறது.

அடுத்த வாரத்துக்குள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுச் சபையை கூட்டி இந்த நியமனங்கள் தொடர்பான அனுமதிகளை பெற திட்டமிடப்பட்டுள்ளது. (த)

# எம்.பிக்கள் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு எதிர்ப்பு

கொழும்பு, மே 31

20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் ஊடாக 225 நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 255 ஆக அதிகரிக்க வேண்டும் என முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்குப் பல அரசியல் கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய தொழிலாளர் சங்கம் ஆகிய கட்சிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இதன் காரணமாக நேற்று முன்தினம் வரை 20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பில் அரசியல் கட்சிகளிடையே இணக்கப்பாட்டுக்கு வர முடியவில்லை.

20ஆவது திருத்தச் சட்டத்தில் இணங்க முடியாத விடயங்கள் குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான விசேட பிரதிநிதிகள் குழு கலந்துரையாடி அடுத்த வாரம் கட்சிகளின் இணக்கத்தை பெற்றுக்கொள்ள உள்ளதாக அரசின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். (த)

# ஹெல உறுமயவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

கொழும்பு, மே 31

ஹெல உறுமயவுக்கு எதிராக விரைவில் மக்களினால் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பிவித்துரு ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மக்களினால் கொண்டு வரப்படுகின்ற நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்வதற்கு தற்போது இருந்தே ஆயத்தமாக வேண்டும் என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

20 ஆம் திருத்தச் சட்டம் சமர்ப்பிப்பதைத் தடுக்கும் வகையில் செயற்படுவோர்க்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படும் என ஜாதிக ஹெல உறுமயவின் ஊடக பேச்சாளர் நிஷாந்த நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

அந்தக் கருத்தின் அடிப்படையில் உதய கம்மன்பில் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். (த)

# தேசிய நிறைவேற்றுச் சபையை கலைக்க கோருகிறது ஜே.வி.பி

தேசிய நிறைவேற்று சபையை கலைக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிவிக்கவுள்ளது.

புதிய அரசின் 100 நாள் திட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்காக தேசிய நிறைவேற்றுச் சபை நிறுவப்பட்டது.

தற்போது அதற்கான காலம் நிறைவடைந்து விட்டதாகவும், இதன் ஊடாக எதிர்பார்த்த பணிகள் பூர்த்தியடையாத காரணத்தினால் மேலும் இதனை நடத்திச் செல்வதில் அர்த்தம் இல்லை என மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் எதிர்வரும் வாரம் கடிதம் ஊடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிவிக்க தீர்மானித்துள்ள நிலையில், தேசிய நிறைவேற்றுச் சபையின் ஏனைய உறுப்பினர்களுக்கு இது சம்பந்தமாக விழிப்புணர்வு செய்வதற்கும் தீர்மானித்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.(த)

# கடற்படை அபகரித்த காணியை பார்வையிட்டார் சுவாமிநாதன்



மன்னார், மே 31

மன்னாருக்கு நேற்றுச் சனிக்கிழமை பயணம் மேற்கொண்ட அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட சிலாவத்துறை மற்றும் முள்ளிக்குளம் ஆகிய கிராமங்களுக்குச் சென்று மீள்குடியேறிய மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் வன்னி மாவட்ட அமைப்பாளருமான ஹுனைஸ் பாருக்கின் வேண்டுகோளுக்கு அமைவாக மீள்குடியேற்ற அமைச் சர் சுவாமிநாதன் நேற்றுச் சனிக்கிழமை சிலாவத்துறைக்குப் பயணம் செய்தார்.

மீள்குடியேற்றத்தில் முசலி மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் அந்தக் கிராமங் களில் நிலவும் குறைபாடுகள் பற்றி மக்களால் மீள்குடியேற்ற அமைச் சரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கிராம மக்கள் வீதி, வீட்டுத்திட்டம், குடிதண்ணீர் இன்மை, உள்ளக மின் இணைப்பு, மற்றும் போக்குவரத்து போன்ற முக்கிய தேவைகளை முன்வைத்தனர்.

மீள் குடியேற்றத்தில் முசலி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விசேட அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்து அதன் ஊடாக உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் மீள் குடியேற்ற அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் வேண்டுகோளுக்கமைவாக இடம்பெயர்ந்து வாழும் முள்ளிக்குளம் கிராம மக்களை அமைச்சர் சுவாமிநாதன் நேரடியாகச் சென்று பார்வையிட்டதோடு முள்ளிக்குளம் மக்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்திருந்தார்.

முள்ளிக்குளம் கிராமத்தில் மக்கள் வாழ்ந்த பகுதியைக் கடற்படையினர் ஆக்கிரமித்துள்ளதாகவும், அந்த மக்களின் தொழில் வாய்ப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இந்த நிலையில் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ஹுனைஸ் பாருக் ஆகியோர் கடற்படையினரால் அபகரிக்கப்பட்ட காணியை பார்வையிடுவதற்காக நேரடியாகக் கடற்படை முகாமுக்குச் சென்றிருந்தனர்.

எனினும் கடற்படை முகாமின் பிரதான நுழைவாயிலில் சுமார் 15 நிமிடங்கள் வரை தடுத்து நிறுத்தப்பட்டதன் பின்னரே அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். உள்ளே சென்ற அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாடசாலை, தேவாலயம் ஆகியவற்றை பார்வையிட்டனர். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஐ நிறைவேற்றாமல் நாடாளுமன்றத் தேர்தல்

## ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானம்

கொழும்பு, மே 31
புதிய தேர்தல் திருத்தங்கள் அடங்கிய 20ஆவது சீர்த்திருத்தச் சட்டம் தொடர்பில் கட்சிகளுக்கிடையில் கருத்து முரண்பாடுகள் தொடர்கின்றமையினால் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்திய பின்னர் அது தொடர்பில் மீள ஆராய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்படுமாயின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்காது இருப்பதற்கு அக்கட்சி தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதியதேர்தல்முறைஅடங்கிய20ஆவது திருத்தச் சட்டம் கடந்த 20ஆம் திகதி நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படவிருந்த நிலையில் ஆசன எண்ணிக்கை, தொகுதி எல்லைப் பிரச்சினை, தொகுதிகளின் எண்ணிக்கை மற்றும் சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பு போன்ற விடயங்களினால் அது நிறைவேற்றப்படுவதில் தாமதம் ஏற்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கு அமையவே 20 ஆவது திருத்தம் மேற் கொள்ளப்பட்டுள்ளமையினால் அதனை நிறைவேற்றுவதற்கு ஐ.தே.க. முட்டுக்கட்டையாக இருப்பதாக சு.க. உறுப்பினர்கள் பலர் குற்றஞ்சாட்டி வந்த நிலையில் இது தொடர்பில் ஆராய்வதற்கு 9 பேர் கொண்ட அமைச்சரவைக் குழு நியமிக்கப்பட்டது.

பின்னர் கடந்த புதன் கிழமை கூடிய அமைச் சரவையில் இந்தவிடயம் எடுத்துக்கொள்ளப்பட்டபோதும் பல முரண்பட்ட கருத்தக்கள் நிலவியதாக தெரிவிக்கப்டுகின்றது. இதன் போது அமைச்சர்களான ரவூப் ஹக்கீம் மற்றும் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கிடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்ட தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், நேற்றுமுன் தினம் சிறிகொத்தவில் இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பின்போதுஅமைச்சர் லக் ஸ்மன் கிரியெல்ல கருத்துத் தெரிவிக்கையில், 20 தொடர்பில் கட்சிகளுக்கிடையில் கருத்து முரண்பாடு தொடருமாயின் பொதுத் தேர்தலுக்கு உடனடியாகச் சென்று அதன் பின்னர் இந்தவிடயம் தொடர்பில் பேச்சு நடத்துவதே சிறந்தது—என்று கூறியுள்ளார்.

இந்தக் கருத்துக்கு ஐ.தே.க. உறுப்பினர்கள் பலர் உடன்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் ஜூன் 9ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சு.க. உறுப்பினர்களால் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அது கொண்டுவரப்படுமாயின் ஐ.தே.க. 20 இற்கு ஆதரவு வழங்காமல் இருப்பதற்குத்தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்ப டுகின்றது.

20 ஐ நிறைவேற்ற சு.க.வுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுகின்றமையினால் ஐ.தே.கவின் ஆதரவு அவசியமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## யாழ். நகர் ஆர்ப்பாட்டம்: மேலும் நான்கு பேர் கைது

கடந்த 20 ஆம் திகதி யாழ்.நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மேலும் நால்வரை நேற்று யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்

குறித்த நால்வரும் ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆர்ப்பாட்டத்தின்போது வங்கிகளுக்குள் அத்துமீறி நுழைந்து வங்கிச் செயற்பாடுகளுக்கு இடையூறு செய்தமை,வர்த்தக நிலைய உரிமையாளர்களை அச்சுறுத்தியமை, தனியார் கட்டடங்கள் மீது கல் வீசித் தாக்கியமை போன்ற குற்றங்களில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டே இவர்கள் நால்வரும் கைதாகியுள்ளதாகக் கூறப்பட்டது.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்காக தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி கமெராக்களின் பதிவுகளைப் பொலிஸார் பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

## ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

ஜப்பானில் நேற்றுச் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. 7.8 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கம் 678 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் கட்டடங்கள் குலுங்கிய தால் மக்கள் அலறி அடித்து வீடுகளையும், அலுவலகங்களையும் விட்டு வெளியேறி சாலையில் தஞ்சம் அடைந்துள்ளனர். ஜப்பானின் போனின் தீவை மையம்கொண்டு இந்தச் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை ஏதும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், மக்கள் பீதியில் உள்ளனர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விபரம் பற்றி உடனடி தகவல் ஏதும் வெளியாகவில்லை. (த)

# மியன்மாரில் கொல்லப்படுவது யாராக இருந்தாலும் எதிர்ப்போம்

## பௌத்த மதத்துக்கு சேறு பூசவே இலங்கையில் ஆர்ப்பாட்டம் என்கின்றது பொதுபலசேனா

கொழும்பு, மே 31
மியன்மார் மாத்திரமல்லாது உலகில் எங்கு மனிதர்கள் கொலை செய்யப்பட்டாலும் அதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஆனால், மியன்மாரில் இடம்பெறும் சம்பவத்துடன் பௌத்த மதத்தையும் பிக்குகளை கேவலப் படுத்தி எங்களை தீவிரவாதிகளாக சித்திரிப்பதற்காகவே இலங்கையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் டிலந்த விதானகே தெரிவித்தார்.

மியன்மாரில் முஸ்லிம்கள் கொலை செய்யப்படுவதாக இலங்கையில் குரல் கொடுப்போர் ஏன் மத்திய அரபு நாடுகளில் தீவிர வாதிகளால் அநியாயமாகத் தலைதுண்டிக்கப்படுவர்களுக்கு ஆதரவாகக் குரல்கொடுப்பதில்லை. அதனை ஆதரிப்பதனாலா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மியன்மாரில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் இடம் பெறுகின்றன என்றால் அதனை நாங்கள் மனிதர்கள் என்ற அடிப்படையில் எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம். இந்த விடயத்தை மனிதாபிமான அடிப்படையில் நோக்க வேண்டும். அவ்வாறு அனைவரும் நோக்கினால் மியன்மார் முஸ்லிம் மக்களுக்காக நாங்கள் வீதிகளில் இறங்கவும் தயாராக இருக்கின்றோம்.

ஈராக், சிரியா உள்ளிட்ட அரேபிய நாடுகளில் தலைதுண்டிக்கப்படும் அப்பாவி மக்களுக்காக ஏன் நீங்கள் குரல் கொடுப்பதில்லை? என அவர்களிடம் நாம் கேட்க விரும்புகின்றோம்.

அதேபோல அரபு நாடுகளுக்குச் சென்று முதலில் பிரசங்கங்கள் நிகழ்த்தி அங்கு அரங்கேறியுள்ள அநியாயங்களை நிறுத்த முயற்சியுங்கள் என்றும் கூறுகின்றோம் –என்றார். (த)

# மீனவர்களை ஒன்றிணைத்து சக்திப்படுத்தும் கூட்டங்கள்

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மே 31
வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ளும் வகையில் மீனவ மக்களை ஒன்றிணைத்து அவர்களைச் சக்திப்படுத்தும் பொருட்டு அதன் பிரகாரம் மாவட்டம் தோறும் பொதுவான கூட்டங்களை, கிராம மட்டத்திலான சந்திப்புக்களை முன்னெடுப்பது என்று தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் என்.இன்பம் தெரிவித்தார்.

வடமாகாணக் கடற்றொழிலாளர் இணையத்தின் மாதாந்தக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. அதில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இந்திய இலங்கை மீனவர்களின் தற்போதைய நிலவரங்கள், மாவட்ட மட்டத்தில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தெற்கு மீனவர்களின் அத்துமீறிய அதிகரித்த வருகை, மானியங்களால் மீனவர்கள் அடைந்த நன்மைகள் குறித்தும் மேலும் பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளன.

அதன்போதே வடபகுதி மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சியாகக் கொண்டு வடமாகாண சபை முதலமைச்சருக்கு மனுக் கொடுத்துக் கலந்துரையாடல் நடத்துவது என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது. (த–4)

# சட்ட ஆணைக்குழுவுக்கு புதிதாக 14 உறுப்பினர்கள்

கொழும்பு, மே 31
சட்ட ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனங்களை நேற்று ஜனாதிபதி வழங்கியுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி அதன் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 14 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதி பதி செயலாளர் பீ.பி.அபயக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான பாலித்த பெர்னாண்டோ, எஸ்.அனில் சில்வா, மனோஹார டி சில்வா, பேராசிரியர் ஹர்ஷ கப்ரால், இக்ரம் மொஹமட், சஞ்ஜீவ பிரனீத் ஜயவர்த்தன ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

அத்துடன் சட்டத்தரணிகளான பேராசிரியர் லக் ஸ்மன் மாரசிங்க, தாரணி எஸ்.விஜயதிலக, பேராசிரியர் காமினா குணரத்ன, எம்.சுவாமிநாதன், என்.செல்வக்குமாரன், நவீன் சுரத் மாரப்பன, திசாத் விஜயகுணவர்த்தன, ஜீ.ஜீ.அருள்பிரகாசம் ஆகியோரும் பெயரிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை 2015ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஐந்து ஆண்டு காலப்பகுதி வரை குறித்த சட்ட ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# இலங்கை இளைஞருக்கு திருச்சியில் 1 வருடச் சிறை

கொழும்பு, மே 31
போலி கடவுச்சீட்டின் ஊடாக இலங்கைக்குச் செல்ல முயற்சித்தவருக்குத் திருச்சி நீதிமன்றம் ஒருவருடச் சிறை தண்டனை விதித்துள்ளது. கண்டியைச் சேர்ந்த 32 வயதுடைய ஹசன்முகமது என்பவருக்கே இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த 2012 ஜனவரி மாதம் இலங்கைக்குச் செல்ல, திருச்சி விமான நிலையத்துக்குச் சென்ற போது அவரது கடவுச்சீட்டை விமான நிலைய அதிகாரிகள் சோதனையிட்டவேளை அது போலி கடவுச்சீட்டு என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து, ஹசன் முகமதுவை, திருச்சி விமான நிலைய பொலிஸார் கைது செய்து, முகாம் சிறையில் அடைத்துப் பின்னர் பிணையில் விடுவித்தனர். பிணையில் வெளி வந்த முகமது திருவனந்தபுரம் விமான நிலையத்தில் இருந்து வெளி நாட்டுக்குத் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளார்.

இதன்போது அவரைக் கைது செய்த, கேரளா மாநில காவற்றுறையினர் திருச்சி முகாம் சிறையில் மீண்டும் அடைத்தனர்.

இந்நிலையில், ஹசன் முகமது போலி கடவுச்சீட்டின் மூலம் இலங்கைக்குத் தப்பிச் சென்றமை குறித்த வழக்கு, திருச்சி ஜே.எம்., 6 வது நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

வழக்கு விசாரணை மேற்கொண்ட நீதிபதி சரண்யா, சந்தேகநபருக்கு ஒரு வருடச் சிறை தண்டனை மற்றும், 11 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார். (த)

# விசாரணைகளில் சிக்கினார் முன்னாள் பிரதமர் ஜயரத்ன

கொழும்பு, மே 31
நாட்டிற்குள் சர்ச்சைக்குரிய வகையில் இரு போதைப் பொருள் கொள்கலன்கள் கொண்டுவரப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் முன்னாள் பிரதமர் தி.மு.ஜயரத்ன, அவரது மனைவி மற்றும் மகன் அனுராத ஜயரத்னவிடம் எதிர்வரும் நாள்களில் விசாரணை மேற்கொள்ளவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த அரசில் 261 கிலோ கிராம் எடையுடைய போதைப் பொருள் அடங்கிய இரு கொள்கலன்கள் முன்னாள் பிரதமரின் கடிதத்துடன் சுங்கப் பிரிவினரிடமிருந்து மீட்டுக் கொள்ள முயற்சித்த சம்பவம் தொடர்பில் இவ்வாறு விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

முன்னாள் பிரதமரின் செயலாளர் ஒருவர் ஊடாக இக்கடிதம் வெளியிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த மத்திய மாகாண சபை தேர்தலின்போது பிளாஸ்ரிக் பொருள் என கூறி இந்தக் கொள்கலன்கள் இரண்டும் பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

மத்திய மாகாண உள்ளூராட்சி சபையினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர் ஒருவரும் இதனுடன் தொடர்பு கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. (த)

# அரசியல் மேடையாக பௌத்த விகாரைகள்

## அனுரகுமார சாடல்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பௌத்த விஹாரைகளை அரசியல் மேடையாக்கி வருவதாக ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தங்காலையில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ ஐயா தற்போது விகாரைகள் நோக்கி அரசியலை நகர்த்தி வருகின்றார். எமக்குத் தெரியும் விஹாரைகள் அரசியல் பேதமற்ற ஓர் பொது இடமாகும். அனைவரும் விஹாரையின் பீடாதிபதியிடம் சென்று கட்சி பேதமின்றி ஆலோசனை பெற்றுக்கொள்வர். அனைவரும் அதே விஹாரையிலேயே போதி பூசை வழிபாடுகளைச் செய்வார்கள்.

எனினும் இன்று ராஜபக்ஷ என்ன செய்து வருகின்றார்? நாட்டின் அரசியலை மிகவும் அழுக்கான ஓர் நிலைக்கு இட்டுச்செல்கின்றார்.

பௌத்த விஹாரையில் போதனை செய்யும் மடுவத்தை மஹிந்த அரசியல் மடுவமாக மாற்றியுள்ளார். மஹிந்தவின் இந்த நடவடிக்கைகளுக்கு நாட்டின் அனைத்து மக்களும் எதிர்ப்பை வெளியிட வேண்டுமென அனுரகுமார திஸாநாயக்க கோரியுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



**விநாசித்தம்பி கனகநாயகம்**
(பிரபல வர்த்தகர்-காலி)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி கனகநாயகம் 26.05.2015 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் நாமும் மிகுந்த துயர் அடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வி. ஞானபண்டிதர்
(சகோதரன்) குடும்பம்
(கட்டுடை).

# மரண அறிவித்தல்கள்

## அருளானந்தம்செந்தில்குமரானந்தா
(ஆசிரியர், ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை)



திருநெல்வேலி, தாளையடியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கு, ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் செந்தில்குமரானந்தா கடந்த 29.05.2015 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கவிதா (ஆசிரியை, சுன்னாகம் மயிலணி சைவமகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், மதுமிதா, வேணுமிதன், அனுமி தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், கனகலிங்கம் - வசந்தி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தவானந்தன், விவேகானந்தா மற்றும் சதானந்தா (சொக்கா -ஜேர்மனி), ரேவதி (லண்டன்), சண்முகானந்தா (அப் பன் - லண்டன்), பரமவேலானந்தா (லிக்கா- லண்டன்), சிவறஜனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வரதலட்சமி (திருநெல்வேலி), மகாலட்சுமி (இணுவில்), பாமினி (ஜேர்மனி), சிவலோகன் (கண் ணன்-லண்டன்), துஸ்யந்தி (லண்டன்), பேன் (லண்டன்), சீவரத்தினம் (ஜேர்மனி), சுஜேந்திரன் (சாரதி வடமாகாண கூட்டுறவு திணைக்களம்), அனிதா, திவ்வீகன் (மது மோட்டோர்ஸ்- உரும் பிராய்), சுரேந்திரன் (ஆசிரியர், யா/மத்திய கல்லூரி), சுஜானன் ஆகி யோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மதவடி,
ஏழாலை தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## சின்னர் கந்தையா



சோரண் பற்று, பளையைப் பிறப்பிடமாகவும் மருதங்கேணி தெற்கை வசிப்பிடமாகவும், தற்போது அனிஞ்சியன்குளம் மல்லாவியில் வசித்தவருமாகிய சின்னர் கந்தையா நேற்று முன்தினம் (29.05.2015) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர்-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்துரை - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், செல்லாச்சியின் அன்புக் கணவரும், பொன்னையா, கணபதிப்பிள்ளை, சின்னையா, ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கனகரத் தினம் மற்றும் சரஸ்வதி, சபாரத்தினம், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சிவஞானம், அன்னபூரணம், புவனேஸ்வரி, பரமசிங்கம், செல்வதி, மனோ கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பஞானதேவி, தேவராசபிள்ளை, பொன்னம்மா, ஜெயராணி, காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், ஜேமிஸ் தங்கராசா மற்றும் மோகனாம்பிகை, திருஞானசம்பந்தர், தவமலர் ஆகியோரின் மாமனும், ஜெயஸ்ரீ, தவகணேஸ், மயூரன், தாட்சாயினி, காலஞ் சென்ற மயூரேசன் மற்றும் மயூரதன், பார்த்தீபன், காயத்திரி, கஸ்தூரி, கயல்விழி, காண்டீபன், கல்யாணி, கௌசல்யா, கௌதமன், தர்சினி, அன்சுமன், கஜேந்தினி, அரவிந்தன், அசோதனன், றொசான், றொசானி, காலஞ்சென்ற றொமானி மற்றும் சுகந்தினி, நிசாந்தினி, அனந் தினி, காலஞ்சென்ற கஜனி மற்றும் நிலானி, நிதர்சன், நிறோஜினி, ஆரணி, மகிரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2015) ஞாயிற்றுக்கிழமை அனிஞ்சியன்குளம் மல்லாவியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் அனிஞ்சியன்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அனிஞ்சியன் குளம்,
மல்லாவி.

தகவல்: குடும்பத்தினர்.
077 0828903

# 20 திருத்தச் சட்டத்தை எதிர்ப்போருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

*கோருகிறது ஹெல உறுமய*

கொழும்பு, மே 31

20ம் திருத்தச் சட்டத்தை எதிர்ப்பவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த சிறிவர்னசிங்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் அமைந்துள்ள கட்சிக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

புதிய தேர்தல் முறைமை ஒன்றை அறிமுகம் செய்யும் 20ஆம் திருத்தச் சட்டத்திற்கு தடை ஏற்படுத்தி, மக்களின் நம்பிக்கையைச் சிதைக்கும் அரசியல் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படும்.

20ஆம் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கப்படுகின்றது.

இவ்வாறான ஓர் நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட கூட்டமைப்பு 20ஆம் திருத்தச் சட்டத்திற்கு முன்னதாக, நம்பிக்கையில்லாத்தீர்மானத்தைக்கொண்டு வர முயற்சிக்கின்றது.

இதுவும் ஓர் வகையில் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த விடாது மேற்கொள்ளும் முயற்சியாகும்.

அமைச்சரவைக் கூட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 20ம் திருத்தச் சட்டத்தை எதிர்த்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

20ஆம் திருத்தச் சட்டம் குறித்து முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் பகிரங்க விவாதம் நடத்த தயார் என வர்னசிங்க தெரிவித்துள்ளார். (த)

**அக்ஷயா**

* அழகுக்கலைப் பயிற்சிகள் நடைபெறுகின்றன. * சாதிவுளவுஸ் 6, பஞ்சாபி 4 மற்றும் பாட்டி புறோக் 4 பயிற்சிகள், * கறுப்பு பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட பருக்கள் கடும்கறை, கரும்புள்ளிகள், அகற்றும் கிறீம் விற்பனைக்குண்டு. , * கண் கருவளையம், உதட்டு கறுப்புஅகற்றும் கிறீம், * உடல் எடை கூட்டும் , குறைக்கும் பால்மா, குளிகை, டொனிக் * ஒட்டிய கன்னங்களைகுண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிகை * தலைமுடி வளரச் செய்யும், ஆயுர் வேத எண்ணெய், உடல், கழுத்து, கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு., பேசியல், அயனிங், கிளிநப் செய்து கொள்ளலாம்.

அக்ஷயா
22, நாவலர் றோட் (ஸ்டான்லி றோட் அருள் கொலிஜ் கோண் அருகில்) யாழ். 0772106155

## பிராமணக் குருக்கள் தேவை

பருத்தித்துறை, கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்துக்கு நித்திய பூஜைகள் செய்வதற்கு பிராமணக் குருக்கள் தேவை.

தொடர்பு: தர்மகர்த்தா ஏ.சந்திரமூர்த்தி } 077 417 3180, 021 226 0052

நிர்வாகம் சி.தீபானந்தன் } 077 652 0315

(59727) (45.3.6)

# மரண அறிவித்தல்

## திருமதி பவளம் பாலசிங்கம்



"செந்தில்பதி", பொலிகண்டி, வல்வெட்டித் துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி பவளம் பாலசிங்கம் நேற்று (30.05.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிக்குட்டி-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான அரியாலையூர் கந்தையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஆசிரியர் கலாபூஷணம் வே.க.பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பா.பிரபாகரன் (நூலகர், சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை) மற்றும் திருமதி பிரபாரஞ்சினி புவனேந்திரன், காலஞ்சென்ற பிரபாரஞ்சன் ஆகியோரின் அன்புத் தாயும், திருமதி பிரபாகரன் நகுலமாலா (சுவிஸ்), தம்பையா புவனேந்திரன் (இலங்கை வங்கி தலைமைக் காரியாலயம்-கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும், பிரணவன் (முகாமையாளர் Smart Whells நிறுனம் மற்றும் இயக்குநர் கங்கா அன் பிரதர்ஸ் விருந்தினர் விடுதி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.), பானுப்பிரியன் (LLB சட்டத்துறை மாணவன் மற்றும் Union Assurance யாழ். கிளை), சாகித்தியா (மாணவி-யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்), அபிகேஷ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பாட்டியும், நாகரத்தினம், அசுவதி, காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை-பாக்கியம் தம்பு-பதுமை, வேலுப்பிள்ளை-ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2015) ஞாயிற்றுக்கிழமை செந்தில்பதி, பொலிகண்டி, வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"செந்தில்பதி"
பொலிகண்டி, வல்வெட்டித்துறை

(6034) (10.3)

தகவல்: த.புவனேந்திரன்
(மருமகன்)

# மரண அறிவித்தல்

## திருமதி நாகேஸ்வரி சதாசிவம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.127/10, கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி சதாசிவம் (29.05.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சதாசிவத்தின் (ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகஸ்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா-நாகேந்திரம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், மகேஸ்வரன், காலஞ்சென்ற ஜெயலட்சுமி மற்றும் லோகேஸ்வரன், காலஞ்சென்ற தமிழரசுவரன் (அர்ச்சுனா) மற்றும் சத்தியவாகேஸ்வரன், மங்களேஸ்வரன், திருக்கேஸ்வரன், திலகலெட்சுமி, காலஞ்சென்ற நவலெட்சுமி (மதுரி) ஆகியோரின் பாசமிகு தாயும், சித்ரா, சரஸ்வதி, இலக்னேஸ்வரி, குகநந்தினி, சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயலட்சுமி, அர்ச்சுனா, கஸ்தூரி, சுகந்தன், பிரியந்தன், மயூரதன், கார்த்திகன், கபிலன், அர்ச்சனா, கீர்த்தனா, விஷ்ணா, அபிராமினி, மதுரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், மகேஸ்வரி, கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இல.127/10, கோயில் வீதியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.127/10, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(6039) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# சரத் பொன்சேகாவுக்கு உருத்திரகுமாரன் சவால்

கொழும்பு, மே 31

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இலங்கை இராணுவத்தின் குற்றமிழைக்காத செயற்பாட்டை நிரூபிக்க வேண்டுமானால், சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு உடன்பட வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் சவால் விடுத்துள்ளார்

த காடியன் செய்தித்தாளுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில், தமிழ் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை மற்றும் தமிழர்கள் கொல்லப்பட்டமையை சரத் பொன்சேகா மறுத்திருந்தார்.

போர்க்குற்ற விசாரணை ஒன்று வரும் போ தமது இராணுவத்தின் உண்மைத்தன்மையை நிரூபிக்கப்போவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள உருத்திரகுமாரன், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் ராட் அல் ஹுசைன் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில், இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்களின் விபரமும் அதற்கான நீதிப்பரிந்துரைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இதன்போது சரத் பொன்சேகா முன்வந்து தமது பதிலை வழங்க வேண்டும் என்று உருத்திரகுமாரன் கேட்டுள்ளார்.

இதேவேளை இறுதிப்போரின் போது பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால, போர்க்குற்ற சர்வதேச விசாரணை தொடர்பில் எவ்வாறு நியாயப்படுத்தவுள்ளார் என்பதையும் வெளிப்படுத்த வேண்டும் என்றும் உருத்திரகுமாரன் கோரிக்கை விடுத்துள்ளார். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாகூர் மைதானத்துக்கு அருகே தற்கொலைக் குண்டுத் தாக்குதல்

## பாகிஸ்தான்– சிம்பாப்வே ஆட்டம் நடந்தவேளை பொலிஸ் அதிகாரி உட்பட 2 பேர் உயிரிழப்பு

லாகூர், மே 31

லாகூர் கடாபி மைதானத்தில் பாகிஸ்தான்– சிம்பாப்வே அணிகளுக்கு இடையே நடந்த கிரிக்கெட் போட்டியின்போது மைதானத்துக்கருகே நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் பொலிஸ் அதிகாரி உட்பட 2 பேர் உயிரிழந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தானின் லாகூர் நகரில் உள்ள கடாபி கிரிக்கெட் மைதானம் அருகே நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு தற்கொலைப்படை தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்த போது மைதானத்தில் பாகிஸ்தான் – சிம்பாப்வே அணிகளுக்கு இடையேயான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடைபெற்று கொண்டிருந்ததால் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது.

சரியாக 9 மணியளவில் கல்மா சவுக் என்ற இடத்திலிருந்து ஓட்டோவில் வந்த நபர், தான் அணிந்திருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்ததாக முதற்கட்டத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டுவெடிப்பில் காயமடைந்த 4 பேர் அருகே உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்று அனுமதிக்கப்பட்டனர்.

குண்டுவெடிப்பு நடந்த சில நிமிடங்களில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, குண்டுவெடிப்பு நடக்கவில்லை என்றும் மின்மாற்றி வெடித்ததாகவும் தனது அறிக்கையில் குறிப்பிட்டது.

அதேபோல, பொலிஸாரும் குண்டு வெடிப்பு நடந்ததை இரவு வரை உறுதிப்படுத்தவில்லை. ஓட்டோவிலிருந்த காஸ் சிலிண்டர் வெடித்ததாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் இறுதியாக, குண்டுவெடிப்பு நடந்ததை பாகிஸ்தான் அரசு செய்தித் தொடர்பாளர் பர்வேஸ் ரஷீத் உறுதி செய்தார். 'தற்கொலைப் படைத் தாக்குதல் முறியடிக்கப்பட்டது. தாக்குதலை தடுத்து நிறுத்த முயன்றதில் பொலிஸார் உட்பட இருவர் உயிரிழந்தனர். மைதானத்துக்குள் 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இருந்தனர். குண்டு வெடிப்பால் அங்கு மிகப் பெரிய பதற்றம் ஏற்பட்டிருக்கும். ஆனால் அதனை பாகிஸ்தான் ஒளிபரப்புச் சங்கம் சரியாக கையாண்டது' என்றார்.

முதலில், பாகிஸ்தான் ஒளிபரப்பு சங்கம் சிலிண்டர் விபத்து ஏற்பட்டதாகச் செய்தி வெளியிட்டு பின்னர் தற்கொலைப் படைத் தாக்குதல் நடந்ததை உறுதி செய்தது. இதனால் மைதானத்தில் ஏற்பட இருந்த பதற்றம் தவிர்க்கப்பட்டது. (த)

## வீதி அபிவிருத்தியிலும் மஹிந்த பெரும் ஊழல்

கொழும்பு, மே 31

வீதி அபிவிருத்திகளுக்காக கிடைத்த பணத்தை மஹிந்த ராஜபக்ஷ வேறு தேவைகளுக்காக பயன்படுத்தியதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்

நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அமைச்சராகப் பணியாற்றிய மஹிந்த ராஜபக்ஷ தாம் வகித்த ஏனைய அமைச்சு பதவிகளுக்குப் பணத்தை மாற்றியுள்ளமை தெரியவந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

55ஆயிரம் மில்லியன் ரூபா நிதியமைச்சில் இருந்து கடனாகப் பெற்றபோதும் அதில் 28 ஆயிரம் மில்லியன் ரூபா வேறு தேவைகளுக்காக மஹிந்த ராஜபக்ஷவினால் ஒதுக்கப்பட்டுள்ளன என பிரதமர் ரணில் தெரிவித்தார். (த)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னம்மா சிவகுரு



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் அல்லாரை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சிவகுரு நேற்று (30.05.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவகுருவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பிஐயா-இராசபூபதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விநாசித்தம்பி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சியாமளா, (சேவாலங்கா, யாழ்ப்பாணம்) அன்பழகன் ஆகியோரின் அன்புத் தாயும், தவராசசிங்கத்தின் (யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்) அன்பு மாமியும், நாராயணபிள்ளை, நாகபூரணம், திருநாவுக்காசு, சந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்லமுத்து, சின்னத்துரை, அரசரத்தினம், பராசக்தி இராசம்மா ஆகியோரின் மைத்துனியும், டசிதன், ஆருசன் ஆகியோரரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (31.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

அல்லாரை தெற்கு, மீசாலை. (C/16417) (10.3)

## திருமதி தங்கரெத்தினம் (பேபி) இரவீந்திரன்



யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கரெத்தினம் இரவீந்திரன் 28.05.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தையல்முத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவஞானபோதம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இரவீந்திரன் (ஸ்ரீ பார்வதி அச்சக முன்னாள் உரிமையாளர் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், கணேஸ் (றமேஷ்), ரதிகா (ரதி), சசிகா (சசி), சதீஷ், சுகன்யா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற தனலெட்சுமி மற்றும் நாகலோசனி அம்மா, மகாலெட்சுமி , பரமநாதன், காலஞ்சென்றவர்களான பாக்கியம், செல்லம்மா, இராசம்மா, இராசதுரை, நடராஜா, சிவலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், லோகா, பிரதாபன் (கண்ணன்), சிவகுமார் (சிவா), ஜெயகிறிஸ்ரி (ரவி) ஆகியோரின் அன்பு மாமியும், ரமணி, மனோகரன், காலஞ்சென்றவர்களான சோமபாலன், விசுவலிங்கம் மற்றும் சண்முகராஜா (சந்திரா), நாகலிங்கம், வரதாம்பிகை (சந்திரா), ஆன்,பிறேமலதா (லதா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2015) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்திவிநாயகர் கோயில் வீதி, அரியாலை,யாழ்ப்பாணம்.

தகவல்: சகோதரி, ச. மகாலெட்சுமி, (60310) (45.3.7)

## சீனிவாசகம் பாலச்சந்திரன்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் சிலம்புப்புளியடி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் பாலச்சந்திரன் (அப்பு மாமா) நேற்று (30.05. 2015) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், வசந்தாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, இராசரத்தினம், முருகையா, செல்வரத்தினம், கனகசுந்தரம் மற்றும் கணேசன், சிவனேசம், நாகலட்சுமி, சிவமணி (வேவி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வாசுதேவனின் (குசேலன்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அவரது வதிவிடத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிலம்புப்புளியடி, சங்கானை. (60326) (10.3)

தகவல்: குடும்பத்தினர். மனைவி-வசந்தா.

## செல்லையா சந்துருகாந்தன் (சந்துரு)

(யாழ்ப்பாணம் மகாஜன, ஸ்கந்தா கல்லூரிகளின் பழைய மாணவனும், உதைபந்து வீரரும்)



யாழ்ப்பாணம், அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் தற்போது லண்டன் Birmingham ஐ நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சந்துருகாந்தன் (21.05.2015) வியாழக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும் சிவக் கொழுந்து தம்பதியரின் பாசமிகு மகனும், சாந்தினியின் அன்புக் கணவரும், கபேன், நிறோயினி, கபைரதன், கனிஷ்டன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரி யைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

65, Rose bury Road,
Smethwick, Birmingham.
044 744 791 8645,
044 745 590 1511

தகவல்: கபேன் (மகன்)

# மரண அறிவித்தல்

## திருமதி தர்மாவதி சிவசிவா



அல்வாய் மேற்கு, திக்கத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தர்மாவதி சிவசிவா 27.05. 2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லாச்சி தம்பதியினரின் அன்புமகளும் சிவசிவாவின் (முன்னாள் பிரபல வர்த்தகர் சிவாமாளிகை, கல்முனை) அன்பு மனைவியும் சாந்தகுமாரி (தலைவர் மனிதவள முகாமைத்துவமுறை,யாழ்பல்கலைக் கழகம்) சிவகுமாரி (சுவிஸ்) திருவாதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் A.M.C மகேந்திரன் (அதிபர், யாழ்/சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை) உதயகுமார் (சுவிஸ்) சாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் சஞ்ஜீவன் (யா/இந்துக்கல்லூரி) அட்சயா (வேம்படி மகளிர் கல்லூரி) துவாரகா (சுவிஸ்) துளசிகா(சுவிஸ்) ஜனன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்) விதுஷன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்) தனுஷன் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்) விதுஷிகா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரபாடசாலை) யதுஷன்(திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம் )ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரியின் (ஆசிரியை) அன்புச்சகோதரியும் திருமதி இந்திரகுமாரி (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்பு சிறிய தாயாரும் ஜனனி (அவுஸ்திரேலியா) பைரவி (அவுஸ்திரேலியா) பைரஜன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சின்னம்மாவும், ஸ்ரீநிகா (அவுஸ்தி ரேலியா)வின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2015) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டதெனி
அல்வாய் மேற்கு, திக்கம்.
077 935 2396

தகவல்: A.M.C மகேந்திரன்

# மரண அறிவித்தல்

## விநாசித்தம்பி கனகநாயகம் (காலி வர்த்தகர்)



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி கனகநாயகம் 26.05. 2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி-யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-லில்லிமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இந்திரசேனாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி, ஞானபண்டிதர் மற்றும் மங்கையர்க்கரசி, மகேஸ்வரி(பிரான்ஸ்), மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், தெய்வேந்திரம் மற்றும் செல்வராணி, சிவஞானம் (பிரான்ஸ்), தர்மராசா, சுந்தரலிங்கம் (லண்டன்), சண்முகலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், சங்கு வேலி அ.த.க. பாடசாலை) சிவநேசலிங்கம் (பிரான்ஸ்), தேவசேனா (பிரான்ஸ்), விஜயசேனா (பிரான்ஸ்), அமிர்தலிங்கம் (பிரான்ஸ்), பதும சேனா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான உருத்திராங்கதன், சுந்தரலிங்கம் மற்றும் அருள்நேசன் (பிரான்ஸ்), மண்டலநாயகி (லண்டன்), சந்திராதேவி, பாமதி (பிரான்ஸ), யோகேஸ் வரி (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"துரைமலர் பொய்கை"
இணுவில், தொ.பே:- 021 224 1575

தகவல்: குடும்பத்தினர்.

உதயன் advt@uthayan.com 021 567 1111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புகையிலைப் பொருள்களின் பாவனையைக் கீழிறக்க.......

புகையிலையால் கவரப்பட்டு, விட்டில் பூச்சிகள் போன்று அதனிடம் சரணாகதி அடைந்து, எம்மத்தியில் மடிந்து போகும், மடிந்து கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தை என்ன செய்யப் போகின்றோம்.....??

புகையிலை ஓர் உயிர்க்கொல்லி. மனிதனின் ஆரோக்கியத்தையும் ஆளுமையையும் ஆட்டம் காணச்செய்து, அவனை அழித்துவிடும் ஓர் (வகை) ஆயுதம்.

இவற்றை எல்லாம் அறிந்திருந்தும், உலகளாவிய ரீதியில் ஆண்டு ஒன்றுக்கு அறுபது லட்சம் பேர் புகையிலைப் பாவனையின் தாக்கத்தால் உயிரிழந்து கொண்டிருக்கின்றனர்.

ஒரு காலத்தில், கல்வி, கலை, கலாசாரத்திலும், நற்பண்புகளிலும், வீரத்திலும் பெயர் பெற்றிருந்த எங்கள் சமூகம், இப்போது தவறான திசையை நோக்கிச் செல்லத் தலைப்படுகிறதோ என்ற ஏக்கம், உயர்ந்து, எழுந்து நிற்கின்றது என்று நினைக்க வைக்கிறது.

மேற்கண்ட கருத்துக்களை, மனம் மிக நொந்து வெளியிட்டிருக்கிறார் பொது மருத்துவ நிபுணர் சி.சிவன்சுதன்.

புகைக்கும் ஒவ்வொரு சிகரெட்டாலும், மனிதனின் வாழ்நாளில் பன்னிரண்டு நிமிடங்கள் கரைக்கப்படுகின்றன -- குடிக்கப்படுகின்றன -- என்று கணிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் கவலை தோய்ந்த கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

மேற்போந்த கருத்துக்களை, அனைத்துலக புகையிலைப் பாவனை நாளை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற, விழிப்புணர்வு நிகழ்வில் வைத்து மருத்துவ நிபுணர் வெளிக் கொணர்ந்தார்.

உலக சுகாதார நிறுவனம், புகையிலைப் பாவனைக்கு எதிரான நாளாக, மே மாதம் முப்பத்தோராம் திகதியைப் பிரகடனம் செய்துள்ளது. அது சந்தர்ப்பவசமாக இன்றைய தினமாக அமைகிறது.

அதனையொட்டி, இன்று முதல் ஜூன் ஆறாம் திகதி வரையான ஏழு நாள்களை, இலங்கை அரசு புகையிலைத் தவிர்ப்பு வாரமாக அறிவித்துள்ளது.

இந்தத் தருணத்தில், உலகளாவிய மட்டத்தில் பயன்படுத்தப்படும் சிகரெட் வகைகளில், பத்தில் ஒரு பங்கு சட்ட விரோதமான தயாரிப்புகள் என்றும் --

அவை, குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் சிறுவர்களிடையே (சட்ட விரோதமாக) விற்பனை செய்யப்படுவதாகவும் -- உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது; தகவல் வெளியிட்டுள்ளது.

மறுபுறத்தில் --

உலகளாவிய மட்டத்தில், வருடாந்தம் அறுபது லட்சம் மக்களின் மரணத்துக்கு, புகையிலைப் பாவனை மூலகாரணமாக அமைவதாக, உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்தோடு, இன்னும் பதினைந்து வருடங்களில் -- 2030 இல் -- புகையிலைப் பாவனையால் எண்பது லட்சம் மக்களுக்கும் அதிகமானோர் உயிரிழக்க நேரிடும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மற்றொரு தகவல்: குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் மட்டும் எண்பது சதவீதமான மக்கள் புகையிலை மற்றும் புகையிலைப் பொருள்களை பயன்படுத்துவதாகவும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

சட்ட விரோதமாகத் தயாரிக்கப்படும், உற்பத்தி செய்யப்படும், புகையிலைப் பொருள்கள் குறைந்த விலைகளில் விற்பனையாவதால், அவற்றின் பாவனையாளர்களின் எண்ணிக்கை விரைந்து, கிடுகிடுவென உயர்வதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது; கண்டறியப்பட்டுள்ளது.

புகையிலைப் பொருள்களின் பாவனையால் உண்டாகும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கு, தடுப்பதற்குத் திட்டங்கள் தீட்டுவதால் மட்டும் அதன் பாவனையைச் செயலளவில் கீழே இறக்க முடியாது.

அந்தச் செடியின் உற்பத்தியைக் குறைத்து, அதற்குப் பதிலாக, மக்களின் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதும் ஊட்டச்சத்துக்கள் மிகுந்தவையுமான தானியவகைகளின் செய்கைக்கு, அரசு ஊக்கம் அளிக்க வேண்டும். அதற்குத் துணிச்சல் நிறைந்த, மக்கள் நலன்நாடி முழு அளவில் செயற்படும் அரசு தேவை. அதுவே இன்றி அமையாததும் ஆகும். இன்றைய அரசிடமிருந்து ஓர் அங்குல மேனும் அதனை எதிர்பார்க்கலாமா......?!

# தேர்தல் முறைமையில் மாற்றம் அவசரத்தின் பின்னணி என்ன?

எஸ்.அஷ்ரப்கான்

புதிய ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது 20ஆவது திருத்தத்திற்கான புதிய தேர்தல்முறைமையின் பரிந்துரைப்புகள் குறித்து ஆராயப்படுகின்றன. குறுகியகால இந்தச் செயற்பாடுகளுக்கும் அரசியல் அரங்கில் பலத்த எதிர்ப்பு நிலவி வருகிறது. இதன் பிரதிபலிப்பு அண்மைய நாடாளுமன்ற அமர்வுகளில் கூச்சல், குழப்பம் பிரச்சினை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தரப்பிற்கும் ஆளும் தரப்பினராகிய தற்போதைய அரசிற்கும் இடையில் பாரிய பனிப்போர் இடம்பெற்று வருகிறது.

தேர்தல் முறைமை மாற்றம் என்பது பாரிய அநியாயத்தை அல்லது சிறுபான்மையினரை ஒதுக்கிவைக்கின்ற நிலையை ஏற்படுத்தும் என்று சிறுபான்மைக்கட்சிகள் தங்கள் நியாயங்களை முன்வைக்கின்ற நிலையில், தமிழர்சார் தனிப்பெரும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுபற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

இந்நிலையில், முஸ்லிம்களின் நிலைப்பாடு பற்றிப் பார்க்கும்போது, முஸ்லிம்களுக்கு அப்போதைய ஜனாதிபதி மஹிந்தவின் அரசு பிழையான நடவடிக்கைகள், அநியாயங்கள், உரிமை மறுப்புகள் ஊடாக பல்வேறு இடையூறுகளை இழைத்து வந்தது. ஆனால், புதிய ஆட்சியிலும் சிறுபான்மையினருக்கான இக்கட்டான விடயங்கள் வெளிப்படத் தொடங்கியுள்ளன. உண்மையான அரசியல் போராட்டம் இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது போல் தெரிகிறது.

ஜனாதிபதி ஆட்சி முறையில் பாதி மாற்றப்பட்டுவிட்டது. இப்போது பொதுத் தேர்தலில் மாற்றம் கொண்டுவர எத்தனிக்கப்படுகின்றது. இதனூடாக இரண்டு வகையான ஆபத்துகள் சிறுபான்மைகளுக்கு இருக்கின்றன. அதில் பிரதானமாக முஸ்லிம்களுக்கு இருக்கின்றது.

முதலாவது, எங்களுக்குரிய பிரதிநிதித்துவம் (பங்கு) இவர்கள் முன்வைக்கின்ற முறைகளில் கிடைக்காது. கடந்த காலங்களில் மு.கா. கட்சி ஆட்சியின் பங்காளிகளாக இருந்த காலகட்டத்தில்தான் சிங்கள பெரும்பான்மைகள் விழித்துக் கொண்டன.

'இலங்கையில் உள்ள பெரும்பான்மையினராகிய நாம் எவ்வாறு சிறுபான்மைகளில் தங்கியிருப்பது. இதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து சிறுபான்மைகளை ஓரங்கட்டி தமிழ், முஸ்லிம்களை ஆளப்படுகின்ற சமூகமாக மாற்ற வேண்டும்' என்ற கருத்து பல்வேறு ரூபங்களில் இலங்கையில் சிங்கள, பௌத்த பேரினவாதிகளால் ஏற்படுத்தப்பட்டது. அதன் சங்கிலித் தொடரே இந்தத் தேர்தல் முறை மாற்றமாகும்.

பெரிய கட்சிகளுள் ஏதாவது ஒரு கட்சி சுயமாக அறுதிப் பெரும்பான்மை அல்லது அதைவிடக்கூடுதலாகப் பெறக்கூடிய தேர்தல் முறையைத்தான் இந்த மாற்றத்தினூடாக அவர்கள் கொண்டுவரப் பார்க்கின்றார்கள்.

ஜனாதிபதி ஆட்சிமுறை வேண்டும். அதற்கான காரணம் சிறுபான்மைகளுக்கும் சிறந்த கௌரவம் இங்கு [illegible] ங்களைக் குறைப்பதற்கு நாம் எதிரானவர்கள் அல்லர். அதனைக் குறைத்து ஜனநாயக ஆட்சியும், ஜனாதிபதி நாடாளுமன்றுக்கு பொறுப்புக்கூறும் நிலையும் உருவாகியுள்ளது. இது வரவேற்கத்தக்கது. ஆனால், ஜனாதிபதி ஆட்சி முறை மாற்றம் ஏற்படலாகாது. ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றிவிட்டால் அதன் பிற்பாடு வருகின்ற பொதுத் தேர்தல் முறை தற்போதுள்ள முறையாக வராது. அதனூடாக அறுதிப்பெரும்பான்மையை சொந்தமாக பிரதான ஒரு கட்சி பெறுவதற்கான முஸ்தீபுகளே நடக்கின்றன. இதனை எப்படியாவது பெறவேண்டுமென பிரதான கட்சிகள் துடிப்பது சிறுபான்மைகளின் தயவில்லாமல் சுயமாக அறுதிப்பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைப்பதாகும். இதற்கு வழியமைக்க சிறுபான்மைகள் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது.

கடந்த 19 வருடகாலமாக மாற்ற முடியாமலிருந்த ஆட்சியை முஸ்லிம்கள் பிரதானமாகவும், சிறுபான்மைகள் பொதுவாகவும் இருந்து ஆட்சிமாற்றத்தைக் கொண்டு வந்திருக்கின்றனர் என்றால், அதற்கான காரணம் ஜனாதிபதி ஆட்சி முறை இந்த நாட்டில் இருந்ததனால்தான், ஜனாதிபதியாக வருகின்றவர் 50 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற வேண்டும். இந்த நாட்டில் சிங்கள மக்கள் சுமார் 70 வீதம் இருக்கின்றார்கள். சிறுபான்மைகள் அண்ணளவாக சுமார் 30 வீதம் இருக்கின்றார்கள். 50 வீதத்தைப் பெற வேண்டுமாக இருந்தால் சிறுபான்மை மக்கள் 70 வீதத்திற்குள் 50 வீதம் ஒற்றுமைப்படுவது என்பது நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்று.

> கடந்த 19 வருடகாலமாக மாற்ற முடியாமலிருந்த ஆட்சியை முஸ்லிம்கள் பிரதானமாகவும், சிறுபான்மைகள் பொதுவாகவும் இருந்து ஆட்சிமாற்றத்தைக் கொண்டு வந்திருக்கின்றனர் என்றால், அதற்கான காரணம் ஜனாதிபதி ஆட்சிமுறை இந்த நாட்டில் இருந்ததனால்தான். ஜனாதிபதியாக வருகின்றவர் 50 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற வேண்டும். இந்த நாட்டில் சிங்கள மக்கள் சுமார் 70 வீதம் இருக்கின்றார்கள். சிறுபான்மைகள் அண்ணளவாக சுமார் 30 வீதம் இருக்கின்றார்கள். 50 வீதத்தைப் பெற வேண்டுமாக இருந்தால் சிறு பான்மை மக்கள் 70 வீதத்திற்குள் 50 வீதம் ஒற்றுமைப்படுவது என்பது நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்று.

இந்த அடிப்படையில் சிறுபான்மைகளின் வாக்குகள் இங்கு தேவைப்படுகின்றன. இந்த முறையில் கூட கிட்டத்தட்ட 50 வீதத்திற்கு சற்றுக் குறைவான சிங்கள மக்கள் மஹிந்தவுக்குத்தான் வாக்களித்தார்கள். ஆனால், சிறுபான்மை மக்கள் அண்ணளவாக சுமார் 30 வீதம் ஒற்றுமைப்பட்டார்கள். எனவே, பெரும்பான்மை மக்களும் 22 வீதம் ஒற்றுமைப்பட்டபொழுது ஆட்சி மாற்றத்தைச் செய்யக்கூடியதாக இருந்தது.

இப்பொழுது அந்த ஜனாதிபதி ஆட்சி முறை அதிகாரத்தின் பாதியை எடுத்துவிட்டார்கள். உயர் நீதிமன்றம் தலையிடாவிட்டால் முழுமையாகவே எடுபட்டிருக்கும். பொதுத் தேர்தலுக்குப்பின்னர் அதனையும் நீக்கிவிட வேண்டும் என்பதுதான் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாக இருக்கிறது.

மறு புறத்தில் இப்பொழுது இருக்கின்ற பொதுத் தேர்தல் முறைமை சிறு பான்மைகளுக்கு சாதகமான முறைமையாகும். இம்முறை அறிமுகப் படுத்தப்பட்டது 1978 ஆம் ஆண்டின் புதிய அரசியல் யாப்பினூடாகவாகும். இதனூடாக 1989 ஆம் ஆண்டே இந்த யாப்பின்படி முதல் தேர்தல் நடைபெற்றது. அதன் பின்னர் இன்று வரை 6 பொதுத் தேர்தல்கள் நடை பெற்றிருக்கின்றன. இந்த தேர்தல் களில் 1989 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 125 ஆசனங்கள் கிடைத்தன. அத் தேர்தல் மிக ஊழல் நிறைந்த தேர்தல் என்று கூறப்பட்டது. 2010 ஆம் ஆண்டு யுத்த வெற்றி அலை வீசியது, அப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாத்திரம் 109 ஆசனங்கள், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 144 ஆசனங்களைப் பெற்றது.

இவை இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற 4 தேர்தல்களும் சாதாரண சூழ்நிலையில் நடைபெற்றவையாகும். இவை 4 இலும் எந்த ஒரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. 1994 ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க ஆட்சி அமைத்தார். மறைந்த தலைவர் அஷ்ரபின் தலைமையில் இருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன்தான் அவரால் ஆட்சியமைக்க முடிந்தது. சொந்தமாக அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. 2000 ஆம் ஆண்டு மீண்டும் சந்திரிகா ஆட்சியமைத்ததும் மு.கா வின் தயவிலேயே.

2001 ஆம் ஆண்டு சந்திரிகாவின் ஆட்சியைக் கவிழ்த்து ஸ்ரீ.ல.மு.கா ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியைக் கொண்டுவந்தார்கள். அப்பொழுதும் ஐ.தே.க விற்கு அறுதிப்பெரும்பான்மை கிடைக்காததால் மு.கா வின் தயவில் ஆட்சி அமைத்தார்கள் 2004 ஆம் ஆண்டு சந்திரிகா மீண்டும் ஆட்சிக்கு வந்தார். அப்பொழுதும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. 6 ஆசனங்கள் தேவைப்பட்டன. அப்போது தற்போதைய அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி மு.காவிலிருந்து விலகி சந்திரிகாவோடு சேர்ந்து ஆட்சியமைக்க உதவியது. இவ்வாறான நிலையில் சாதாரண ஒரு சூழ்நிலையில் ஒரு ஜனநாயக தேர்தல் நடைபெற்றால் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மைகிடைக்காது. எனவே இப்போதைய தேர்தல் முறையில் சிறுபான்மைகளின் ஆதரவு இல்லாமல் எந்தவொரு கட்சிக்கும் ஆட்சியமைக்க முடியாது என்ற நிலை காணப்படுகின்றது.

எனவேதான், சிறுபான்மைகளை ஒதுக்கி நாட்டில் ஆட்சியைத் தக்க வைக்க முன்வைக்கப்படும் திருத்த யோசனைகளை முறியடித்து சிறப்பாக அனைவரையும் அரவணைத்துச் செல்கின்ற ஆட்சியை நிலை நாட்டுவதற்கு அனைத்து சிறுபான்மைக் கட்சிகளும் பேதங்களை மறந்து ஒன்றுபட வேண்டும். இதுவே மீண்டும் ஓர் இருண்ட யுகம் நாட்டில் ஏற்படாமலிருக்க வழிகோலும் என்பதை யாரும் மறுத்துரைக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### இருமாடி வீடு விற்பனைக்கு

01. நிலையம்: பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் 250 மீற்றர் யாழ்.கச்சேரியிலிருந்தும் யாழ். பிரதேச செயலகத்திலிருந்து 150 மீற்றர் தூரம்
02. விபரம்: 2750 சதுர அடி பரப்பு கட்டடம் படுக்கை அறைகள் 05 இணைந்த Bathroom Toilets-03 Toilets with Bath-03 களஞ்சியறை- 01, Halls -03 சமையலறை -01, Large Car Park
03. Suitable: விருந்தினர்விடுதி,ஹோட்டல்,அமைச்சு அல்லது கம்பனி செயலகம் நடத்த பொருத்தமானது
தொடர்புகள்: (59981) (4.3.7)
S.S.Mariyanayagan- 021 222 4744
S.S.Rubendra- 075 738 4168
S.Parameswaran- 071 447 1302

### கல் விற்பனைக்கு

9x4x2 இஞ்சிகளில் செங்கல் ¾" கருஞ்சல்லி, 6x9 கருங்கல் (அத்திபாரக்கல்) ஆற்றுமணல் என்பன விற்பனைக்கு
தொடர்பு: 075 800 1643
(60143) (3.7.5)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

பொமனேரியன் ,ஜேர்மன் செப்பேட் டல்மேசன்,பொக்சர், டொபர்மன்,கிறேடன் போன்ற நாய்க்குட்டிகளை மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
Multy Form pet paradise
941, k.k.s வீதி, தட்டாதெரு சந்தி
யாழ்ப்பாணம். (c 16413)(3.5.7)
075 498 5400 , 075 988 0000

### காணி விற்பனைக்கு

அச்சுவேலி சந்தியில் இருந்து 100M தொலைவில் இருக்கும் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
விலைபேசித் தீர்க்கமுடியும்.
தொடர்பு: 077 671 1861
(தரகர் தேவையில்லை) (60328) (4.3.7)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய GERMAN SHEPERD நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
விலாசம்: (60224) (4.3.7)
சேர்ச் ஒழுங்கை, அராலி வடக்கு.
தொடர்பு: 078 301 4280/021 205 1514

### ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு

சிறந்த ரக ஒருநாள், ஒருமாத யாழ்ப்பாணக் குஞ்சுகள் திருநெல்வேலியில் விற்பனைக்குண்டு.
ஒருநாள் குஞ்சு ரூபா 70/=
(59918)(45.3) தொடர்பு: 077 349 7277

### காணி விற்பனைக்கு

வடமராட்சி வியாபாரி மூலையில் காணி விற்பனைக்கு உண்டு.
(சி 17440) (9.3) தொடர்பு: 077 757 0182

### வீடு உடன் விற்பனைக்குண்டு

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
15/6A, சிறாம்பியடி லேன்
தொடர்பு: 077 976 3278 (60090) (4.3.7)

### காணிகள் விற்பனைக்குண்டு

சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதி, கற்குழி முதலாம் ஒழுங்கையில் 7½ பரப்புக் காணியும், சாவகச்சேரி, நுணாவில் கல்வயல் வீதி, கற்குழி கந்தசாமி கோயில் அருகில் 9 பரப்புக் காணியும் விற்பனைக்குள்ளன. (41154) (4.3.7)
தொடர்பு: 077 778 4092

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

மானிப்பாய் மூத்த தம்பிலேனில் 2¾பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6131 128

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

மானிப்பாயில், (மானிப்பாய் சந்திக்கு அண்மையில்) வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. மேலதிக விவரங்களுக்கு பின்வரும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 791 7691
(60201) (4.3.7)

### விற்பனைக்கு

Sony Set (சொனிசெற் 1100W றேடியோ, DVD, MP3, ஸ்கூட்டிபெப் (பச்சை நிறம்), வயலின், கிற்றார், கிடாரம், கூல்பார் ஒன்றின் 12 அடி நீள லைற்வோட் என்பன விற்பனைக்குள்ளன.
(60309) (4.3.7) தொடர்பு: 077 295 8009

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள NIPPON -3PH - 60KVF ஜெனி (Generator) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 917 6788
(58885) (4.3.7)

### வீடு விற்பனைக்கு

சுன்னாகம் மாணிக்கதியாகராஜா வீதி, செல்லவளவில் 2 பரப்பு 7.90 குழி கொண்ட காணியுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077614 6434 (57524)(3.7.4)

### வான் விற்பனைக்கு உண்டு

50-XXXX Lx30 வான் விற்பனைக்கு உண்டு. (60311) (3.5.7)
தொடர்பு: 077 379 2320,078 308 8220

### விற்பனைக்கு

நாட்டுக் கோழிக்குஞ்சு விற்பனைக்கு. ஒரு நாள், ஒருகிழமை, இரண்டுகிழமை, ஒரு மாதம், நாத்தாண்டிய
தொடர்பு: 072 340 9941
(சி 17444)(9.3)

### காணி விற்பனைக்கு

இராசவீதியில் (இருபாலைச் சந்தியில் இருந்து 20m தொலைவில்) மூன்று பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு.
(60304)(3.7.4) தொடர்பு - 077 005 5307

## தேவை

### வேலையாள்கள் தேவை

விற்பனை பிரதிநிதி (Sales Rep) ஆண் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ள Driving தெரிந்தவர்கள். மெக்கானிக் வேலை பழகுபவர்கள் மாதம் 6000/= சம்பளம் கொடுக்கப்படும்.
இல: சன்னதி முருகன் வேக்சொப் அன் சேவிஸ்
211, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (60379) (4.3.7)

### தேவை

விற்பனைப் பிரதிநிதி, சாரதி மற்றும் பொருள்கள் ஏற்றி இறக்குவதற்கு வேலையாள்கள் தேவை. (60284) (4.3.7)
தொடர்பு: சிவா பிறதர்ஸ்,
கொக்கோ கோலா டிஸ்ரிபூட்டர்ஸ்
205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 077 772 2215

### பணிப்பெண் தேவை

ஐந்து பேர் கொண்ட குடும்பத்துக்கு சமையல் செய்வதற்கு பெண் தேவை.
முகவரி:
நீர்வேலி, யாழ்ப்பாணம்.
T.P : 077 361 1282 (சி/15416) (4.3.7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

### மணமகள் தேவை

காங்கேசன்துறை 1982.09.27 இல் பிறந்த ஜேர்மனில் தொழில் புரியும் ஜேர்மன் P.R உடையவர், உத்தராடம் 4 ஆம் பாதம், 8 இல் செவ்வாய், பாவகிரகம் 19, செவ்வாய் குற்றமற்ற மணமகனுக்கு ஏற்ற மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு 077 724 5718, 021 224 1585
(சி/17449) (4.3.7)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1990.07.07 இல் பிறந்த மூல நட்சத்திரம் 7 இல் செவ்வாய் கிரகபாவம் 38½ வெளிநாடு விரும்பத்தக்கது. விவாகரத்தானவரும் ஏற்றுக் கொள்ளப்படுவர்.
(60250) (4.3.7) தொடர்பு: 077 461 4216

### வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் வசிக்கும் 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு சமையல் வேலை வீட்டுப் பராமரிப்பு ஆகியவற்றுக்கு பொறுப்புள்ள நற்பழக்கமுள்ள ஒருவர் தேவை. தங்குமிட வசதி தனி அறை கொடுக்கப்படும். வயது 45 இற்கு மேற்பட்டவர்கள். சொந்தங்கள், உறவுகளை இழந்தவர்களுக்கு முன்னுரிமை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(60331) (4.3.7) தொடர்பு: 077 021 2975

### குழந்தை பராமரிப்பாளர் தேவை

வடமராட்சியில் 2½ வயது குழந்தைக்கு பராமரிப்பாளர் தேவை.
தொடர்பு: 077 436 4898, 077 658 9434
(60283) (4.3.7)

### தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள தொழில் நிறுவனத்துக்கு 40 வயதுக்குட்பட்ட ஆண், பெண் வேலையாள்கள் தேவை. தங்குமிடவசதியும் உண்டு.
(60306)(3.7.4) · தொடர்பு - 077 418 0185

## வாடகைக்கு

### JCB(பைக்கோ) வாடகைக்கு

குறிப்பு:- போக்குவரத்து கூலி அறவிடப்படமாட்டாது.
தொடர்பு இல.

சுன்னாகம்: 077 7712482
யாழ்ப்பாணம்: 0775932007
இல. 207,
புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்
K.K.S. றோட், சுன்னாகம்.

### வீடு வாடகைக்கு

இல.15, பழைய பூங்கா வீதி, முதலாம் ஒழுங்கையிலுள்ள 3 அறைகள் கொமட் வசதியுடனான குளியலறை உள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.
(60337) (4.3.7) தொடர்பு: 077 971 0525

### வீடுவாடகைக்கு உண்டு

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி சந்திக்கு அருகில் 4200 சதுர அடி கொண்ட புதுவீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்களுக்கும், அரசஅலுவலகங்களுக்கும் ஏற்றதும் விரும்பத்தக்கதும்.
வாகனத்தரிப்பிட வசதி உண்டு.
(60182) (3.5) தொடர்பு: 077 668 1547

### வாடகைக்கு

யாழ்ப்பாணம், கல்வியங்காடு,கட்டப்பிராய் பருத்தித்துறை வீதிக்கு அண்மையில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 160 6009
(41169) (3.5)

### வாடகைக்குண்டு

உதயன் அலுவலகத்துக்கு அருகில் உள்ள இரட்ணம் கட்டடம் 347, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் 4 கடைத் தொகுதியும் மேல் தளத்தில் 30'x50' வீடும் அதற்கு மேல் தளத்தில் அகல நீளம் கொண்ட அலுவலக உபயோகத்துக்கு உகந்த ஒரு Hall வாடகைக்கு உள்ளது.
தொடர்பு:
075 891 6081, 076 537 2720

### கடை வாடகைக்குண்டு

யாழ் நகரில் கே.கே எஸ் . வீதியில் அமைந்துள்ள நீளம் 60'x அகலம் 12' கொண்ட கடை வாடகைக்குண்டு.
தொடர்பு: 075 204 0446
(60229)(3.5)

### அறை வாடகைக்கு

கோண்டாவில் பகுதியில் பலாலி வீதிக்கு சமீபமாக அறை வாடகைக்கு விடப்படும். (பல்கலைக்கழக மாணவர்கள்)
(60171) (4.3.7) தொடர்பு: 077 917 8993

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## ஏனையவை

### தீ விபத்திலிருந்து உங்களையும் உங்கள் உடமைகளையும் பாதுகாக்க

சகல விதமான தீயணைப்பு சாதனங்களையும், தீயணைப்பு போர்வையையும் குறைந்த விலையில் உடனே பெற்றுக் கொள்ள யாழ்.நகரில் இரண்டு வருட காலமாக இயங்கிவரும் ஒரே ஸ்தாபனமான YARL FIRE PROTECTORS ஐ இன்றே நாடுங்கள்.
தொடர்புகளுக்கு:
YARL FIRE PROTECTORS
146, KANNATHIDDY ROAD,
JAFFNA. 021 221 9905
(60262) (4.3.7)

### தவறவிட்டது

மகாதேவன் கௌதீஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 881400111 V மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளடங்கலாக பேர்ஸ் யாழ் நகருக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
(சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு: 077 400 1851, 077 273 9826
(6051)(3.5.7)

### ஓம் சக்தி ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரபல ஜோதிடர்
சிவசங்கர் ஜோதிடர்
உடல்நலக்குறை, திருமண யோகம், தொழில் வியாபாரம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப் பயணங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லப்படும்.
ஒரு முறை எங்களை சந்தித்துப் பயன்பெறுங்கள்.
தொடர்பு: 077 618 7261
காலை 8.00மணி - இரவு - 7.00 மணி வரை
நல்லூர் கோயில் வடக்கு வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.

### மணமகள் தேவை

யாழ் கரம்பன் கிறிஸ்டியன்24+வயது கொழும்பு கத்தோலிக்க பாடசாலையில் கல்வி கற்ற மூன்று மொழிகளும் தெரிந்த தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில் புரியும் (சொந்த வாகனம் உண்டு) சாதாரண [illegible] மணமகனுக்கு [illegible] உள்நாட்டிலோ பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
leoocean35@yahoo.com

## வேலைவாய்ப்பு

### Vacancy

சுஜித் எண்டர் பிறைஸஸ்
யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி
உங்களுக்கு....!
* [illegible]
மாதம் 1½ இலட்சம்
* மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் உள்ளவரா
மாதம் 50, 000
* [illegible]
[illegible]
தொடர்பு: 077 556 8601, 077 [illegible]

### வேலைவாய்ப்பு


எவ்வித முற் கட்டணமும் இன்றி வாதுவை (கொழும்பு) பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற பாற் பண்டங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் விசேட வேலைவாய்ப்புக்கள், டிலிவரி பையன்கள், உற்பத்தி பொய்லர் போன்ற பிரிவுகளில் வயது 18-50 வரையான ஆண்/பெண் இருபாலாருக்கும் தூர பிரதேசத்தில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை. உணவு, தங்குமிடவசதி, மாதாந்த வரவு கொடுப்பனவு வழங்கப்படும். வருமானம் 25000/= தொடக்கம் திறமையானவர்களுக்கு 35000/= வரை வழங்கப்படும்.
தொடர்பு:
077 491 6016, 033 464 5223

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் – 08

# விண்ணக வாழ்வில் முதலாம் ஆண்டு

## றெஜினா நீக்கிலாப்பிள்ளை



மலர்வு
08.09.1945

உதிர்வு
31.05.2014

அம்மா என்ற சொல்லுக்கு அர்த்தம் நீதானம்மா
எம்மை வழிநடத்திக் காத்திட்ட தெய்வமே அம்மா!!
ஆயிரம் உறவுகள் எம்மைத் தேடி வந்தாலும்
உங்கள் தாய்மைக்கு ஈடாகுமா?
பக்தியில் பாசத்தில் பண்பில் எம்மை வளர்த்திட்ட உத்தமி
மணவாழ்வில் மணி மகுடம் சூட்டிய
மணவாட்டியாய் வாழ்ந்தாய் எம் மனைவியாளே!
இன்று உங்கள் மணவாளனை தனி மரமாய்
தவிக்க விட்டு ஏன் சென்றாய் ?
கண்மூடித் திறப்பதற்குள் ஓராண்டு மறைந்ததுவோ?
உங்கள் பிரிவு எமைத் தினம் தினம் வாட்டுதம்மா
மீண்டும் ஒரு ஜென்மம் உனையே தாயாய்க் கேட்கிறோம்
உனது ஆன்மா இறை உறவில் இளைப்பாற
இறை அருள் வேண்டி நிற்கின்றோம்.

கணவர் (நீக்கிலாப்பிள்ளை),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
அச்சுவேலி. இராமன் வளவு.
அச்சுவேலி.

# கண்ணீர் அஞ்சலி

## விநாசித்தம்பி கனகநாயகம்



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட காலி வர்த்தகரும் எமது உற்ற நண்பருமாகிய விநாசித்தம்பி கனகநாயகம் 26.05.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கும், அவரின் நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர் அஞ்சலி மூலம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சி.புவனேந்திரன் குடும்பத்தினர்.
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

# வடக்கு- கிழக்கு விவசாயத்துறையினருக்கு அநீதி இழைக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துக

## விவசாய சேவைக்கு தகுதியுடைய தமிழ் மொழி உத்தியோகத்தர் சங்கம் அரசிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 31
கடந்த 15 ஆண்டுகளில் நடத்தப்பட மூன்று விவசாய சேவை நியமனங்களில் நியமிக்கப்பட்ட 423 உத்தியோகத்தர்களில் 10 உத்தியோகத்தர்களே தமிழ் மொழிமூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள். இது வடக்கு மற்றும் கிழக்கு விவசாயத் துறையினருக்கு மேற்கொள்ளப்பட்டுவரும் அநீதி என்று விவசாய சேவைக்குத் தகுதியுடைய தமிழ் மொழிமூல உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் விவசாயத் துறையில் வடக்கின் பங்களிப்பு எழுபதுகளுக்கு முன்னர் மிகவும் உயர்நிலையில் இருந்து தற்போது பின் தங்கிய நிலைக்கு வந்துள்ளது. வடபகுதிக்கான விவசாய சேவையைத் திறம்படச் செய்வதற்காக ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஓர் உதவி விவசாயப் பணிப்பாளரும் இரண்டு விவசாய உத்தியோகத்தர்களும் கடமையாற்றினார்கள். கிளிநொச்சியில் சேவைக்காலப் பயிற்சி நிலையம் திறம்படச் செயற்பட்டது. கிளிநொச்சி, திருநெல்வேலி போன்ற இடங்களின் ஆராய்ச்சி நிலையங்களும் அவற்றின் பிரிவுகள் மாவட்டங்கள் தோறும் திறம்படச் செயற்பட்டன.

வடமாகாணத்தில் இன்று மாவட்டங்கள்தோறும் பிரதி விவசாயப் பணிப்பாளர்கள் மட்டுமே உள்ளனர். அவர்களின் பொறுப்புக்களை பங்கேற்கும் உதவி விவசாயப் பணிப்பாளர்கள் எந்தவொரு மாவட்டத்திலும் இல்லை. அவர்களிலும் சிலர் விரைவில் ஓய்வுபெற உள்ளவர்கள். சேவைக் காலப் பயிற்சி நிலையம் முற்றிலும் இயங்காத நிலையில் உள்ளது. தமிழ் மொழி மூலம் விவசாய டிப்ளோமா பாடநெறியை வழங்கும் விவசாயக் கல்லூரிகளில் குண்டசாலை விவசாயக் கல்லூரி ஒன்பதிற்கும் மேற்பட்ட நிரந்தர தமிழ் மொழிமூல விரிவுரையாளர்களுடன் இயங்க வேண்டிய நிலையில் எந்தவொரு நிரந்தர விரிவுரையாளர்களும் இன்றி முற்றிலும் தற்காலிக விரிவுரையாளர்களின் பங்களிப்பில் இயங்குகிறது.

வவுனியா விவசாயக் கல்லூரி மூன்று நிரந்தர விரிவுரையாளர்களுடன் இயங்குகிறது. மேலும் விவசாய இயந்திரங்கள் சம்பந்தமான பயிற்சியை வழங்கவென்று தேசியரீதியில் ஒரேயொரு நிறுவனம் அனுராதபுரத்தில் உள்ளது. இங்கு பயிற்சியை தமிழ் மொழியில் வழங்குவதற்கு எந்தவொரு தமிழ் மொழி பேசும் உத்தியோகத்தர்களும் இல்லை. வடமாகாண மாணவர்களுக்காக வட்டக்கச்சியில் ஆரம்பிக்கப்படவிருந்த விவசாயப் பாடசாலையானது தமிழ் மொழிமூல விரிவுரையாளர்கள் பற்றாக்குறையினால் ஆரம்பிக்கபடாது கைவிடப்பட்டுள்ளது. இவ்வாறாக உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றபோது தகுதியுடைய பலதமிழ் மொழிமூல உத்தியோகத்தர்கள் நீண்டகாலமாக பதவியுயர்வின்றி பணிபுரிகிறார்கள். விவசாயப் பட்டதாரிகள் பலர் தொழிலின்றி இருப்பதுடன்இ தகுதிக்குக் குறைவான தொழில்களிலும் மனத் தாங்கல்களுக்கு மத்தியில் பணிபுரிகிறார்கள்.

2000 ஆம் ஆண்டுக்குப் பின்னரான கடந்த பதினைந்து ஆண்டுகளில் விவசாய சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட தமிழ்மொழிமூல உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 9. 2005 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உள்ளீர்ப்பில் விரிவுரையாளர் பதவிக்கு தமிழ் மொழிமூலம் மட்டுமே கோரப்பட்டிருந்தது. இருப்பினும் அவ் ஆண்டில் தமிழ் மொழிமூல விண்ணப்பதாரிகள் எவரும் சித்தியடையவில்லை எனக் கூறப்பட்டு எவரும் தெரிவுசெய்யப்படவில்லை. 2011 ஆம் ஆண்டு 32 பேர் வரையிலான தமிழ் மொழிமூல விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இருப்பினும் 9 விண்ணப்பதாரிகளே தெரிவு செய்யப்பட்டனர்.

இதனால் பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் விவசாய அமைச்சு மற்றும் பொதுச்சேவை ஆணைக்குழு என்பவற்றுக்கு வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் வெற்றிடங்கள் காணப்படுவதை சுட்டிக்காட்டி அந்த வெற்றிடத்துக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களைத் தெரிவு செய்யும்படி மேன்முறையீடு செய்தபோது அந்த நியமனம் முற்றிலும் திறமை அடிப்படையிலேயே செய்யப்பட்டதாகவும் தமிழ் மொழிமூல வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட பரீட்சை நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை அது நடைபெறவில்லை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-10)

# காட்டு யானை தாக்கி உயிரிழந்தார் விவசாயி

அம்பாறை, மே 31
பொத்துவில், பாணம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதாகம பகுதியில் காட்டு யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்றதாகப் பாணம பொலிஸார் தெரிவித்தனர்.

46 வயதுடைய விவசாயியான அப்புஹாமி ஞானரெட்ண என்பவரே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். தனது வயலில் வேலை செய்துகொண்டிருந்த இவரைக் காட்டுப் பகுதியிலிருந்து வந்த காட்டு யானை ஒன்று மூர்க்கமாகத் தாக்கியுள்ளது. தாக்குதலுக்குள்ளான ஞானரெட்ண அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து பாணம பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (த-10)

# கண்ணீர் அஞ்சலி

இணுவில் அறிவாலயத்திற்கு இன்றுவரை பல்வேறு வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவரும், ஆயுட்கால உறுப்பினருமான

அமரர் விநாசித்தம்பி கனகநாயகம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்தஅனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அறிவாலயம்,
இணுவில்.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும், நன்றி நவிலலும்



திருமதி
பரமேஸ்வரி அன்னராசா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 | 01 |
| 06 | 05 |
| 1946 | 2015 |

கடந்த 01.05.2015 சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் பரமேஸ்வரி அன்னராசா அவர்களின் ஆத்மா சாந்திப்பிரார்த்தனை இன்று (31.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சுன்னாகம் ஸ்ரீ கதிரைமலை கோயில் மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவின் போது நேரில் கலந்தும் மற்றும் பல வழிகளிலும் துயர் பகிர்ந்தோர் யாவருக்கும் எமது [illegible] கொள்கின்றோம்.

[illegible],
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

உதயன் advt@uthayan.com 0215671111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வவுனியா மாவட்ட பாடசாலைகளில் பாலியல் துஷ்பிரயோக விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிக்கப்பட்டது. அதன் இறுதி நாள் நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பாடசாலையில் உயர்தர வகுப்பு மாணவர்களினால் பெற்றோருக்கான விழிப் புணர்வு தெருக்கூத்து மற்றும் கண்காட்சி ஆகியன நடத்தப்பட்டன. இந்த நிகழ்வில் நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு உத்தியோகத்தர், பாடசாலை அபிவிருத்திக்குழு செயலாளர், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (10)

சர்வதேச இந்து இளைஞர் பேரவையால் வவுனியா ஸ்ரீராமபுரம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. மாணவர் களின் கற்றல் செயற்பாட்டை விருத்தி செய்யும் நோக்கில் அப் பகுதி மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க 67 மாணவர்களுக்கு மேற்படி உப கரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் பிரபல சட்டத்தர ணிகளான வி.மணிவண்ணன்இ எஸ்.சோபிகன் மற்றும் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (402)



பாசிக் நிறுவனத்தினால் பெருநண்டு வளர்ப்புத்திட்டப் பயனாளிகளுக்கு நண்டு வளர்ப்புக் கூடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி கடல்நீர் வளர்ப் புத்திட்ட பெருநண்டு வளர்ப்புத்திட்டத்தில் இணைக்கப்பட்ட தம்பாட்டி கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்துக்கு உட்பட்ட பயனாளிகளுக்கு ஊர் காவற்றுறை பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம் குறித்த கூடுகளை கையளித்தார். (10)









பளைப் பிரதேச மாணவர்க ளுக்கான இலவச இசை, வய லின் மற்றும் நடனப் பயிற்சி வகுப் புகள் அண்மையில் பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண் டபத்தில் அங்குரார்ப்பணம் செய் யப்பட்டது. இத்தாவில் சரஸ்வதி கலா மன்ற நிர்வாக இயக்குநர் ச.தனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பளைப் பிரதேச செயலர் திருமதி ப.ஜெய ராணி முதன்மை விருந்தின ராகவும் பளைக் கோட்டக் கல்வி அலுவலர் வீ.இராஜகுலசிங் கம், பளை ப.நோ.கூ.சங்கத் தலைவர் க.தியாகராசா ஆகி யோர் விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். வாரத்தில் வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங் களில் பளை மத்திய கல்லூரி யில் பயிற்சி வகுப்புகள் நடத் தப்படு மெனவும் இசை வயலின் நடனம் ஆகிய பயிற்சி நெறி களில் பளைப் பிரதேசத் தைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொள்ளலாமெனவும் இத்தா வில் சரஸ்வதி கலா மன்றத்தி னர் அறிவித் துள்ளனர். (9)

மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தினால் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவி ஒருவருக்கு அண்மையில் சைக்கிள் ஒன்று அன்பளிப்புச் செய்யப் பட்டது. மாணவி பாடசாலைக்குச் சென்று வருவதை இலகு படுத்தி அவ ரது கல்விக்கு ஊக்கமளிக்கும் விதமாக இந்த உதவி வழங்கப் பட்டது. சுவிஸ் நாட்டில் வாழும் சண்முகநாதன் குடும்பத்தினர் தமது மக னின் பிறந்த நாளையொட்டி வழங்கிய நிதி உதவியின் மூலம் இந்தச் சைக்கிளை மாணவி பெற்றார். நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செய லாளர் திருமதி உதயகுமார் யசோதா, இளைஞர் நாடாளுமன்ற உறுப் பினர் உஷாந்தன் ஆகியோர் சைக்கிளை அன்பளிப்புச் செய்தனர். (86)







வேள்ட் விஷன் நிறுவனத்தின் உதவியுடன் சுழிபுரம் காட டுப்புலம் பகுதியில் நூலகம் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிர தேச சபையின் தவிசாளர் நா.ஐங்கரன் கலந்து [illegible] திறக்கப்பட்ட நூலகத்துக்கான தளபாட [illegible] பத் வழங்கியுள்ளது. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஏழாலை மக்கள் முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு ஏழாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் வி.வித்தகரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஐந்து பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கோழி வளர்ப்புக்கான கூடு, கோழிக்குஞ்சுகள், தீன் என்பன வழங்கப்பட்டுள்ளன. நிகழ்வில் விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், .பா.கஜதீபன், வலி .தெற்கு பிரதேச சபையின் தலைவர் தி.பிரகாஸ், உறுப்பினர் அ.தவப்பிரகாசம், கிராம அலுவலர் தி. சசிகலா ஆகியோர் கலந்துகொண்டனர். குறித்த வாழ்வாதார உதவிகளுக்கான உதவியை லண்டனில் வாழும் ஏழாலையைச் சேர்ந்த சற்குருநாதன் குடும்பத்தினர் வழங்கியிருந்தனர். (86)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 12

# எம்மைத் தங்க வைக்கின்ற தாயின் வயிறானது தொடர்பாடலின் முதற் பாடசாலையாகும்

## 49 ஆவது உலக சமூகத்தொடர்பு தினத்தில் திருத்தந்தை பிரான்சிஸ்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம்





உலகக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சீஸ் மே மாதம் உலகளாவிய ரீதியிற் கொண்டாடப்படும் உலக சமூகத் தொடர்பு தினச் செய்திக் கருப்பொருளாக - குடும்பத்துடன் தொடர்பாடல் : அன்பின் கொடைகளைச் சந்திக்க வாய்ப்புப் பெற்ற இடம் குடும்பம் - என்னும் பொருளில் தம் சிந்தனைகளைத் தெரிவித்துள்ளார்.

1865ஆம் ஆண்டு சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியம் ஆரம்பிக்கப்பப்பட்டது முதல் உலக சமூகத் தொடர்பு தினம் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகளாவிய ரீதியில் இத்தினத் தின் முதன்மையையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்த கத்தோலிக்க திருச்சபையின் தலைவர்களான பாப்பரசர்கள் தமது விசேட செய்தியினை இத் தினத்தில் வெளியிட்டு வந்துள்ளார்கள்.

உலக சமூகத் தொடர்பு தினத்திற்கான முதலாவது செய்தியினை 6ஆம் பவுல் பாப்பரசர் 1967ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் திகதி வெளியிட்டுள்ளார். அந்த வகையில் தற்போதைய பாப்பரசர் பிரான்சீஸ் 2015 ஆண்டு மே மாதத்திற்கான செய்தியை 49 ஆவது உலக சமூகத் தொடர்பு தினச் செய்தியாக 23ஆம் திகதி தை 2015 இல் பிரான்சீஸ் டீ சேல்ஸ் புனிதருடைய தினத்தில் வெளியிட்டுள்ளார். இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் பிரான்சீஸ் டீ சேல்ஸ் புனிதர் எழுத்தாளர்களின் பாதுகாவலர் என்பதாகும்.

குடும்பத்துடன் தொடர்பாடல் : அன்பின் கொடைகளைச் சந்திக்க வாய்ப்புப் பெற்ற இடம் குடும்பம் என்னும் தலைப்பில் பாப்பரசர் பிரான்சீஸ் தாயின் வயிற்றில் இருக்கும் போதே தொடர்பாடல் ஆரம்பமாகிறது - குழந்தைக்கும் தாய்க்குமான அந்த தொடர்பாடல் பின்னர் எவ்வாறு குடும்பத்தில் பல படிகளில் படிப்படியாக வளர்கிறது - என்பதைத் தெளிவாகவும் இயல்பாகவும் விளக்குகிறார்.

இயேசுவின் தாயாரான புனித மரியாள் எலிசபேத்தை சந்தித்த நிகழ்வும் அச்சந்திப்பு நிகழ்வில் எலிசபேத்தின் வயிற்றில் இருந்த குழந்தை துள்ளிய நிகழ்வும் முதலில் லூக்கா நற்செய்தியில் இருந்து பின்வருமாறு மேற்கோள் காட்டப்படுகிறது.

மரியா புறப்பட்டு யூதா மலைநாட்டில் உள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். அங்கே செக்கேரியாவின் வீட்டை அடைந்து எலிசபேத்தை வாழ்த்தினார். மரியாவின் வாழ்த்தை எலிசபேத் கேட்ட பொழுது அவர் வயிற்றில் இருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபேத் தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். அப்பொழுது அவர் உரத்த குரலில் பெண்களுக்குள் நீர் ஆசீர் பெற்றவர். என் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசீர் பெற்றதே. என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று.




ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறு பெற்றவர். (லூக்காஸ்1: 39-58)

இந்தப் பகுதியை மேற்கோள் காட்டித் திருத்தந்தை முதலில் தொடர்பாடலானது எப்படி உடல் மொழியுடன் இறுகப் பின்னிப் பிணைந்தது என்பதைக் காட்டுகிறார்.

மரியாளின் வாழ்த்தைக் கேட்டதும் எலிசபேத்தின் வயிற்றில் இருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளுகிறது. இது மற்றவர்களைச் சந்திப்பதில் ஏற்படும் மகிழ்ச்சியாகும். நாம் பிறப்பதற்கு முன்னரே கற்கின்ற இந்த மற்றவர்களைச் சந்திப்பதில் ஏற்படும் மகிழ்ச்சியானது ஒருவகையில் மற்ற எல்லா தொடர்பாடல்களின் அறிகுறியாகும்.

எம்மைத் தங்க வைக்கின்ற தாயின் வயிறானது தொடர்பாடலின் முதற் பாடசாலையாகும். ஒரு பாதுகாப்பான சூழலில் இருந்து கொண்டு தாயின் இதயத் துடிப்புச் சத்தத்தை கேட்டும் - உடல் ரீதியான தொடர்பை ஏற்படுத்தியும் - வெளி உலகோடு எம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளும் இடம் தாயின் வயிறாகும்.

இந்த தாயினதும் வயிற்றில் இருக்கும் சேயினதும் தொடர்பானது இறுகப் பிணைக்கப்பட்டிருப்பினும் இருவருக்கும் இடையில் பிரிக்கப்பட்டது. நிறைய வாக்குறுதிகளைத் தரும் இந்தச் சந்திப்பானது தொடர்பாடலின் முதல் அனுபவமாகும். நாம் எல்லோரும் ஒரு தாயின் வயிற்றில் இருந்து வந்தவர்கள் என்ற படியால் இந்த தொடர்பாடலின் முதல் அனுபவத்தைப் பெற்றிருக்கிறோம்.

வெளி உலகிற்கு நாம் வந்த பின்னரும் ஒரு வகையில் குடும்பம் என்கின்ற ஒரு வயிற்றின் உள்ளேயே நாம் இருக்கிறோம். குடும்பம் என்கின்ற இந்த வயிறானது பல்வேறுபட்ட நெருங்கிய தொடர்புடைய மனிதர்களால் அமைக்கப்பட்டது. இந்த குடும்பத்தில் நாம் நமது வேறுபாடுகளைக் கடந்து மற்றவர்களோடு இணைந்து வாழக் கற்றுக் கொள்கிறோம். இந்த குடும்ப அங்கத்தவர்களிடையே ஓர் அன்புறவு இருப்பதால் இவர்கள் தமது வயது - பால் என்ற வேறுபாடுகளைக் கடந்து ஒருவரை ஒருவர் ஏற்று வாழ்கின்றனர். இந்த உறவு எவ்வளவு அகலமாகிறதோ - இந்த குடும்ப அங்கத்தவர்களுக்கிடையிலான வயது எவ்வளவு வித்தியாசப்படுகிறதோ - அந்த அளவுக்கு சுற்றுச்சூழல் வளமுள்ளதாகிறது.

இந்த உறவுதான் நாம் பேசும் மொழியின் வேராகி திரும்பவும் அதே உறவுவைப் பலப்படுத்துகிறது. நாம் நமது மொழியை உருவாக்குவதில்லை.

மொழியை நாம் பெற்றுக் கொண்டமையால் அதைப் பயன் படுத்த முடியும். குடும்பத்தில்தான் நாம் எமக்கு எமக்கு முன்னே சென்றவர்கள் பாவித்த நம் தாய் மொழியைப் பேசக் கற்றுக் கொள் கிறோம். குடும்பத்தில் எமக்கு முன்னேயும் பலர் வாழ்ந்துள்ளார்கள் என்பதை உணர் கிறோம். அவர்கள் எம்மைக் குடும்பத்தில் வாழவும் - நேரகாலத்தில் வாழ்வை உரு வாக்கவும் - நல்லதையும் அழகானதையும் செய்யவும் அழைப்பு விடுகிறார்கள்.

இங்கு நாம் கொடுக்கலாம், ஏனென்றால் நாம் பெற்றுள்ளோம். திரும்பத் திரும்ப நடைபெறுகின்ற இந்த கொடுக்கல் வாங்கல் வட்டமானது குடும்பத்தின் அங்கத்தவர்களோடும் மற்றவர்களோடும் தொடர்பாடலை உருவாக்கும் சக்தியைத் தருகிறது. இதுவே எல்லாத் தொடர்பாடல்களுக்கும் மாதிரியாகும்.

பெற்றோர் தமது புதிய குழந்தைகளைத் தூங்க வைக்கும் போது கடவுளின் பாதுகாவலிலே அவர்களை ஒப்படைத்து கடவுளையே அவர்களைப் பாதுகாக்கும் படி வேண்டுகின்றனர். குழந்தைகள் சிறிது வளரும் போது பெற்றோர் அவர்களுக்குச் சில சிறிய செபங்களைச் சொல்லக் கற்றுக் கொடுக்கின்றனர். மற்றவர்களை அன்போடு நினைத்து - அப்பப்பா அம்மம்மா - மற்றும் உறவினர்கள் - வருத்தத்தில் இருப்போர் - மற்றும் தேவையில் இருப்போர் - போன்றோர்க்கு கடவுளின் உதவியை வேண்டக் கற்றுக் கொடுக்கின்றனர்.

எம்மில் அனேகமானவர்கள் எமது குடும்பங்களிற்தான் தொடர்பாடலின் கிறிஸ்த்தவக் கண்ணோட்டத்தைக் கற்றுக் கொண்டோம்.

தொடர்பாடலின் இந்த கிறிஸ்தவ கண்ணோட்டமானது கடவுள் எம்மீது பொழியும் அன்பைப் போதிக்கிறது. இந்த அன்பை நாம் குடும்பத்தில் ஒருவர் மற்றவர்க்குப் பகிர முடிகிறது. குடும்பத்தில் நாம் ஒருவர் ஒருவரின் முகபாவங்களைப் புரிந்து ஒருவரை ஒருவர் அரவணைக்கவும் ஒருவருக்கொருவர் துணைபுரியவும் கற்றக் கொள்கிறோம். குடும்ப அங்கத்தவர்கள் தாம் ஒருவரை ஒருவர் தெரிந்தெடுக்காவிட்டாலும் ஒருவருக்கொருவர் மிக முக்கியமானவர்களாகி - அமைதியான நேரங்களை உணர்ந்து - ஒன்றாகச் சிரிக்கவும் ஒன்றாக அழவும் செய்கிறோம். இது எம்மிடையே நெருக்கத்தை ஏற்படுத்தி - அதை உணரச் செய்து - தொடர்பாடலின் அர்த்தத்தைப் புரிய வைக்கிறது. நாம் எம்மிடையே இடைவெளிகளைக் குறைத்து - ஒருவருக்கொருவர் நெருக்கமாகும் போது - மகிழ்வையும் நன்றி உணர்வையும் அனுபவிக்கிறோம்.

எல்லா இடங்களையும் விட குடும்பத்தில் தான் நாம் எமதும் மற்றவர்களதும் குறைகளை அன்றாடம் அனுபவிக்கிறோம். குறைகளற்ற ஒரு குடும்பம் இல்லை.

குறைகளையும் குழப்பங்களையும் வலிமையற்ற நிலமை களையும் பார்த்து நாம் பயப்படக் கூடாது. மாறாக அவற்றை எப்படி ஆக்கபூர்வமாகக் கையாளலாம் எனக் கற்றுக் கொள்ள வேண்டும். குடும்பத்தில் நாம் ஒருவர் ஒருவரின் குறைகளையும் குற்றங்களையும் அறிந்திருந்தாலும் ஒருவரை ஒருவர் அன்பு செய்கிறோம். எனவே குடும்பம் மன்னிப்பின் ஒரு பாடசாலையாகிறது.

மன்னிப்பு என்பதே தொடர்பாடலின் ஒரு செயல் முறையாகும். எப்போது குற்றத்திற்கான மனவருத்தம் தெரிவிக்கப்பட்டு அது ஏற்கப்படுகிறதோ - அப்போதே உடைந்த உறவு சரி செய்யப்பட்டு தொடர்பாடல் திரும்பிக் கட்டி எழுப்பப்படுகிறது.

உலகில் மற்றவர்கள் திட்டும் போது - தவறான வார்த்தைகளைப் பாவிக்கும் போது - மற்றவர்களைப் பற்றிக் குறைவாகப் பேசும் போது - வதந்திகளால் நஞ்சூட்டும் போது - குடும்பங்கள் தொடர்பாடலை ஓர் ஆசீர்வாதமாகக் கற்றுத் தரமுடியும்.

இன்றைய நவீன ஊடகமானது குறிப்பாக இளைஞர்களின் தவிர்க்கப்பட முடியாத ஒரு அங்கமாகித் தொடர்பாடலுக்கு உதவியாகவும் - உபத்திரவமாகவும் வந்து குடும்பங்களிலும் குடும்பங்களுக்கிடையேயும் தொடர்பாடலுக்குத் தடையாகலாம். ஊடகமானது மற்றவர்களுக்குச் செவிசாய்ப்பதைத் தடுக்கும் போது - அமைதியையும் இளைப்பாற்றியையும் கெடுக்கும் போது - தொடர்பாடலுக்குத் தடையாகலாம். இத்தருணங்களில் நாம் அமைதியானது தொடர்பாடலின் இணை பிரிக்கப்படாத ஒரு பகுதி என்பதை மறந்து போகிறோம். அமைதியான பொழுதுகளில் அதிக அர்த்தம் நிறைந்த வார்த்தைகள் உயிர் வாழ முடியாது.

மக்கள் செய்திகளைப் பகிரும்போது - தூர நண்பர்களுடன் தொடர்பைப் பேணும் போது - நன்றி பாராட்டும் போது - மன்னிப்பை வேண்டும் போது - புதிய உறவுகளுக்குக் கதவுகளைத் திறக்கும் போது தொடர்பாடலுக்குத் துணையாகலாம்.

குடும்பம் தொடர்பாடலின் சமூகமாகும். குடும்பத்தின் ஒற்றுமையில் நாம் தொடர்பாடலைக் கற்க வேண்டும். இங்கு நாம் கடந்த காலத்தைப் பாதுகாக்கப் போராடக் கூடாது - மாறாகப் பொறுமையோடும் நம்பிக்கையோடும் நாம் வாழும் எதிர் காலத்தை தொடர்பாடல் வழி கட்டி எழுப்ப வேண்டும் என்பதே திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களின் செய்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 13




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 219

# புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்து ஆரோக்கியமாக வாழ்வோம்

வைத்தியகலாநிதி
கிரிசாந்தி இராஜசூரியர்

மருத்துவ உலகில் விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப விருத்தியானது மனிதனது ஆயுள் எதிர்பார்ப்பில் அதிகளவு நீட்சியை ஏற்படுத்தியிருப்பினும், தற்காலத்தில் உயிர்கொல்லி நோய்களுடனான மனிதனது போராட்டங்கள் அதிகரித்து வரும் போக்கையே காணக்கூடியதாகவுள்ளது. இத்தகைய உயிர்கொல்லி நோய்களில் புற்றுநோயானது முக்கியமான ஒன்றாக காணப்படுவதுடன், இந்த நோய்த்தாக்கமானது உலகெங்கும் பல்வேறு வயதுப் பிரிவினரிடையே அதிகரித்துவரும் போக்கை அவதானிக்கலாம். இலங்கையும் இதற்கு விதிவிலக்கானதல்ல. புற்றுநோயானது அண்மைக் கால வரலாற்றைக்கொண்ட ஒரு நோயல்ல. இது கி.மு.2250 களில் காணப்பட்டிருப்பதற்கான அடையாளங்கள் எகிப்திய பிரமிட்டுக்களிலிருந்து எடுக்கப்பட்ட மனித உடல்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து வெளியாகியுள்ளது. புற்றுநோய் எவ்வயதுப் பிரிவினரையும் தாக்கலாம். எத்தகைய வாழ்க்கைத்தர நிலையிலுள்ளவர்களையும் தாக்கலாம். ஆயினும் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வின்மையே இந்த நோய்த்தாக்கத்திலான அதிகரித்துவரும் இறப்புக்களுக்குக் காரணமாக அமைகின்றது. இத்தகைய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது இன்றைய நிலையில் மிகவும் முக்கியமானது.

புற்றுநோய் ஏற்படுவதற்கு பல்வேறு காரணிகள் காரணமாக அமையலாம். இந்தக் காரணிகளை பௌதிக (Physical), இரசாயன (Chemical), உயிரியல் (Biological), மற்றும் பரம்பரை அலகு (Genetic) காரணிகள் என வகைப்படுத்துவர். பௌதீக காரணிகளில் சூரியக்கதிர்கள் மற்றும் UV கதிர்களினாலான தாக்கம் முக்கியமானது. இரசாயன காரணிகளில் சிகரெட், பீடி, சுருட்டு முதலானவற்றிலுள்ள நச்சுப்பதார்த்தங் கள் மதுபானம், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை முதலானவை முக்கியமானவை. உயிரியல் காரணிகளில் Human Papillomo Virus, (HPV) வைரஸ்கள் மற்றும் எப்ஸ்டீன் பார் வைரஸ் (Ebstain Bar Virus), எயிட்ஸ் வைரஸ் (HIV) போன்ற வைரஸ்களின் தாக்கம் முக்கியமானது. இவற்றில் HPV வைரஸானது கர்ப்பப்பை கழுத்து புற்றுநோய்க்குக் காரணமாக அமைவதுடன் இந்த வைரசுக் கள் முறைகேடான பாலியல் தொடர்புகளினால் கடத்தப்படுகின்றன. புற்றுநோய்களை ஏற்படுத்தும் காரணிகளில் சில மனிதனால் கட்டுப்படுத்தக் கூடியனவாகவும், சில கட்டுப்படுத்த முடியாதனவாகவும் காணப்படுகின்றன. கட்டுப்படுத்தக்கூடிய சில காரணிகளாகப் பின்வருவனவற்றைக் கருதலாம்.

1. புகைப்பிடித்தல் (சிகரெட், பீடி, சுருட்டு, புகையிலை)
2. மதுபானம் அருந்துதல்
3. முறைகேடான பாலியல் தொடர்புகள்
4. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை பாவனை

இவை மனிதனால் கட்டுப்படுத்த இயலுமான காரணிகளாக காணப்படுவதனால், இத்தகைய பழக்க வழக்கங்களைத் தவிர்ப்பதன் மூலம் இவை ஏற்படுத்தும் புற்றுநோய்த் தாக்கத்திலிருந்து எம்மைப்பாதுகாக்க முடியும். உதாரணமாக புகைப்பிடித்தலினால் மூக்கு, வாய்க்குழி, குரல்வளை, தொண்டை, களம், நுரையீரல், ஈரல், சதையம், வயிறு, சிறுநீரகம், சிறுநீர்ப்பை, பெருங்குடல், சூலகம், கர்ப்பப்பைக் கழுத்து, எலும்பு மச்சை முதலான அவயவங்களில் புற்று நோய்த் தாக்கம் ஏற்படலாம். மது பாவனையால், வாய், தொண்டை, குரல்வளை, களம், ஈரல், மலக்குடல் மற்றும் மார்பகம் முதலிய அவயவங்களில் புற்றுநோய்த்தாக்கம் ஏற்படலாம். வெற்றிலை, பாக்கு மற்றும் சுண்ணாம்பு பாவனையால் வாய் மற்றும் களப் பகுதிகளில் புற்றுநோய்த் தாக்கம் ஏற்படலாம்.


இலங்கையின் வடமாகாணத்தில் அதிகரித்து வரும் புற்றுநோய்த்தாக்கமானது, முறையே வாய், தொண்டைக்குழி, மார்பகம், களம், தைரொயிட்சுரப்பி, கர்ப்பப்பை கழுத்து, பெருங்குடல், நுரையீரல் முதலானவை தொடர்பாகக் காணப்படுகின்றது. ஆயினும் புற்றுநோய்க்கான ஆரம்பநிலையிலான அடையாளங்கள் பற்றி அவதானமாக இருக்குமிடத்து நோயினை அரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்தலாம். அதாவது வாய்ப்புற்று நோயைப் பொறுத்த வரையில் வாயில் ஏதேனும் அசாதாரண வளர்ச்சி காணப்படுமிடத்து அது எத்தகைய நோவையும் ஏற்படுத்தாத பட்சத்திலும், வைத்திய ஆலோசனையை உடனடியாக நாடுவது நோயை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்த வழி வகுக்கும். இதற்கு கண்ணாடியின் முன்நின்று வாயை அடிக்கடி பரிசோதிப்பது அவசியமானது. இது போல மார்பகப்புற்று நோயை மார்பிலுள்ள கட்டிகள், முலைக்காம்பினூடாக நீர் வடிதல் (Nipple Discharge), குழி விழுதல் (Dimpling) உள்ளிழுக்கப்பட்ட முலைக்காம்பு (Retracted nipple), தோலில் ஏற்படும் மாற் றங்கள் முதலான அறிகுறிகளால் அடையா ளப்படுத்தலாம். குறிப்பாக 45 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மார்பக புற்றுநோய்க் கான திரையிடலை (Screening) இரண்டு, மூன்று வருடங்களுக்கு ஒரு தடவையேனும் மமோகிராம் (Mammogram) முறை மூலம் மார் பகப் புற்றுநோயை அறிகுறிகளே இல்லாத ஆரம்பநிலையில் கண்டுபிடிக் கலாம். ஆயினும், இலங்கையின் அரச வைத் திய சாலைகளில் எத்தகைய சேவைகள் புற்றுநோய்க்கான அறிகுறிகள்அல்லாத குறித்த வயதுப் பிரிவு சார் அனைத்துப் பெண் களும் இன்னும் வழங்கப்பட முடியாத நிலை உள்ளதால் 20 வயதுக்கு மேற்பட்ட அனைத் துப் பெண் களும் மாதமொரு தடவையே னும் சுய மார்பக பரிசோதனையை மேற் கொள்வதன் மூலம் நோயின் அறிகுறிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து பொருத் தமான சிகிச்சை மூலம் நோயைக் குணமாக் கலாம். இது போலவே கர்ப்பப்பைக் கழுத்து புற்றுநோயானது மாதவிலக்கு நின்ற பின்னான உதிரப்போக்கு, மாதவிலக்கின் போதான கடும் உதிரப்போக்கு மற்றும் துர் நாற்றமான திரவப்போக்கு முதலான அறி குறிகளால் அடையாளப்படுத்தலாம். இந்தப் புற்றுநோய்க்கான திரையிடல் பரிசோதனை (Screening test)Papsmear எனப்படும். இந்தச் சேவையானது இலங்கையில் ஒரு சில அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளிலேயே பெறப்படலாம். இதற்கு மாற்றீடான வேறு திரையிடல் பரிசோதனை முறைகள் மூலம் கர்ப்பப்பை கழுத்து புற்றுநோயை அடையாளப்படுத்தும் முறையானது யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது வருங்காலத்தில் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும். மேலே கூறப்பட்டது போல ஏனைய புற்றுநோய்களுக்கும் ஆரம்ப அறிகுறிகள் உள்ளன. களப் புற்றுநோய்க்கு அறிகுறியாக உணவு விழுங்குவதில் உள்ள சிரமங்கள் அமையலாம். குடல் மற்றும் குதப்புற்றுநோய்களுக்கு மலச்சிக்கல், மலத்துடன் இரத்தம் வெளியேறுதல், மலம் தார் போன்ற கரிய நிறத்துடன் காணப்படல், குருதிச்சோகை மற்றும் வயிற்றுவலி முதலானவை அறிகுறிகளாக அமையலாம். ஆயினும், பொதுவாகக் கூறுமிடத்து மேற்கூறிய அறிகுறிகள் தவிர்ந்து வேறு அறிகுறிகள் அதாவது பசியின்மை காரணமற்ற உடல் எடை குறைவு, தொடர்ச்சியான காய்ச்சல், வீக்கங்கள் அல்லது கட்டிகள், தொடர்ச்சியான இருமல் சளியுடனான இரத்தப்போக்கு மற்றும் அதிகாலையில் ஏற்படும் தலைவலி முதலான அறிகுறிகள் இரண்டு வாரங்களுக்கு மேலாக நீடித்தால் வைத்திய ஆலோசனை பெறப்பட வேண்டும். ஏனெனில் இவையும் புற்று நோய்க்கான ஆரம்ப அறிகுறிகளாக அமையலாம்.

தற்காலத்தில் அதிகரித்து வரும் புற்று நோயானது ஒரு சாபக்கேடான வியாதியோ அல்லது சரும வியாதியோ அல்ல. ஆகவே புற்றுநோயிலிருந்து எம்மைப் பாதுகாப்பது எமது தலையாயக் கடமையாக அமைவதுடன், புற்றுநோயினால் பாதிக்கப்படு பவர்களுக்கு ஒரு சமூகமாக எம்மாலியன்ற அனுசரணையை வழங்குவது இந்தச் சமூகம் சார்பான ஒவ்வொருவருக்குரியதுமான அழைப்பாகும். நாம் எமது சமூகத்திடம் வேண்டிக்கொள்ளவது,


பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுசரணை வழங்குவோம் (Support The Fighters )
நோயுடன் போராடி குணமானவர்களை மெச்சுவோம் (Admire the survivers)
நோயினால் மரித்தவர்களைக் கனம் பண்ணுவோம் (Honour the taken)


Basal cell cancer
Basal skin cell layer







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

# டிரையம்பின் புதிய அறிமுகம்



டிரையம் இன்டர்நஷனல் லங்கா நிறுவனம் அண்மையில் மெஜஸ்டிக் சிட்டியில் அமைந்துள்ள அதன் டிரையம் பிரத்தியேக புட்டிக் நிலையத்தில் இலங்கை பெண்கள் கட்டாயம் கொண்டிருக்க வேண்டிய முன்புறமாக பொருத்திக்கொள்ளக் கூடிய பிரா வகைகளை அறிமுகம் செய்துள்ளது. மாபெரும் விற்பனை ஊக்குவிப்பை டிரையம் முன்னெடுத்த அதேநாளில் 100 இற்கும் மேற்பட்ட டிரையம்ப் பின் தீவிர வாடிக்கையாளர்கள் புட்டிக்குக்கு பயணம் செய்திருந்தனர்.

இந் நிகழ்வில் அனைவரையும் கவர்ந்த டிரையம் முன்புறம் பொருத்திக்கொள்ளக்கூடிய பிரா வகைகளை சில்லறை மற்றும் நேரடி விற்பனை முகாமையாளர் நதீக விக்ரமகே அறிமுகம் செய்து வைத்தார். டிரையம்பின் முன் புறமாக பொருத்திக்கொள்ளக்கூடிய பிரா வகைகள் ஒவ்வொரு பெண்ணுக்கும் எடுப்பான தோற்றத்தை வழங்குகிறது. அழகிய லேஸ் வேலைப்பாடுகளுடன் கூடிய டிரையம் இன் இந்த தெரிவுகள் முன்னெப்போதும் அனுபவித்திராத கவர்ச்சியையும், மதிமயக்கும் தோற்றத்தையும் பெண்களுக்கு வழங்குகிறது.

டிரையம்பின் முன்புறம் பொருத்தக் கூடிய பிரா வகைகள் சிறந்த ஷேப்வெயார் மற்றும் சிறந்த வடிவங்களை கொண்டுள்ளது. இந்த தெரிவுகள் உயர் சௌகரியத்தையும், கனகச்சிதத்தையும் வழங்குகிறது. இந்த தெரிவுகள் ஐரோப்பிய தரங்களுக்கமைவாகவும், இலங்கை பெண்களின் உடல் தோற்றத்துக் கேற்பவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

கப் மற்றும் விங்க்ஸ்களின்; மீது லேஸ் வேலைப்பாட்டைக் கொண்ட டிரையம்ப்பின் முன்புறம் பொருத்திக்கொள்ளக்கூடிய பிரா வகைகள் பல்வேறு புஷ் அப் மற்றும் half cup ஸ்ரைல்களில் கிடைக்கின்றன. மென்மையான இரு துணிகளை கொண்ட இந்த தெரிவுகள் கவர்ச்சி மற்றும் எடுப்பான தோற்றத்தை வழங்குகிறது.

இந்த தெரிவுகளின் ஒவ்வொரு பகுதியும் புலனுணர்வை தூண்டும் வகையிலும், மிகச்சிறப்பான தோற்றத் தையும், உணர்வையும் கொடுக்கக்கூடிய வகையில் விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மென்மையான மற்றும் நேர்த்தியான பூர்த்தியானது நீங்கள் அணிந்திருக்கும் மேலாடையின் மீது புலப்படாத வகையில் அமைந்துள்ளது. இந்த புதுமையான தெரிவுகள் இன்றைய பேஷன் ஆடைகளின் கீழ் மென்மையான தோற்றத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

'டிரையம்பின் முன்புறம் பொருத்திக்கொள்ளக்கூடிய அனைத்து பிரா வகைகளும் திருமண ஆடைகள் முதல் மாலைநேர ஆடைகள் வரையான அனைத்திலும் பெண்களின் இயற்கையான உடல் தோற்றத்தை வெளிப்படுத்துகிறது. இலங்கைப் பெண்களின் இயற்கையான உடல் தோற்றத்தை மேம்படுத்திக் காட்டக்கூடிய வகையில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன' என டிரையம் இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் செயற்பாட்டு தலைவர் அமல் பெர்னாண்டோ தெரிவித்தார். (த)

# ரயர் உள்மடிப்புச் சந்தையில் மப்ஸ் இன்டர்நஷனல் கம்பனி




வாகன ரயர்கள், ரயர் ரீபில்டிங் மற்றும் கட்ட மூலப்பொருள்கள் வியாபாரத்தில் ஈடுபடும் மப்ஸ் இன்டர்நஷனல் கம்பனி அண்மையில் ரயர் உள்மடிப்பு உற்பத்தி மற்றும் விநியோக செயற்பாடுகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளது.

வட்டரேக, பன்னலுவ சுதந்திர வர்த்தக வலய பகுதியில் அமைந்துள்ள நவீன வசதிகள் படைத்த தொழிற்சாலையில் இந்த மப்ஸ் இன்டர்நஷனல் ரயர் உள்மடிப்பு தயாரிப்புகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இலங்கை சந்தையில் ரயர் உள்மடிப்பு நாமங்களான 'மப்ஸ்' மற்றும் யுனிகோர்ன் ஆகியன சுபவேளையில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தன.

ரயர் உள்மடிப்புகள், வாகன ரயர்களுக்கு நீண்ட ஆயுளை கொடுக்கும் வகையில் அமைந்துள்ளன. அதாவது, ரயர்களுக்கும் ரிம்களுக்கும் இடையிலான உராய்வை குறைப்பது இதன் மூலம் இடம் பெறுகிறது.

மப்ஸ் இன்டர்நஷனல் பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர் அசங்க ரத்நாயக்க கருத்து தெரிவிக்கையில், 'இலங்கைச் சந்தைக்கு ஒரு மாத காலப்பகு திக்கு அவசியமான மொத்த தேவை யில் மூன்றில் ஒரு பங்கை உற்பத்தி செய்யும் ஆற்றலை கொண்டுள்ளது. எமது தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் ரயர்களின் உள்மடிப்பு என்பது உலகத்தரம் வாய்ந்தனவாக அமைந்துள்ளன. எமது நாட்டின் வாகன உரிமை யாளர்களுக்கு பசுமையான அனுபவத்தை வழங்கும் வகையில் அமைந்திருக்கும். புதிய உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பத்தை பின்பற்றி 'மப்ஸ்' மற்றும் 'யுனிகோர்ன் ரயர் உள்மடிப்பு வர்த்தக நாமங்களை உற்பத்தி செய்கிறோம் – என்றார்.

மேலும், இந்த ரயர் உள்மடிப்பு உற்பத்தி என்பது பல ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் மூலமாக முன்னெடுக்கப்படுகிறது. காலநிலை மாற்றங்கள் மற்றும் வீதிகளின் நிலைகள் போன்றன தொடர்பில் இந்த ஆய்வுகளில் ஆராயப்பட்டிருந்தது. இதன் மூலம் உள்நாட்டு சந்தைக்கு மிகவும் பொருத்தமான ரயர் உள்மடிப்புகளை உற்பத்தி செய்ய முடியும். எமது தொழிற்சாலையின் திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். இதன் மூலம் 2016ஆம் ஆண்டில் நாம் சர்வதேசச் சந்தையில் பிரவேசிக்க திட்டமிட்டுள்ளோம் – என ரத்நாயக்க மேலும் கூறினார். (த)

# நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் விற்பனை பிரதிநிதிகளுக்கு விருதுகள்



இலங்கையின் முதற்தர மூலிகை அழகுச்சாதன வர்த்தக உற்பத்தி நாமமான 'நேச்சர்ஸ் சீக்ரட்ஸ்' உற்பத்திகளை தயாரிக்கும் நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனத்தின், விற்பனை பிரதிநிதிகளின் வருடாந்த விருது விழா மற்றும் மாநாடு, அண்மையில் மிக கோலாகலமாக நடைபெற்றதுடன் நாடுதழுவிய ரீதியாக 100 இற்கும் மேற்பட்ட விற்பனை பிரதிநிதிகள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் நிறுவனத்தின் தலைவர் / முகாமைத்துவ பணிப்பாளர் சமந்தகுமாரசிங்க தலைமையில் நடைபெற்ற இவ்விருது வழங்கும் விழாவில் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது நேச்சர்ஸ் சீக்ரட்ஸின் வர்த்தக நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்தாண்டு சிறப்பாக செயற்பட்ட விற்பனை பிரதிநிதிகளுக்கான விருதுகள், சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

வருடத்தின் சிறந்தவிற்பனை பிரதிநிதிகளுக்கான சைனிங் ஸ்டார் (Shining star) விருது உட்பட பல விருதுகள் வழங்கப்பட்டதுடன் அந்த அத்தனை விருதுகளையும் கொழும்பிற்கு வெளிபிரதேசங்களை சேர்ந்த விற்பனை பிரதிநிதிகள் வென்றெடுத்தமை விசேட அம் சமாகும். இதேவேளை– பெண்டா பேபி உற்பத்திகளை அதிகம் விற்பனை செய்த பிரதிநிதிகள் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (த)

# உயர் வெகுமதி வழங்கிய மஹாபொல லொட்டோ



லொத்தர் சீட்டிழுப்பில் புத்தாக்கங்களை படைத்து வரும் மஹாபொல லொட்டோ, தனது முதலாவது விற்பனையாளர் மாநாட்டின் போது, நாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்த விற்பனை பிரதிநிதிகளை கௌரவித்திருந்தது. பிரதானமாக பெருமளவு பெறுமதி வாய்ந்த கொழும்பு மற்றும் காலி பிரதேசங்களைச் சேர்ந்த சிறப்பாக திறமைகளை வெளிப்படுத்தியிருந்த மொஹமட் மொஹைதீன் காசிம், திருமதி. கே.சேனநாயக்க, ஆசிரிபால மற்றும் நிமல்சிரி விக்ரமசேகர ஆகியோருக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகளை வழங்கியிருந்தது.

தமது வெற்றிகரமான செயற்பாடு தொடர்பில் காசிம் கருத்து தெரிவிக்கையில், 'ஒரு வருட காலப் பகுதிக்கு மேலாக மஹாபொல லொட்டோ உடன் பணியாற்றுவதன் மூலமாக, பெருமளவு அனுபவத்தை பெற்றுள்ளேன். அத்துடன், வாடிக்கையாளர்களுடன் எவ்வாறு பணியாற்றுவது என்பது தொடர்பிலும் அறிந்து கொண்டுள்ளேன். வாடிக்கையாளர்களுடன் நட்புறவாக பழகுவதன் மூலம், அவர்களை மீண்டும் மீண்டும் வர வைக்க முடியும் என்பதை அனுபவ ரீதியில் உணர்ந்து கொண்டேன்– என்றார்.

மஹாபொல லொட்டோ கூட்டாண்மை தொடர்பாடல்கள் முகாமையாளர் ஹர்ஷினி சிரிநந்த கருத்து தெரிவிக்கையில்; 'எமது சிறந்த விற்பனை பிரதிநிதிகளை கௌரவிப்பது என்பது அதிகளவு வரவேற்கத்தக்க விடயமாகும். அவ[illegible] வெற்றிகரமான செயற்பா[illegible] பகிர்ந்து கொள்வது மற்றும் அவர்களிடமிருந்து அறிந்து கொள்வது [illegible] வலையமைப்பை மேலும் வளர்ச்சியடையச் செய்ய முடியும். சகல குழு அங்கத்தவர்களும் அவர்க[illegible] அங்கத்தவர்கள் சிறப்பாகச் செயலாற்றியதை பார்த்து, தாமும் சிறப்பாக செயலாற்றுவதற்கு ஊக்குவிக் கப்படுகின்றனர் – என்றார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அண்மையில் மஹாபொல லொட்டோ கொழும்பு தலைமையகத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் நாடு முழுவதும் பயணத்தை மேற்கொண்டிருந்தார். இதன் போது பல விநியோகத்தர்களை இவர் சந்தித்து, வளர்ச்சிக்காக அடுத்த கட்டமாக எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை கேட்டறிந்திருந்தார். மேலும், அவர்களின் கருத்துப்படி, மஹாபொல லொட்டோ என்பது வேகமாக வளர்ச்சியடையும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது. அடுத்து வரும் வாரங்களில் சந்தைப்படுத்தலுடன் தொடர்புடைய பல செயற்பாடுகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது– என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ உதவிகளை எதிர்பார்த்திருந்த முன்னாள் போராளி ஒருவருக்கு ஜேர்மனைச் சேர்ந்த டியுஸ்பேர்க் கரப்பந்தாட்ட விளையாட்டணி தனது உதவியை 'உதவும் இதயங்கள்' அமைப்பினூடாக வழங்கியுள்ளது.
அதன் இலங்கைக்கான இணைப்பாளர் ச.சஜீவன் உதவிகலை எடுத்து சென்று சேர்ப்பித்தார்.







மடு கல்வி வலயத்தில் உள்ள பாப்பாமோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, திருக்கேதீஸ்வரன் இந்துகலவன் பாடசாலை, கன்னாட்டி றோ.க.த.க. வித்தியாலயம் ஆகிய 3 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு பாப்பாமோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் எஸ்.பி. சேவியர் தலைமையில் ஆசை அண்ணாவின் அன்புக் கனவுகள் அமைப்பினால் அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இந்திரன் இந்திரகுமாரால் வவுனியா ஈஸ்வரிபுரத்தில் வசிக்கும் இரு பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு 70 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடுகள் 'தமிழ் விருட்சம்' சமூக ஆர்வலர்கள் அமைப்பின் ஊடாக வழங்கப்பட்டது.












மன்/பன்னவெட்டுவான் அ.த.க. பாடசாலையின் அதிபர் அன்டன் லீனஸ் தலைமையில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான ஆசிரியர்களை ஒழுங்குபடுத்தும் நிகழ்வும் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வும் 'அரும்புகள்' கல்வி வளர்ச்சித் திட்ட அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்டது. இதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





மேல் மாகாணத்தின் களனி கல்வி வலயத்தைச் சேர்ந்த வத்தளை புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய மாணவிகள் அன்பின் கல்விக்கூடம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த 26ஆம் திகதி தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த இயற்றாலை அ.மி.த.க. பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர். இனங்களுக்கிடையிலான நட்புறவுப் பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் வெளிப்பாடாக இந்த நிகழ்வு இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் அருட்சோதரி காந்தி பெரேரா தலைமையில் 15 ஆசிரியர்களும் 30 சிங்கள தமிழ் முஸ்லிம் மாணவிகளும வருகை தந்திருந்தனர். இவர்களில் மாணவ தலைவிகள், பெண் சாரணியர்கள், முதல் உதவிப் பிரிவினர் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர், கலை, கலாசாரப் பிரிவினர் என அனைத்து வகைச் செயற்பாட்டு மாணவர்களும் உள்ளடக் கப்பட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் – 17

# 21 கிலோ ஹெரோயின், 4145 கிலோ கஞ்சா 100 நாள் வேலைத்திட்டத்தில் கைப்பற்றல்

கொழும்பு, மே 31

அரசின் 100 நாள் வேலைத்திட்டதில் 21 கிலோவுக்கும் மேற்பட்ட ஹெரோயின், மற்றும் 4145 கிலோ கஞ்சா போன்றன கைப்பற்றப்பட்டுள்ளதாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

அரசின் 100 நாள் வேலைத் திட்டதில் பொலிஸாரினால் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நாடளாவிய ரீதியில் உள்ள 438 பொலிஸ் நிலையங்களிலும் உள்ள போதைப்பொருள் தடுப்புப் பிரிவினால் இந்த விசேட திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதற்கமைய போதைவஸ்துகள் கைப்பற்றப்பட்டதுடன் மட்டுமல்லாது போதைப்பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி பாடசாலை மாணவர்களுக்கு மற்றும் சிவில் பாதுகாப்புக் குழு ஊடாகப் பொது மக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த விசேட நடவடிக்கைகளின் போது கஞ்சாவுடன் தொடர்புபட்ட 21 ஆயிரத்து 290 நபர்களும் மற்றும் ஹெரோயினுடன் தொடர்புபட்ட 10 ஆயிரத்து 399 நபர்களும் கைது செய்யப்பட்டுச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது–என்றார். (த-10)

# மியன்மார் முஸ்லிம்களின் படுகொலையை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அரசு

## அமைச்சர் இராதாகிருஷ்ணன் கோரிக்கை

கொழும்பு, மே 31

மியன்மாரில் வாழும் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவதை உடனடியாக நிறுத்துவதற்கு அந்த நாட்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மியன்மார் முஸ்லிம்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

மியன்மாரில் வாழும் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவதை உடனடியாக நிறுத்துவதற்கு அந்த நாட்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான அழுத்தத்தை இலங்கை அரசு மியன்மார் அரசுக்குக் கொடுக்க வேண்டும். இன ரீதியாக முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இதனை சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சி என்ற வகையில் மலையக மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிக் கின்றது.

எந்த ஓர் இனமும் ஒரு நாட்டில் வாழுகின்ற இன்னோர் இனத்தால் அழிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. அந்த வழியையும் வேதனையையும் இலங்கையின் அனைத்து மக்களும் நன்கு அறிவார்கள். அதிலும் குறிப்பாக இலங்கையின் சிறுபான்மை மக்கள் அதன் வேதனையை கடந்த 30 வருடங்களுக்கு மேலாக உணர்ந்தவர்கள். அந்த வகையில் அதன் வலியும் வேதனையும் எமக்கு நன்கு தெரியும்.இந்த விடயம் தொடர்பாக உலகம் முழுவதும் இருக்கின்ற அனைத்து மக்களும் மனிதாபிமான ரீதியாக இணைந்து குரல் கொடுக்க முன்வர வேண்டும்.

இந்த விடயத்தில் இலங்கையில் இருக்கின்ற முஸ்லிம்கள் தார்மீக ரீதியாக எடுக்கும் அத்தனை செயற் பாடுகளுக்கும் எனது முழுமையான ஒத்துழைப்பை வழங்க நான் தயாராக இருக்கின்றேன். இதற்கான அமைதிப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து உலக நாடுகளுக்கு இந்தச் செய்தியைக் கொண்டு செல்ல அனைத்து வழிகளிலும் முஸ்லிம்களுடன் இணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றேன்–என்றார்.

(த-10)


STUDY NURSING IN BULGARIA
WORK IN GERMANY




- RECOGNIZED BY: SRI LANKA MEDICAL COUNCIL(SLMC), WORLD HEALTH ORGANIZATION (WHO), GENERAL MEDICAL COUNCIL (GMC) -UK, AUSTRALIAN MEDICAL COUNCIL, MEDICAL COUNCIL OF USA.
- GURANTEED WORK IN GERMANY AFTER COMPLETION OF STUDIEES.
- WORLD RECOGNIZED NURSING COURSES.
- 100 % VISA GURANTEED.

STUDENT CONSULTANCY UNIT
RED CROSS CONSULTANCY SERVICES
Consultancy arm of the Sri Lanka Red Cross Society
3rd Floor, Red Cross BLDG, No. 106, Dharmapala Mw, Colombo 07
Tel : 011 434 7070 Mob : 077 670 0009, 077 670 2222
Fax : 011 268 2876 Email : admission@rcscu.lk Web : www.rcscu.lk



VACANCY IN COLOMBO
Clerk & Data Entry Operators
For Graduates and School leavers
For Females Candidates
Accommodation provided at Wellawatte
Call for interview
Monday to Friday 9 am to 5 pm
Tel: 0112 500281,
Email: supplysirs@gmail.com
SUPPLY AND LOGISTIC SERVICES



துபாய் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு
TANZIFCO EMIRATES LLC

| S/No | Category | Qty | சம்பளம் ( 1AED = LKR.36 ) |
|---|---|---|---|
| 01. | ஆண் சுத்திகரிப்பாளர்கள் | 65 | AED.700 + AED.150 உணவு |
| 02. | பெண் சுத்திகரிப்பாளர்கள் | 27 | AED.700 + AED.150 உணவு |

நிபந்தனைகள் & சலுகைகள் : 1 AED = Rs. 36.00
- வேலைக்காலம் 2 வருடம்
- வேலை நேரம் - 8 மணிநேரம் ,
- மேலதிகவேலைநேரம் ( Overtime ) - U.A.E நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.
- லீவு வசதி மற்றும் காப்புறுதி - U.A.E நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது. • தங்குமிடம்,மருத்துவ வசதி வழங்கப்படும்.
- ஆண்களுக்கு ஒரு வழி விமானச்சீட்டும்,பெண்களிற்கு இரு வழி விமானச்சீட்டுகள் வழங்கப்படும்

HOT LINE : 0779 333939
max adz
MIDDLE EAST LINK TOURS & TRAVELS
No.629/1A,Wattuman Kada Junction,Kaluthara South
Tel : 034 2236669,Email : middleeslink@sltnet.lk LL.NO.2901



மக்கள் வங்கி
கொடிகாமம் கிளை
வாடிக்கையாளர்களுக்கு
மேலும் சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன்
நவீன வசதிகள் நிறைந்த
மக்கள் வங்கியின்
சாவகச்சேரி கிளையுடன் இணைந்த
கொடிகாமம் கிளை
மக்கள் வங்கியின்
பிரதான நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்
என்.வசந்தகுமார் அவர்களின்
அழைப்பின் பேரில்
மக்கள் வங்கியின் தலைவர்
ஹேமசிறி பெர்னாண்டோ அவர்களினால்
2015 ஜுன் மாதம் முதலாம் திகதி
முற்பகல் 11.30 மணிக்கு
அமையும் சுபவேளையில்
திறந்துவைக்கப்படவுள்ளது என்பதனை
விசேடமாக
இப்பிரதேச மக்களுக்கு மகிழ்வுடன்
அறியத்தருவதோடு,
இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும்
உங்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
பிராந்திய முகாமையாளர்
பிராந்திய தலைமைக் காரியாலயம்
யாழ்ப்பாணம்.
(சி:16410)
(45.3.7)



ROWAD
ROWAD ASIA OVERSEAS (PVT) LTD.
சிங்கப்பூரிலும் கட்டாரிலும்
பணிப்பெண்கள் வேலை வாய்ப்பு

| வேலை | நாடு | தொகை | சம்பளம் |
|---|---|---|---|
| பணிப்பெண் (முதல் தடவை) | சிங்கப்பூர் | 50 | 45,000/= - 50,000/= |
| பணிப்பெண் அனுபவமுள்ளவர்கள் | சிங்கப்பூர் | 50 | 55,000/= - 60,000/= |
| பணிப்பெண் | கட்டார் | 50 | 37,000/= |



ADVT:AL2365/1/5,AL/2365/3/6
ROWAD ASIA OVERSEAS (PVT) LTD.
No. 74, 1st Floor, Sri Sangaraja Mawatha,
Colombo - 10. Tel : 0115 615552, 077 4477280
E-mail : info@rowadasia.com L.L. No. 2365
Hotline : 077 44 77 280



மருத்துவம் பயிலுங்கள்
MBBS - CHINA



- Minimum requirement, 1 Credit pass & 2 Simple pass
- Spot Admissions / Immediate Departure
- Recognized by,
  - WHO
  - Canada, Australia, UK, New Zealand, USA, Thailand, Dubai, Abudhabi, India, Sri Lanka, Pakistan and Bangladesh Medical Councils.

மேலதிக விரபங்களுக்கு
கௌரவ கலாநிதி சேனாநாயக்கவை
கீழேயுள்ள இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
INSTITUTE OF VOCATIONAL STUDIES
476, Kandy, Road, Dalugama, Kelaniya.
Office: 011 2910323
Hotline: 0777444500



Majestic
Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES




பிளாட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15




ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மற்றும் வங்கி உத்தியோகத்தர், அரச உத்தியோகத்தர் தனியார் துறையைச் சேர்ந்தவர். உள்நாட்டு/ வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் நிறைய உள்ளன. நீங்கள் விரும்பும் மணமக்களின் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு

077 138 7596, 021 222 9306
075 554 6000, 071 894 5692

393/14B, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் கோவில் வடக்குப்பக்கம்)
Email: nakapoosanywedding@gmail.com
வாரத்தின் ஏழு நாள்களும் திறந்திருக்கும்.

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் புதிதாக திறக்கப்படவிருக்கும் நவீன காட்சியறை ஒன்றுக்கு காசாளர், விற்பனையாளர், விற்பனைச்சிட்டை எழுதுநர்கள், காட்சியறை முகாமையாளர், காட்சியறை Cleaners போன்றோர்களின் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன - மேற்படி பதவிகளுக்கு முன் அனுபவம் உள்ள / அற்ற ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி: 10.06.2015
விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி
இலக்கம் 117, கண்டி வீதி, கிளிநொச்சி. (கி16415)(9.3)

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் பிரபலம் வாய்ந்த கட்டடப்பொருள் வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு அனுபவம் மிக்க காசாளர், விற்பனைச் சிட்டை எழுதுநர்கள் தேவை. ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்ப முடிவு திகதி: 10.06.2015

விளம்பர இல 5065
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி வீதியில் (Gnanasariyar street) மூன்று பக்க சுற்று மதிலுடன் (Partially Completed Trilet) நன்னீர்க் கிணறு, 20 தென்னைகள், 3மாமரங்களுடன் வீடு கட்டுவதற்கு ஏற்ற வகையில் நான்கு (4) பரப்பு பதினொன்று(11) குழி உடைய காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு பாலச்சந்திரன்
077 317 1947, 011 236 3288 (99726)(9.3)

## நீங்கள் முடி உதிர்வு, பொடுகு, அரிப்பு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா???

இப் பிரச்சினைகளிற்கு தீர்வாக இன்றே பாவியுங்கள் சிறந்த மூலிகைகள் அடங்கிய
"றோயல் அகஸ்தியா கூந்தல் எண்ணெய்"

தலைக்கு குளிர்ச்சியினை அளித்து தலைச் சருமத்துக்கு ஊட்டமளித்து, முடி உதிர்வைத் தடுத்து, கூந்தலைக் கருமையாகவும், நீளமாகவும், அடர்த்தியாகவும் வளரச் செய்து முகத்திற்கு பொலிவை அளிக்கவல்லது.

சந்தைப்படுத்துவோர்: சிவா நறுமணப்பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சந்திரச்சந்திக்கு அருகில்) தொ.பே: 021 222 2567
Manufactured by: Royal Industries Colombo -13

Quality Royal A Kasthiya Hair Oil Guaranteed

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துக் கடைகளிலும், மருந்தகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Sponsor விசாவில் செல்லவுள்ளவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

IELTS Life Skills A1 B1

Spouse விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு UK அரசினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய ஆங்கில சான்றிதழுக்கான பாடநெறி

International Languages

German & Swiss மொழிப் பாடநெறி — Deutsche
French மொழிப் பாடநெறி — French
Netherlands மொழிப் பாடநெறி — Dutch

தகைமையும், அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களைக் கொண்டு பாடநெறிகள் நடத்தப்படுவதுடன் சகல பரீட்சைகளுக்கான ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

Hot Line : 0777-596148

BRITISH COLLEGE
23, Kachchari nallur Rd, Jaffna.
103, Mannar Rd, Vavuniya.
39, Convent Rd, Mannar.
Galle Rd, Dehiwala. 585, Peradeniya Rd, Kandy.

## வாகனம் வாடகைக்கு


நியூமொடல் Box Van
டபிள்கப் (PICKUP)
வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 371 5858
075 800 1648


## தீராத நோயைத் தீர்க்கும் ஆதிவாசி பரம்பரை மூலிகை வைத்தியம்

தீராத நோயைத் தீர்க்கும் வைத்தியர் குருஜீ கிருஷ்ணர் ராஜ்
இந்தியாவில் இருந்து மீண்டும் வருகை தந்துள்ளார்
கடந்த 18 ஆண்டுகளாக வைத்தியம் பார்த்து வருகிறார்.

மூலிகை சிகிச்சையில் குணமாக்கப்படும் நோய்கள்:
முடி உதிர்தல், சிக்கன் குனியாவால் காய்ச்சல், தீராத கை-கால் வலி, ஆஸ்துமா, அலர்ஜி, உடல் பருமன் அதிகரிக்க-குறைக்க, மூட்டு வலி, பயம், ஞாபக சக்தி, பெண்களுக்கான மாதவிடாய் பிரச்சினைகள், புற்றுநோய், மூளைக் காய்ச்சல், மலேரியா, தோல் வியாதி (சொறியாசிஸ்), சர்க்கரை வியாதி, சிறுநீரகக் கோளாறு, இருதயக் கோளாறு, பக்கவாதம், நரம்புத் தளர்ச்சி, தலைவலி, காய்ச்சல், சரவாங்கி, இரத்தக் கொதிப்பு, வாயுக் கோளாறு, உஷ்ணம், நரம்பு வாதம், அல்சர், வயிற்று வலி, இடுப்பு வலி, காக்கா வலிப்பு, ஆண்மை குறைவு, வெட்டைச் சூடு, ஜன்னி சூடு, உள் மூலம்-வெளி மூலம், பகந்தரி மூலம், கை-கால் குடைச்சல், கழுத்து வலி, முகப்பரு, தேமல், வெண் குஷ்டம், டி.பி., வாதம், மஞ்சள் காமாலை, கண்-காது பிரச்சினைகள், தொண்டை நோய்கள், ஆறாத காயங்கள், மூளைக் காய்ச்சல், உட்பட 360இற்கும் மேற்பட்ட வியாதிகளுக்கு பக்க விளைவுகள் இல்லாத மூலிகைச் சிகிச்சைகளால் சிறந்த முறையில் குணமாக்கப்படுகிறது.



காலம் : 31.05.2015 தொடக்கம்... தொடர்பு : 077 547 6635
இடம் : இல. 6, குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். அனைவரும் வருகை
நேரம் : காலை 8.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை தந்து பயன் பெறுக.


## 'வரலாற்றுச் சிந்தனைத் தடம்'

யாழ்ப்பாணம், மே 31

ஏழாலை முத்தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் 'வரலாற்றுச் சிந்தனைத் தடம்' வெளியீட்டு விழா இன்று நடைபெறவுள்ளது. மன்றத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ள இநநிகழ்விற்கு பேராதனை பல்கலைக்கழக தகை சார் பேராசிரியர் சி.தில்லைநாதன் தலைமை வகிக்கவுள்ளார். க.அருமைநாயகம் எழுதிய நூலினை தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கௌரிகாந்தன் பதிப்பு செய்துள்ளார்.

முதல் பிரதியை திருமதி தில்லைநாதன் வழங்க விவேகானந்த சபையின் முன்னாள் பரீட்சை செயலாளர் சி.கந்தசாமி பெற்றுக்கொள்ளவுள்ளார். நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-10)


Free Course ! Web Design
பாடசாலை மாணவர்களுக்கான இலவச பயிற்சிநெறி
KU Education 0777302882
edu.kugroup.info/itf

german cooperation

ஜேர்மனிய அனுசரணையுடன் இலங்கையின் வடமாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் அங்கத்தவர் ஆகுவோம்.

இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவகம் - கிளிநொச்சி
ஜேர்மன் டெக் - வடக்கு

NAITA

இப்பொழுதே விண்ணப்பிக்கவும்

கீழ்வரும் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

பணிப்பாளர் / அதிபர் பதவி

தகைமைகளும் அனுபவங்களும் :

வெளியக விண்ணப்பதாரர்:
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் எந்திரவியலில் இளமாணிப் பட்டம்
அல்லது
எந்திரவியல் மன்றம் (CEI) பழைய பாடத்திட்டம் IIம் பாகம், புதிய பாடத்திட்டம் IIIம் பாகம் / இலங்கை எந்திரவியல் நிறுவகம், பழைய பாடத்திட்டம் IIம் பாகம், புதிய பாடத்திட்டம் IIIம் பாகம்
இத்துடன்
எந்திரவியலில் பட்டப்பின் தகைமை (முதுமாணி)
அல்லது
இது தொடர்பான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவகத்தின் கூட்டுறவு உறுப்பாண்மை.
இத்துடன்
கூட்டுத்தாபனம், சபை அல்லது பெயர்பெற்ற வணிகத் தாபனமொன்றில், 08 வருடத்துக்குரிய, தகைமைக்குப் பின்னான அனுபவம்.

உள்ளக விண்ணப்பதாரர்:
நயிட்டாவில் ஆய்வு மற்றும் கல்வியியல் வகுதி தர I யில் பிரதிப்பணிப்பாளராக 05 வருட திருப்திகர சேவை.

சம்பளம் : ரூ 34,550 - 10 X 925 - 43,800 (AR-2)
(மேலதிகமாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கை செலவு கொடுப்பனவுகளும் மற்றைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

பிரதி அதிபர் பதவி

தகைமைகளும் அனுபவங்களும் :

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொறியியல் பட்டம் அல்லது விஞ்ஞான இளமாணிப்பட்டம் (பௌதிக பொறியியல் பௌதிகவியல்) முதலாம் இரண்டாம் தரத்தில் உயர் நிலைப் பட்டம்
அல்லது
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் எந்திரவியல் பட்டம்
அல்லது எந்திரவியல் மன்றம் (CEI) பழைய பாடத்திட்டம் IIம் பாகம், புதிய பாடத்திட்டம் IIIம் பாகம் / இலங்கை எந்திரவியல் நிறுவகம், பழைய பாடத்திட்டம் IIம் பாகம், புதிய பாடத்திட்டம் IIIம் பாகம்
மற்றும்
எந்திரவியலில் 2 வருட பட்டமேற்படிப்பு (முதுமாணி)
அல்லது
இது தொடர்பான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவகத்தின் கூட்டுறவு உறுப்பாண்மை.

சம்பளம் : ரூபா 24,725 - 5 x 550 - 5 x 645 - 15 x 770 - 42,250 (AR-1)
(மேலதிகமாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கை செலவு கொடுப்பனவுகளும் மற்றைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

வயது எல்லை : பணிப்பாளர்/அதிபர் - 30 வருடங்களுக்கு குறையாமலும் 55 வருடங்களுக்கு கூடாமலும் இருத்தல் வேண்டும்.
: பிரதி அதிபர் - 22 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு கூடாமலும் இருத்தல் வேண்டும்.
(உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை உபயோகிக்கப்படுவதில்லை)

பொது நிபந்தனைகள்

[illegible]

077 95 68 421


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்கு எதிரான பிரேரணை 20ஆவது திருத்தத்தைப் பாதிக்காது

கொழும்பு, மே 31

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையால் தேர்தல் சீர்திருத்த யோசனையான 20ஆவது திருத்தம் பாதிக்கப்படாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்

பிரதமர் என்பவர் அரசியல் அமைப்பின் கீழ் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற ஒருவர் என்ற அடிப்படையில் அவருக்கு எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுகிறது.

எனினும் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்குப் பெரும்பான்மை ஆதரவு இருப்பதால் பிரதமருக்கு எதிராகக் கொண்டு வரப்படும் பிரேரணை 20ஆவது திருத்தத்தைப் பாதிக்காது என்று பீரிஸ் குறிப்பிட்டார்.

மத்திய வங்கியின் முறிக்கொள்வனவில் ஏற்பட்ட பிரச்சினைக்கு ரணில் விக்கிரமசிங்கவே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பின் கீழ் அர்ஜுன மகேந்திரனை ரணில் விக்கிரசிங்கவினால் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கமுடியாது என்றும் பீரிஸ் குறிப்பிட்டார். (த)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

வான் விற்பனைக்கு

TATA - ஹன்ரர் 709 - Ex

14½அடி நீளம் கொண்ட ஹன்ரர் விற்பனைக்கு உண்டு.

(60350) (9.3) தொடர்பு: 077 609 5749

The Jaffna Education Centre
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
Spoken English with Grammar
"சிங்களம்" ESOL, IELTS ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்: 01.06.2015
ஆசிரியை: இ. லோகநாயகி
T.P:0766698953

மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 40 வயது நிரம்பிய விவாகரத்துப் பெற்ற, சர்வதேச தன்னார்வதொண்டு நிறுவனத்தில் இலங்கைக் கிளையில் ஓர் உயர் பதவியில் இருக்கும் மணமகளுக்கு தகுந்த வரனை அவரது பெற்றோர் தேடுகின்றனர். விருப்பம் உள்ளவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி ஊடாக தொடர்பு கொள்ளவும்.

(சி 17435) (9.3) தொடர்பு: 076 764 5400

யாழ். நகரில் கட்டடம் வாடகைக்கு

யாழ். நகரில் மத்திய பேருந்து நிலையத்துக்கு மிக அருகில் மின்சார நிலைய வீதியில் புத்தம் புதிய (நான்கு) மாடி கட்டடம் வாடகைக்கு விடப்படவுள்ளது. ஒரு மாடியானது 1200 சதுர அடியைக் கொண்டது. அனைத்து வசதிகளும் உடையது. அனைத்து தேவைகளுக்கும் உகந்தது.

தொடர்பு: 077 99 34 740

கட்டாரில் வேலைவாய்ப்பு



| | | | |
|---|---|---|---|
| 01 | மேசன் | 50 | QR 1200 |
| 02 | இலக்ரீசியன் | 25 | QR 1200 |
| 03 | வெல்டர் | 25 | QR 1200 |
| 04 | அலுமினியம் பெப்ரிகேடர் | 25 | QR 1200 |
| 05 | மார்பிள் மேசன் | 50 | QR 1200 |
| 06 | ஸ்டீல் பெப்ரிகேடர் | 25 | QR 1200 |
| 07 | தச்சர் | 25 | QR 1200 |
| 08 | ஸ்ப்ரே பெயின்டர் | 05 | QR 1500 |
| 09 | மெகேனிக் | 05 | QR 1500 |
| 10 | சேன் பிளாஸ்டர் | 05 | QR 1200 |
| | மொத்தம் | 245 | |

1 QR=36 RS

AL/Advt/2398/01/15



| | | |
|---|---|---|
| | GCC லைசென்ஸுடன் | 20 | QAR 1600 |
| | GCC லைசென்ஸுடன் | 10 | QAR 1400 |

AL/Advt/2398/01/15

CV Collection only / Govt.Approved Charges

க்லோபல் HR கொன்சல்டன்ஸ் (பி) லிமிட்
இல. 394/1/1, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09, இலங்கை
தொ: 011-2692364 / 011-2692370 / 077-6030118 e-mail: Cv.globalhrltd@gmail.com

அழகுக்கலை பயிற்சி

யாழ் பியூட்டி அக்கடமி மற்றும் ஒறிபிலேம் யாழ்.சேவை நிலையம் இணைந்து மிக குறைந்த கட்டணத்தில்...

- Certificate in Basic Beauty Course (ஒரு மாத கால அழகுக்கலை)
- Dip in Beauty Culture & Hair Dressing (மூன்று மாத கால டிப்ளோமா அழகுக்கலை)
- Cake Decoration Classes (கேக் ஐசிங்)

அனைத்து பயிற்சிகளும் கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம் பெற்று மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கிழமை நாள் புதிய பிரிவுகள் 05.06.2015 அன்று 10.00 மணிக்கு
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 07.06.2015 அன்று 10.00 மணிக்கு

YARL BEAUTY
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்...
ORIFLAME SWEDEN (யாழ்.சேவை நிலையம்)

இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)

WORLD EDUCATION FAIR 2015



MEET REPRESENTATIVES FROM LEADING UNIVERSITIES FROM UK, USA, AUSTRALIA, NEW ZEALAND, CANADA, HUNGARY, MALAYSIA AND RUSSIA

SCHOLARSHIPS, SPOT OFFERS AND FREE VISA GUIDANCE

Register Now
www.cduk.lk
WIN PRIZES!

FREE ENTRY

SATURDAY 6th JUNE @ TAJ SAMUDRA COLOMBO
From 11.00 a.m - 5.00 p.m

ORGANIZED BY
Campus Direct

Middlesex University, Anglia Ruskin University, University of the West of England Bristol, Nottingham Trent University, BPP University, Bath Spa University, SLMC Approved Universities

WE REPRESENT MORE THAN 200 UNIVERSITIES

Call us on:
077 824 6666
077 147 5555

ADVANCE ENTRY FOR STUDENTS WITH CIM, CIMA, ABE, NCC, BCS, HND, ACCA AND OTHER RECOGNISED QUALIFICATIONS PLEASE VISIT THE FAIR WITH YOUR ORIGINAL CERTIFICATES AND A SET OF PHOTOCOPIES

BRITISH COUNCIL IELTS
Print Media Partners: Education, EDUCATION TIMES

Sivo IT Solutions & Repairing Center

உலகத் தரம் வாய்ந்த * Bosch, It, * HITvision, * Swann, CCTV Camera க்கள் விற்பனைக்கு உண்டு.



அத்துடன்
* Alarming System,
* Laptop & Desktop
* Camera & CamCorder
திருத்திக்கொடுக்கப்படும்.

தேவை

கணினி அறிவுடைய பெண் விற்பனையாளர் தேவை.
சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்பாக
214, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
077 044 4496, 021 221 2424

யாழ்.பல்கலைக் கழகத்துக்கு முன்பாக Photo copy தெரிந்த பழகவிரும்பும் பெண் பிள்ளைகள் தேவை.



சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்
077 96 88 421 (60323) (4,3,7)



* பல் முக சிரசிகிச்சை (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

தொடர்பு: 077 654 4731


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# சம்பூரில் குடியேறச் சென்ற மக்கள் பொலிஸாரினால் வெளியேற்றம்



சம்பூர், மே 31

திருகோணமலை மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்டதாக கூறப்படும் காணிகளுக்குள் வெளியார் நுழைவதற்குப் பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமது மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்து தமது காணிகளைத் துப்பரவு செய்த காணிகளின் உரிமையாளர்களும் தற்காலிகக் கொட்டில்களை அமைத்து அங்கு தங்கியிருந்தவர்களும் வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

குறித்த காணி தொடர்பான வழக்கொன்று உயர் நீதிமன்றத்தில் தற்போது விசாரணையில் இருப்பதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

காணிக்குள் நடமாடும் வெளியாரை வெளியேற்றுமாறு நீதிமன்ற அறிவித்தல் தங்களுக்கு கிடைத்துள்ளதாகத் தெரிவித்தே பொலிஸார் வெளியேறுமாறு கேட்டுக் கொண்டதாக சம்பூர் மக்கள் கூறுகின்றார்கள்.

இதன் காரணமாக கடந்த ஒரு வாரகாலமாக அந்தப் பகுதிக்குள் துப்பரவுப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களும் தற்காலிகக் கொட்டில்களில் தங்கியிருந்தவர்களும் அங்கிருந்து வெளியேறிவிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின் றன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்தில் இவர்களது குடியிருப்பு காணிகள் உட்பட அந்த பிரதேசத்திலுள்ள சுமார் 1100 ஏக்கர் நிலம் அரச முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்காகவும் கடற்படைப் பயிற்சி முகாமிற்கும் சுவீகரிக்கப்பட்டிருந்தன.

குறித்த காணிகளில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு சுவீகரிக்கப்பட்டிருந்த 818 ஏக்கர் நிலம் மீள்குடியேற்றத்திற்காக ஜனாதிபதியினால் இம் மாதம் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் பேரில்விடுவிக்கப்பட்டிருந்தது.

குறித்த காணிகள் இதுவரை அதிகாரபூர்வமாக அரசாங்கத்தினால் காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவில்லை.

இருந்த போதிலும் காணிகளின் உரிமையாளர்கள் விரைவாக மீள்குடியேற்றம் இடம்பெறும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டு, சுயமாகவே சென்று காணிகளை துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்ட அதேவேளை, சிலர் தற்காலிக கொட்டில்கள் அமைத்து தங்கியும் இருந்தனர்.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் முதலீடு செய்வதற்கு தயாராகவிருந்த நிறுவனமொன்று இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு,எதிர்வரும் 16 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த)

# கண்டி வைத்தியசாலையில் திடீர் தீ; 70 பேர் வரை காயம்

கொழும்பு, மே 31

கண்டி பெரிய ஆஸ்பத்திரியில் 49ஆவது வார்ட்டில் இலங்கை நேரம் அதிகாலை 2 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 70 நோயாளிகள் காயங்களுக்குள்ளாகினர்.

தீப் பரவலால் தற்பாதுகாப்பிற்காக வார்டை விட்டு வெளியேற ஒருவரை ஒருவர் முண்டியடித்துக் கொண்ட போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 70 பேர் வரையில் காயமடைந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த 49 ஆவது வார்ட்டில் ஏற்பட்ட மின்சார கோளாறு காரணமாக சிறியளவிலான பாதிப்பு ஏற்பட்டது.

துரிதமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையால் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்த போதிலும் நோயாளிகளைக் காயத்திற்குள்ளாக்கியுள்ளது தீயினால் ஏற்பட்ட நெரிசல்.

(த)

# ரவியை விவாதத்துக்கு அழைக்கின்றார் பந்துல

கொழும்பு, மே 31

இலங்கையின் தற்போதைய பொருளாதாரம் தொடர்பில் தொலைக்காட்சி விவாதம் ஒன்றுக்கு வருமாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன அழைப்பு விடுத்துள்ளார்.

நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க அல்லது கொள்கை திட்டமிடல்துறை பிரதியமைச்சர் ஹர்சா டி சில்வா ஆகியோரை விவாதத்திற்கு வருமாறு பந்துல அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

நிதியமைச்சர் ரவி கருணா நாயக்கவும், மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனும் நிதித்தொடர்பில் பொய்யான தகவல்களை வழங்கி வருவதாக குற்றம் சுமத்தினார்.

தாம் நிதியமைச்சு உட்பட்ட பல்வேறு அமைச்சுப் பொறுப்புக்களை வகித்தவன் என்ற வகையில் இந்த விவாதத்துக்கு அழைப்பு விடுப்பதாக பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நாடு இன்று பொருளாதாரம் மற்றும் அரசியல் துறைகளில் பின்னடைவைக் கண்டு வருகிறது என்றும் பந்துல குறிப்பிட்டார். (த)

# நல்லாட்சிக் கதவு மாத்திரமே திறப்பு

கொழும்பு, மே 31

நாட்டில் தற்போது நல்லாட்சி ஏற்பட்டு விட்டது என எவராவது கூறுவார்களாயின், அதற்கு தான் முற்றாக இணங்க போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு புதுக்கடை மிஹிதுன மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நல்லாட்சிக்கான கதவு மாத்திரமே தற்போது திறக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சிக்காக மேலும் பல காரியங்களை நிறைவேற்றவேண்டியுள்ளது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்த வைபவத்தில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் சட்டத்தரணிகள் மற்றும் கல்வியாளர்கள் சங்கம், சட்டத்தரணி உபுல் ஜயசூரிய ஆகியோர் இணைந்து வழங்கிய 5 ஆயிரம் அமெரிக்க டொலர் சன்மானம், மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொடவின் மனைவி சந்தியா எக்நெலிகொடவுக்கு ஜனாதிபதியினால் வழங்கப்பட்டது. (த)

# நாட்டில் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றர்

*கபீர் ஹாசிம் குற்றச்சாட்டு*

கொழும்பு, மே 31

நாட்டில் மீண்டும் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த சிலர் முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலின் போது தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தோற்கடிக்க முழு முயற்சி எடுத்த தரப்பினர், பொதுத் தேர்தல் நடத்தப்படுவதனை தடுக்க முயற்சிக்கின்றனர்.

மீண்டும் நாட்டில் சர்வாதிகார ஆட்சியொன்றை உருவாக்க சூழ்ச்சி செய்கின்றனர். 20ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதாக கூறி எதிர்வரும் பொதுத் தேர்தலை காலம் தாழ்த்தக் கூடாது.

உடனடியாக பொதுத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தற்போதைய அரசை 100 நாள்களின் பின்னர் கலைக்காமல் விட்டதனால் கள்வர்களுக்காக கள்வர்கள்குரல்கொடுக்கும்நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் அளித்த ஆணை நாடாளுமன்றிலும் பிரதிபலிக்க வேண்டும்.

தற்போதைய நாடாளுமன்றில் அந்த மக்கள் ஆணை பிரதிபலிக்கவில்லை.எனவே புதிதாக நாடாளுமன்றம் ஒன்றை நிறுவ வேண்டியது அவசியமானது என கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமானசிறிகொத்தவில்நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (த)

## மரண அறிவித்தல்

### குமாரவேலு செல்வரத்தினம்

தோற்றம்:- 04.02.1951 மறைவு:- 30.05.2015



கரம்பனைப் பிறப்பிடமாகவும் பெரியவிளான் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு செல்வரத்தினம் நேற்று (30.05.2015) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு-அமுது தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகமுத்து-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் (வவா) அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரி, மஞ்சுளா மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயரத்தினம், தவமணி, இராசமணி, தனலட்சுமி, காலஞ்சென்ற மல்லிகாதேவி ஆகியோரின் மைத்துனரும், நந்தகுமார் (கனடா), ரோகினி, ராகினி, ராஜ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிரஞ்சினி (கனடா), திருச்செல்வம் (சின்னாம்பி) சிறி, செல்வரதி ஆகியோரின் அன்பு மாமனும், கோபி, கல்பனா, சோபனா, ஹரணி (கனடா), ஜனனி (கனடா), வைஷ்ணவி (கனடா), யதுஷன் சாஜுசன் கம்சிகன் டிலக்சனா கிருசனா சஜேகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பெரியவிளான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியவிளான், இளவாலை.
0773090201

தகவல்: குடும்பத்தினர்.

**Chemistry Personal / Group Classes**
Basic, Inorganic, Organic, Physical, கடந்தகால வினாக்கள்
ஆசிரியரால் B.Sc (cey) M.Sc (cey)
Chemistry கற்பிக்கப்படும்.
தொடர்பு: 077 603 8913 (59006) (4.3.7)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**
45 நாள் நிரம்பிய Labrador pure breed நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777181386

**Room நாள் வாடகைக்கு**
600/=, 800/=, 1200/=, 2500/=, 3950/=, A/C,TV
இணைந்த குளியலறையுடன் Hotel Villa,
422, Galle Road, Wellawatte. 072 255 2222

**பரப்புக்காணி, பனையில் விற்பனைக்கு**
7 பரப்புக்காணி, 4அறை வீட்டுடன், (குளியல் அறையுடன்) விற்பனைக்கு.
தொடர்பு: 0786334959/0773748596

**தேவை**
தெஹிவளை Guest Houseஒன்றுக்கு ஆண் / பெண் இருபாலாரும் தேவை. பயிலுநர் Room சுத்திகரிப்பாளர்கள், Receptionist, சமையற்காரர்கள், Gardeners, சாப்பாடு,தங்குமிட வசதி உண்டு. அத்துடன் Hotel தொடர்பாக கற்கவிரும்புவர்களுக்கு வாய்ப்புகள் அமைத்துக்கொடுக்கப்படும்.
37, Muhandiram Lane, Dehiwala.
077 303 5788

**வேலையாள்கள் தேவை**
வாகன சாரதி (AD),
ஸ்பிறேபெயின்டர்,
கூலியாள்கள் உடன் தேவை.
தொடர்பு: 077 758 5412, 077 300 1763 (60337) (45.3)

**A/L - ICT வகுப்புக்கள்**
G.C.E(A/L)-ICT,2017,2016 Batch இற்குரிய ஆங்கிலமொழி மற்றும் தமிழ் மொழிமூல வகுப்புக்கள். 2015 Batch இற்குரிய மீட்டல் வகுப்புக்கள்.
ஆசிரியர் Mr.M.I.Palah M.Sc .B.Sc
தொடர்பு: 0773240504

**மணமகள் தேவை**
யாழ் இந்து கௌரவ 1990, மூலம் Bachelor Degree ,UK PR பெண்ணுக்கு மணமகன் தேவை.
www.arunthathee.com
தொடர்பு: 0777164524
0214927527

**பிரத்தியேக வகுப்புகள்**
யாழ் நகரின் பிரபல கல்லூரியில் 28 வருடங்களுக்கு மேலாக கற்பித்தல் அனுபவம் பெற்ற தமிழ் ஆசிரியையால் தரம்10,O/L,A/L வகுப்பு மாணவர்களுக்கு தனியாகவும், குழுவாகவும் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் கற்பிக்கப்படும்.
இடம்: நாவலர் வீதியில்
தொடர்பு: 077 532 7636

**விற்பனைக்கு**
VI XXXX இலக்கமுடைய Scooty pept மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 0778715649
0775616159

**உடன் தேவை**
கணினியில் தமிழ், ஆங்கிலம் டைப்பிங் செய்யக் கூடிய ஆண் பெண் இருபாலாரும் உடன் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். மற்றும் (டிஜிற்றல்) போட்டோ கொப்பி செய்யக் கூடியவர்களும் விரும்புபவர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0779522444

**திருமணசேவை**
கௌரவ 1975 ஆம் ஆண்டு முதல் Dr,Engineer 1975ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூர் இஞ்சினியர் உத்தி... உண்டு.
தொடர்பு ...63148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த போட்டியிடுவதற்கு வாய்ப்பளிப்பதா? இல்லையா?

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ர்ாஜபக்ஷவுக்கு போட்டியிட வாய்ப்பளிப்பதா இல்லையா என்ற தீர்மானத்தை முன்னணியின் நிறைவேற்றுச் சபைக்கு கொண்டு செல்வது தொடர்பில் முன்னணியின் தலைவர்கள் இணக்கத்திற்கு வந்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிட வாய்ப்பை வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்துள்ள நிலையில், முன்னணியின் தலைவர்கள் இந்தத் தீர்மானத்திற்கு வந்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களுக்கும் இடையில் ஜனாதிபதி செயலகத்தில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பின் போது, மஹிந்தவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த மறுப்பு தெரிவித்துள்ள ஜனாதிபதி, பிரதமர் வேட்பாளரை அறிவிக்கப்படுவதை நிராகரித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்புக்குப் பின்னர் மறுநாள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட தான் விரும்புவதாக முன்னாள் ஜனாதிபதி இதன்போது கூறியுள்ளார்.

இதனடிப்படையில், மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என முன்னணியின் நிறைவேற்றுச் சபையின் பெரும்பாலான உறுப்பினர்கள் தீர்மானித்தால், மஹிந்த ராஜபக்ஷ கட்டாயம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிடுவார் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருமுறை பதவி வகித்து அதிகார பலத்தை ருசி பார்த்தவர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த அவருக்கு முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் பாதுகாப்பு உட்பட பல சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அவர் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவானால், இரண்டு காவற்றுறையினரின் பாதுகாப்பு மட்டுமே வழங்கப்படும். முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு உட்பட சிறப்பு சலுகைகளை அவர் இழக்க நேரிடும்.

இதனால், மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்திற்கு ஆசைப்பட்டு இருக்கும் சலுகைகளை இழக்க நினைப்பாரா அல்லது அவர் பிரதமராக வரவேண்டும் என்ற என்ற அவரது ஆதரவு அரசியல்வாதிகளின் எண்ணம் நிறைவேறுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என அரசியல் அவதானிகள் கூறியுள்ள னர்.

இந்த நிலையில், நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மஹிந்தவுக்கு இரண்டு காவற்துறையினரின் பாதுகாப்புடன் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் அளவுக்கு அவரது மூளையில் கோளாறு இருப்பதாக தான் எண்ணவில்லை என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அண்மையில் கூறியி ருந்தார்.

அத்துடன் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் தேர்தலில் போட்டியிட மாட்டார் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.(த)

# வடக்கில் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், மே 31

வடமாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் காணப்படும் மாகாண, வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வி நிலையங்களின் போதனாசிரியர் பதவிக்கான வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவை 1 ,2.1, ஆகிய தரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது வலயக் கல்வி அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களையும் தகைமைகளையும் நிபந்தனைகளையும் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்விப் பணிப்பாளருடாக எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கேட்டுள்ளார். (4)

# விபத்தில் ஒருவர் சாவு

கொழும்பு, மே 31

ஹட்டன்–கொழும்பு பிரதான வீதியில் கெப் ரக வாகனம் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்த விபத்து சம்பவத்தில் ,

குறித்த பிக்கப்ரக வாகனம் யட்டிவேரிய பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி 25 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கினித்தேனியிலிருந்து அவிசாவளை நோக்கி பயணித்த கப் ரப வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் பலாங்கொட வேகபிட்டிய பிரதேசத்தை சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

## அம்பாறையில்

வரும் இவர், தொழில் வாய்ப்புக்காக சவூதிக்குச் சென்று ஒரு வாரத்துக்கு முன்னரே தனது பெற்றோரின் வீட்டுக்கு வந்திருந்தார். அங்கு தூங்கிக் கொண்டிருந்த இவர் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் சிறுநீர் கழிப்பதற்காக வெளியே வந்தபோது மறைந்திருந்த சிலர் அவரின் கழுத்தை அறுத்தனர் எனக் கூறப்படுகின்றது.

இவர் உம்மா' என்று அபயக் குரல் எழுப்பியதைக் கேட்டு பெற் றோர் வெளியே வந்தபோது மகன் இரத்த வெள்ளத்தில் குற்றுயிராய்க் கிடந்தார். உடனடி யாக இவரைப் பெற்றோர் நிந்த வூர் ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனர். ஆனாலும், இவர் செல்லும் வழியில் உயிரிழந்தார் எனத் தெரி விக்கப்படுகின்றது.

சடலம் பிரேத பரிசோதனை களுக்காக நிந்தவூர் வைத்திய சாலையில் நேற்று வைக்கப்பட் டிருந்தது.

சம்மாந்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.ஜே.தஹநாயக்க தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வரும் சம்மாந்துறைப் பொலி ஸார், சந்தேகத்தின் பேரில் நேற் றுக் காலை ஒருவரைக் கைது செய்துள்ளதாக தெரிவித்தனர்.

குடும்பப்பகை காரணமாகவே இந்தக் கொலை இடம் பெற்றி ருக்கின்றது என முதல்கட்ட விசாரணையில் தெரிய வந் துள்ளதாக அவர்கள் மேலும் கூறினர். (த)

## வற்றாப்பளைக்கு

அவர்களது பிரதேசத்திலிருந்து செல் வதற்கான ஒழுங்கை நியாயமான கட்டண அடிப்படையில் வழங்குவதற்கு இலங்கைப் போக்கு வரத்துச் சபை தயாராகவுள்ளது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் ஆகிய பகுதிகளிலிருந்து வற்றாப்பளை அம்மன் கோயிலுக்குச் செல்லும் அடியவர்கள் யாழ்.மத்திய பஸ் நிலையத்திலும் பருத்தித் துறை, காரைநகர் சாலைகளிலும் முற்பதிவை மேற்கொள்ள முடியும். கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலிருந்து செல்லும் அடியவர்கள் தத்தமது பகுதி சாலைகளில் முற்பதிவு செய்ய முடியும்.

அது பற்றிய தொடர்புகளுக்கு யாழ். மத்திய பஸ் நிலையம் 021 222 2281, யாழ். டிப்போ 021 222 2207, பருத்தித்துறை டிப்போ 021 226 3266, காரைநகர் டிப்போ 021 3207593, முல்லைத்தீவு 021229 0139, கிளிநொச்சி டிப்போ 021 228 3737, வவுனியா டிப்போ 024 222 3449, மன்னார் டிப்போ 023 222 2281 எனும் இலக்கங்களுடன் தொடர்புகொள்ள முடியும்என்றுமேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த–4)

## புலிகளை

என நம் புவோ மாக என அவர் கூறியுள்ளார்.

அழுத்தங்கள் காரணமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## 14 நாள்களில்

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் உடன் மேற்கொண்டு குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துமாறு தான் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் இராஜாங்க கல்வியமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## சு.க.வுக்குள்

உதயன் வினவிய போது அவர் மேற்குறிப்பிட்ட கருத்தை உறுதிப்படுத்தினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது கடமையைச் சரியாக நிறைவேற்றவில்லை என்றும், மத்திய வங்கியில் இடம்பெற்ற நிதி மோசடி குறித்து விசாரிப்பதற்காக அவரால் நியமிக்கப்பட்ட குழு மீதும், அதன் அறிக்கை மீதும் தமக்கு நம்பிக்கை இல்லை என்றும் குறிப்பிட்டு சு.க. உறுப்பினர்களால் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்வரும் ஜூன் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ளது.

இதற்கு ஜனாதிபதி ஆட்சேபனை தெரிவிக்காததால் ஐக்கிய தேசியக் கட்சிகடுமையான எதிர்ப்பைவெளிப்படுத்தி வருகின்றதுடன், அவ்வாறு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுமாயின் 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஐ.தே.க. ஆதரவு வழங்கப் போவதில்லை என்று தீர்மானித்துள்ளதால் இது தொடர்பில் சு.க.வுக்குள் கருத்து முரண்பாடு நிலவிவருகின்றது.

அதாவது, புதிய அரசு மக்களுக்கு வழங்கிய பிரதான வாக் குறுதியாக தேர்தல் சீர்த்திருத்தம் உள்ளடங்கிய 20 ஆவது திருத்தமாகும். இதில் சு.க.வின் யோசனைகளே அதிகம். ஆகவே, இதனை நிறைவேற்றிக் கொள்ளவே கட்சி முதலில் முயற்சிக்க வேண்டும். அதன் பின்னரே நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் சிந்திக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் சு.க. உறுப்பினர்களுடன் கட்சித் தலைவர் ஜனாதிபதி மைத்திரி பால கலந்தாலோசித்து பெரும் பான்மை விருப்புக்கமைய செயற்படவுள்ளதாகவும் அவர் 20 ஐ விரைவில் நிறை வேற்றவே விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், பெரும்பான்மை சு.க. உறுப்பினர்கள் நம்பிக்கை யில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதில் மும்முரமாக இருக்கின்றமையால் 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதில் காலதாமதமாகும் எனவும் கூறப்படுகின்றது.

அதேவேளை, சு.கவுக்குள் மஹிந்த ஆதரவு தரப்பினர் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் சிலர் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## இலங்கை

தொடர்பான சீனாவின் நிலைப்பாட்டை அட்மிரல் விபரித்துக் கூறியிருந்தார்.

அதற்கு, ருவான் விஜேவர்த்தன, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் நெருக்கமாக உள்ளன. ஒரே சீனா என்ற கொள்கையையும், தென் சீனக் கடல் விவகாரத்தில், சீனாவின் நிலைப்பாட்டையும் முழுமையாக ஆதரிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையின் இராணுவக் கட்டுமானத்துக்கு சீனா உதவ முடியும் என்றும், இரண்டு தரப்பும் தொடர்ந்து பாதுகாப்புக் கலந்துரையாடல்களையும், கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்புகளையும் மேற்கொள்ள முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட அட்மிரல் சன் ஜியான்கூ, இரண்டு நாடுகளுக்கும் இடையில், எந்தக் காலத்திலும் நட்புறவை ஏற்படுத்த இலங்கையுடன் இணைந்து கூட்டு முயற்சிகளை மேற்கொள்ள சீனா விரும்புகிறது.

உண்மையான பரஸ்பர உதவிகளையும், பரம்பரை பரம்பரையான நட்புறவையும், உறுதிப்படுத்தும் வகையில், விரிவான மூலோபாய ஒத்துழைப்பை தொடர்ந்து முன்நோக்கி நகர்த்த வேண்டும்.

இலங்கை சீனா இடையே இராணுவ உறவுகளை அபிவிருத்தி செய்வது தொடர்பான செயற்பாட்டு அணுகுமுறையை சீனா கொண்டுள்ளது. பரந்துபட்ட அளவில், உயர் மட்டத்தில், இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் விருத்தி செய்ய சீனா விரும்புகிறது– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## பிரதமர்

திட்டிருந்ததாக கடந்த 25ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்திருந்தார். எனினும், நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மா நாட்டில் இதுவரை 85 பேரின் கையொப்பங்கள் கிடைத்துள்ளதாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு திரட்டுவதில் எதிர்க்கட்சியினர் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனரா என எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது தொகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமையால் கையொப்பங்களைத் திரட்டுவதில் மந்தநிலை காணப்படுவதாகக் காரணம் கூறியதுடன் நாடாளுமன்றம் கூடும் போது விரைவாகக் கையொப்பங்களைப் பெற்றுவிட முடியும் என நம்பிக்கை வெளியிட்டார்.

எதிர்க்கட்சியினரின் நகர்வுகளை ஜனாதிபதி உன்னிப்பாக அவதானித்து வருவதுடன் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அதிகமானவர்கள் கையயாப்பமிடுவதான செய்திகள் கிடைக்கப் பெறுமிடத்து நாடாளுமன்றக் கலைப்பு தொடர்பான அறிவிப்பு வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதிக்கு நெருங்கிய வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்களுக்கு அமைவாக எதிர்வரும் ஜூன் 15ஆம் திகதியளவில் நாடாளுமன்றம் கலைக்கப் படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நியமிக்க முடியாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைவர்களுடனான சந்திப்பின் போது திட்டவட்ட மாக தெரிவித்துவிட்ட நிலையில், அடுத்த கட்டமாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கை தொடர்பாக மஹிந்த வுக்கு நெருக்கமான நாடாளு மன்ற உறுப்பினர்கள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள பெரும்பான்மையான உறுப்பினர்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் உள்ளீர்த்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஒருசில உறுப்பினர்களோடு ஓரங்கட்டும் பிரயத்தனமும் உள்ளதாக எதிர்க்கட்சியின் முக்கியஸ்தரான பந்துல குணவர்த்தன நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டின் நிறைவில் எழுப்பிய கேள்வியொன்றுக்கு அளித்த பதிலில் சுட்டிக்காட்டினார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதம வேட்பாளராகக் களமிறக்கினால்தான் பொதுத்தேர்தலில் அதிகமான ஆசனங்களைக் கைப்பற்ற முடியும் எனக் குறிப்பிட்ட அவர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள அனேக உறுப்பினர்கள் தமக்கு ஆதரவளிப்பார்கள் என நம்பிக்கை வெளியிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 22

# நீலங்களின் போரில் கிளி. இந்து இமாலய வெற்றி




கிளிநொச்சி, மே 31
நீலங்களின் போர் என்று வர்ணிக்கப்படும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கும் கிளிநொச்சி இந்துக்கல்லூரிக்கும் இடையிலான இரண்டு நாட்களைக்கொண்ட துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அபார வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய மகா்வித்தியாலய அணிக்கு கிளிநொச்சி இந்துவின் களத்தடுப்பு கச்சிதமாக அமைந்து அதிர்ச்சிமேல் அதிர்ச்சி கொடுத்தது. கிளிநொச்சி ம.மகா வித்தியாலயம் 75 ஓட்டங் களுக்குள் சுருண்டது.

பந்துவீச்சில் இந்துக்கல்லூரி சார்பாக பார்த்தீபன் 3 இலக்குகளையும், கோபிசாந்த் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

76 ஓட்டங்களைப் பெற்றால் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெறலாம் என்ற நிலையில் களமிறங்கிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி வீரர்களின் இன்னிங்ஸிலும் தடுமாற்றம் தவறாது இடம்பிடித்தது.











எனினும் 118 ஓட்டங்களைப் பெற்று 43 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

பந்துவீச்சில் மத்திய மகா வித்தியாலயம் சார்பாக மருதன் 3 இலக்குகளையும், பிரதீப் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

43 ஓட்டங்களால் முன்னிற்கும் இந்துவின்மைந்தர்களின் ஆதிக்கத்தை மத்தியின் மைந்தர்கள் இல்லாமல் செய்து கடின இலக்கை நிர்ணயிப்பார்களா? அல்லது ஆட்டம் இந்துவின் மைந்தர்களுக்கு சார்பாக முடிவடைந்து தொடர் 2:2 என்று சமநிலையாகுமா? என்ற வினாக்களுடன் ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆரம்பமானது.

தொடர்ந்து இரண்டாம் நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய மத்திய மகா வித்தியாலயத்துக்கு இந்துவின் மைந்தர்கள் வேகத்தால் வித்தை காட்டினர். சீட்டுக்கட்டுச் சரிவதைப் போல் 45 ஓட்டங்களுக்குள் இலக்குகள் வேகமாக சரிந்து முடிந்தன. 90 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட இரண்டாவது இன்னிங்ஸில் மத்தியின் வீரர்களால் வெறும் 22 பந்துப் பரிமாற்றங்களுகளுக்கு மட்டுமே தாக்குப்பிடிக்க முடிந்தது. இந்துவின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியாகிய போதிலும் சம்பிரதாயத்துக்கு 3 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு களமிறங்கிய இந்து கிண்ணத்தை தமது கல்லூரிக்கு கொண்டு சென்றனர். இதனால் இதுவரைகாலமும் நடந்த நீலங்களின் போர் 2:2 என்று சமநிலையாகியுள்ளது.

சிறந்த பந்துவீச்சாளராக கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் எஸ்.பிரதீபனும் சிறந்த துடுப்பாட்ட வீரனாக கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் எ.அனுஸ்கனும் சிறந்த களத்தடுப்பாளராக கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் கே.கஜனனும் ஆட்டநாயகனாக கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் எ.அனுஸ்கனும் தெரிவானார்கள்.

ஆட்டத்தின் இறுதிநாளுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர எஸ்.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர திரு.கே.முருகவேல், கமநல சேவைகள் திணைக் களத்தின் உதவி ஆணையாளர ஆர்.நிசாந்தன், எயார்டெல் நிறுவனத்தின் வடமாகாண வியாபார முகாமையாளர் றோய் பிரதீபன், கிளிநொச்சி மாவட்ட உதவி திட்ட மிடல் பணிப்பாளர் எ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி-21)

## இன்றைய மோதல்


மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெரு விழாவை முன்னிட்டும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டும் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழக மைதா னத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் இந்து போயிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவாலி சென். பீற்றஸ் விளையாட்டுக்கழக அணிமோதவுள்ளது. மாலை 4.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தெல்லிப் பழை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

# ஓல்ட் கோல்ட்ஸ் காலிறுதிக்குள் சொதப்பியது ஜொனியன்ஸ்

யாழ்ப்பாணம், மே 31
யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் அனுமதியுடன் யாழ். பல்கலைக்கழக விளயாட்டவையும் யாழ் பல்கலைக்கழக ஹொக்கி அணியும் இணைந்து நடத்திய ஹொக்கித் தொடரின் காலிறுதி ஆட்டத்தில் ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் பி.ப. 4மணிக்கு மோதிக்கொண்டது.

வெற்றிபெறும் அணி அரையிறுதிக்குள் என்ற காரணத்தினால் வாழ்வா? சாவா? நிலைமை ஆட்டத்தில் பதட்டத்தை ஏற்படுத்த ஆட்டம் ஆரம்பத்திலேயே விறுவிறுப்படைந்தது. இரண்டு அணிவீரர்களும் வாய்ப்புக்களை பெறுவதும் அதை நழுவவிடுவதுமாக முதல்கோலை பதிவுசெய்வதற்காக படாதபாடு பட்டனர். ஆட்டத்தின் முதல்பாதியின் மத்திய பகுதியில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியின் தலைவர் அருண் ஆட்டத்தின் முதல்கோலையும் ஒரே கோலையும் தனது பெயரில் பதிவுசெய்தார்.



பழிதீர்க்க வேண்டும் என்ற கட்டாயத்தில் ஜொனியன்ஸ். ஆதிக்கத்தை தொடர்ந்து தக்கவைக்க வேண்டும் என்ற முனைப்பில் ஓல்ட் கோல்ட்ஸ். ரசிகர்களுக்கு ரம்மிய மான விருந்தாகியது ஆட்டம். ஆனால் வாய்ப்புக்களை வீணடிப்பது நிறுத்தப்படவேயில்லை. முடிவில் ஓல்ட் கோல்ட்ஸ் 1:0 என்ற அடிப்படையில் அரையிறுதிக்கு தகுதியானது. (ரி-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனியிடம் இருந்து ஹோக்லி பாடம் கற்க வேண்டும்




பங்களாதேஷுக்கான டெஸ்ட் தொடர் நெருங்கும் நிலையில் டோனியிடம் இருந்து ஹோக்லி தலைமைத்துவ பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் தெரிவித்துள்ளார்.
டோனியின் ஓய்வினையடுத்து ஹோக்லி டெஸ்ட் அணிக்கு தலைவராக நியமிக்கப்பட்டார். இதனையடுத்து ஹோக்லியின் தலைமையில் இந்தியஅணி அடுத்த மாதம் பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது. இந்த நிலையில் டோனியிடம் இருந்து ஹோக்லி பாடம் கற்க வேண்டும் என்று முன்னாள் தலைவர் கபில் தேவ் தெரிவித்துள்ளார். ஹோக்லியின் தலைமைத்துவம் தொடர்பாக கபில்தேவ் தெரிவித்ததாவது 'டோனிக்கு பிறகு தலைமைப் பதவிக்கு தகுதியானவர் ஹோக்லி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர் தலைமைப் பதவியில் எப்படி இருக்க வேண்டும் என்று டோனியிடம் பாடம் கற்க வேண்டும். களத்தில் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். கிரிக்கெட்டில் முதிர்ச்சி தன்மை மிகமிக முக்கியம். அதை ஹோக்லி கற்றுக் கொள்ள வேண்டும். இந்திய அணியில் பல திறமையான வீரர்கள் உள்ளனர். எனவே சிறந்த வீரர்களை வைத்து சிறந்த அணியை ஹோக்லி உருவாக்க வேண்டும்' என்றார். (ரி)

# மைதானங்கள் அல்ல வீரர்கள் உருவாக்கப்பட வேண்டும்

## அர்ஜுன ரணதுங்க




எதிர்வரும் காலங்களில் ஒழுக்கமுடைய பாடசாலை கிரிக்கெட் அணிகள் உருவாக்கப்படவில்லையெனில், கிரிக்கெட் விளையாட்டின் எதிர்காலம் குறித்து எதிர்பாரப்புக்களை வைத்திருக்க முடியாது. என்று துறைமுகம் மற்றும் விமான போக்குவரத்து துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
கிரிக்கெட்டின் எதிர்காலம் தொடர்பாக ரணதுங்க தெரிவித்ததாவது:– மைதானங்கள் அமைப்பதைவிடவும் கிரிக்கெட் வீரர்களின் முன்னேற்றம் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டும். கடந்த காலங்களில் வீரர்களுக்காக முதலீடுகளை செய்யவில்லை. சர்வதேச மைதானங்கள் எமக்கு போதும், அது எமக்கு வேண்டியளவு காணப்படுகின்றது. ஆனால் அரசியல் வாதிகளின் பெயர்களைப் பொறிப்பதற்கு புதிதாக மைதானங்களை அமைத்து கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையை அவமதித்துள்ளார்கள். எங்களுக்கு உண்மையாகவே தேவைப்பட்டது சர்வதேச மைதானங்கள் அல்ல. நாம் கிரிக்கெட் வீரர்களை உருவாக்காமல் பல பில்லியன் ரூபாய்களை செலவிட்டு வெறுமனே மைதானங்களை அமைக்கின்றமையினால் எவ்வித பிரயோஜனமும் இல்லை. கிரிக்கெட் அழிவடைவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது. ஒழுக்கமுடைய பாடசாலை கிரிக்கெட் அணியை நாம் உருவாக்காவிடின் நாம் கிரிக்கெட் குறித்து கொண்டுள்ள எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. என்றார். (ரி)


# தொடர் பாகிஸ்தானிடம்

## சிம்பாப்வே மீண்டும் தோல்வி

பாகிஸ்தான், சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான 3 ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் அலியின் அபார சதமும் சொகைல் மலிக் இருவரினதும் இணைப்பாட்டமும் கைகொடுக்க 6 இலக்குகளால் சிம்பாப்வேயை வீழ்த்தி தொடரைக் கைப்பற்றியது பாகிஸ்தான்.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தீர்மானிக்க களமிறங்கினாகள் சிபென்டாவும் சிப்ஹபாவும். சிபென்டா, மசகட் , வில்லியம்ஸ் எ[illegible] ஒரு முனையால் இலக்குகள் சரிந்துகொண்டிருந்தாலும் மறுமுனையில் பதட்டமில்லாத இன்னிங்ஸை அரங்கேற்றிக் கொண்டிருந்தார் சிப்ஹபா. சிப்ஹபாவுடன் இணைந்தார் ரசா. சிம்பாப்வே பலம்பெற ஆரம்பித்தது. சிக்சர்களும் இடையிடையே பவிலியனை எட்டிப்பார்க்கத்தவறவில்லை. இரு அனுபவ வீரர்களைப்போல் இணைப்பாட்டம் இருந்தது. நீண்டநேரம் களத்தில் நிலைத்து நின்ற சிப்ஹபாவையும் பதட்டம் ஆட்கொள்ளத்தான் செய்தது. ஒரு ஓட்டத்தால் சதத்தைத் தவறவிட்டு நடையைக் கட்டினார். சிப்ஹபாவைத் தொடர்ந்துவந்த பின்வரிசை வீரர்கள் சொதப்பினாலும் தொடர்ந்தும் நம்பிக்கை கொடுத்தார ரசா. சிப்ஹபாவைப் போல் தடுமாறாமல் சதத்தையும் நிறைவுசெய்தார். முடிவில் சிம்பாப்வே 268–7.
பாகிஸ்தானுக்கு இது ஒரு இலக்கேயில்லை. களத்தில் அலியுடன் அஹமட். சுப்பராக இல்லாவிட்டாலும் இலக்கை எட்டக்கூடிய சுமாராண இணைப்பாட்டம். சில ஆட்டங்களாக சொதப்பி வரும் ஹபீஸ் இந்த ஆட்டத்திலும் சொதப்பவே செய்தார். அலியுடன் பிக் இணைந்து பாகிஸ்தானின் வெற்றி வாய்ப்பை அதிகப்படுத்தினார். சதத்தை நோக்கி அலி. அரைச்சதத்தை நோக்கி பிக். பிக்கால் நீடிக்க முடியவில்லை. ஆனபோதி லும் நம்பிக்கை தந்து சதத்தை நிறைவு செய்தார் அலி. வெற்றிக்கு 60 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் அலி பவிலியன் திரும்ப தொடரந்தும் நிலைத்து நின்று ஆட்டத்தை கச்சிதமாக முடித்து வைத்தனர் சொகைலும் மலிக்கும். (ரி)




# நியூஸிலாந்து திணறல்



இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்டில் ஒரேநாளில் எட்டு இலக்குகளை பறிகொடுத்து திணறி வருகிறது நியூஸிலாந்து.
நியூஸிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் இங்கிலாந்தின் லீட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானிக்க களத்தில் லாதமும் குப்ரிலும். மூன்றாவது பந்துப்பரிமாற்றத்தில் அண்டரசனின் பந்தில் டக்குடன் பவிலியன் திரும்பினார் குப்ரில். நியுஸிலாந்தின் எதிர்கால அணித்தலைவர் என்று வர்ணிக்கப்படும் வில்லியம்சனும் அதே பந்துப்பரிமாற்றத்தில் ஆட்டமிழக்க நியூஸியின் இன்னிங்ஸ் 2–2 என்று ஆட்டம் கண்டது. டெஸ்ட் ஆட்டங்களில் 400 இலக்குகளைக் கைப்பற்றி இங்கிலாந்து சார்பாக புதிய மைல்கல்லை பதிவுசெய்த அண்டர்சனின் [illegible] வெளிவந்தது. லாதமும் ரெயலரும் சிறிது நேரம் நிலைத்துநின்று ஆட்டத்தின் போக்கை நியூஸிலாந்தின் பக்கமாக திரும்ப முனைந்த போதிலும் அண்டர்சனும் புரோட்டும் அச்சுறுத்திக்கொண்டேயிருந்தனர். விடைபெற்றார் ரெய்லர். நெருக்கடிகளை உணராதவர் என்று மற்றொரு தடவை நிரூபித்தார் மக்கலம். 28 பந்துகளில் 41 ஓட்டங்களைக் குவித்து 150என்ற சராசரியில் அதிரடியை காட்டினார். ஆனபோதிலும் நீடிக்கவில்லை. மக்கலம் ஆட்டமிழந்ததும் பின்வரிசை ஆட்டம்காணும் என்றிருந்த நிலைப்பாட்டை அப்படியே மாற்றினார் ரோஞ்சி. மக்கலத்தின் பாணியில் அதிரடிகாட்டி நீடிக்கவும் செய்தார். 37 பந்துகளில் 2 சிக்சருடன் அரைச்சதம் கடந்தார். லாதமும் ரோஞ்சியும் இணைப்பாட்டமாக 120 ஓட்டங்களைப் பகிர்ந்து நியூஸியை கௌரவ நிலைக்கு அழைத்துச் சென்றனர். ஆனால் இருவரும் சதத்தைத் தவறவிட்டு ஆட்டமிழந்தனர். மொத்தத்தில் முதலாம்நாள் ஆட்டநேர முடிவில் நியூஸிலாந்து 297–8.
பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக புரோட் 3 இலக்குகளையும் அண்டர்சன், வுட் இருவரும் தலா 2 இலக்குகளையும் ஸ்ரோக்ஸ் ஒரு இலக்கையும் கைப்பற்றியுள்ளனர். (ரி)




*இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளரான அண்டர்சன் தனது 400 ஆவது இலக்கைக் கைப்பற்றியதை அடுத்து அவரது ரசிகர்களின் கொண்டாட்டம்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபிள்ஸ்

ரெறாசோ
(Terrazzo)
மாபிள் பதித்தல்,
கிறனைற் (Granite)
சமையலறைத் தட்டு,
நிலவேலைகள்
நவீன முறையில்
செய்துதரப்படும்.

Since 1952

தொல்புரம்.
தொடர்பு:
021 225 0186,
077 355 3372,
077 630 6733

## குறுகிய நேரத்திலும் குறைந்த செலவிலும் நிர்மாண வேலைகளை செய்து கொள்ள...

கட்டடங்கள் கட்டுவதற்கு
அத்திபாரம் தோண்டுதல், காணி
துப்பரவாக்குதல், கட்டடம் உடைத்தல்,
கிணறு, மலசல குழி, குளங்கள் தோண்டுதல்,
அண்டக் கிறவுண்ட் பிறேக்கர் மூலமாகவும்
அனைத்து விதமான வேலைகளும் செய்து
கொடுக்கப்படும். மணல், கல், ABC கிறவல் மணல்
என்பனவும் வழங்கப்படும். JCB, Excavator, Roller, Wacker,
Hilti, Concrete Mixer என்பனவும் மணித்தியால
அடிப்படையிலும் வாடகைக்கு கொடுக்கப்படும்.

**Smart Kings (Pvt) Ltd.**
ஸ்மார்ட் கிங்ஸ் (பிறைவேற்) லிமிட்

Hotline
077 375 4040

Head Office:
684A, Colombo Road,
Kurana/Negombo

148, Station Road, Jaffna.(Railway Station)
Tel : 021 730 6099 Fax : 021 454 6699
Email : kuhan79@live.com

## SENNOK TRADE COMBINE(Pvt)Ltd.

என்னும் முன்னணி தனியார் நிறுவனத்திற்கு
தகுதி வாய்ந்த உயர் வலு இயந்திர உதிரிப்பாக
விற்பனையாளர் ஒருவர் தேவை.

எதிர்பார்க்கப்படும் தகைமைகள்.
- இரண்டு அல்லது மூன்று வருடங்கள் துறைசார்ந்த அனுபவம்
- சிங்களம் ஆங்கிலம் ஆகிய மொழிகள் மேலதிக தகுதியாக கருதப்படும்.
- யாழ்மாவட்டத்தை வசிப்பிடமாக க்கொண்டவராக இருக்க வேண்டும்.
- 25-40 வயது வரையானோர் விண்ணப்பிக்கலாம்.
- ஏழு நாள்களுக்குள் விண்ணப்பப்படிங்கள அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பப் படிவங்கள் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி.

SENOK TRADE COMBINE (PVT) LTD
VEPPANKULAM, OMANTHAI,
VAVUNIYA.
தொடர்பு: 024 222 5531, 077 365 5673, 077 377 0984

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**உருத்திரசிங்கம் சரஸ்வதி**
(பிள்ளையார் கோவிலடி கல்மடு கனகராயன்குளம்)

அன்பின் உறைவிடமாய்
அருளின் இருப்பிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் சிகரமாய் - இருந்து
எங்கள் எல்லோரையும்
வாழவைத்து பாதுகாத்த
நீங்கள் எம்மைவிட்டுப்
பிரிந்தாலும் நீங்கவில்லை
உங்கள் நினைவுகள்
அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா
சாந்தி பெற தினம் தினம்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!
ஓம் சாந்தி!!!

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டுப் பல வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறி அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் நேரில் கலந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும் மேலும் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வு கல்லாற்றிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று(31.05.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
16/24, 8ஆம் ஒழுங்கை, மன்னார் வீதி,
வேப்பங்குளம், வவுனியா.

## FRENCH LANGUAGE CENTRE FOR FRENCH FRENCH

FLLC

## FRENCH CLASSES

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட
International Diplomas in French
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
இதுவரையில் எமது ஆசிரியரிடம் 938 பேர் கற்று சென்றுள்ளனர்
Register now : 0779 789 456 / 021 221 7781

| No. 40, Palaly Road, Jaffna.(அரியாலை) | No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி | கண்டி வீதி, அரசடி சாவகச்சேரி. |
|---|---|---|

## வேலையாள் தேவை

கடை கூட்டி, துடைக்க
01.06 தொடக்கம் 03.06 வரை நேரில் வரவும்.
தொடர்பு: நியூரோன் எலக்ரிக்கல்ஸ்
169, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

## வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேவை
## Field Officer

விவசாயத்துறையில் அனுபவம் உள்ள அல்லது விவசாய டிப்ளோமா தாரிகள் வடமாகாணத்தில் வேலை செய்ய, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் உடனடியாகத் தேவை.
(ஆண்கள் மட்டும்)
தொடர்பு:
Agro - Culture Trends Pvt.Ltd
No. 289, Highlevel Road,
Colombo -05
M.Kumar - 077 226 0490
(60269)
(3.7.9)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில்
கற்றுக்கொள்ளுங்கள்

af

- வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
- உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
- INTERNATIONAL DIPLOMAS.
- ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## உயர்வகை பல் வைத்திய சேவைக்கு...
## For Quality, Professional Dental Care

INTERNATIONAL DENTAL CARE
Professional Dental Centre in Sri Lanka
IDC

INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD.

**Jaffna Branch:**
No:84, Stanly Road, (Near Ariyakula Junction) Jaffna, Srilanka.
Tel: 021 222 0833, 021 492 3353

**Colombo Branch:**
No:67, W.A.Silva Mw, Wellawatta, Colombo-06, Srilanka.
Tel: 011 250 7070, 011 438 0803

**Vavuniya Branch:** Raaj Medical Lab,
No:10, Bazaar Street, Vavuniya, Srilanka.
Tel: 024 222 1577, 024 492 5527

www.internationaldentalsrilanka.com

## மிகக்குறைந்த விலையில்

- **Awards and Medals**
- **T-Shirt Printing**

ANDRA PRINTERS



விருதுகள்,
பதக்கங்களை
விரும்பிய டிசைன்களில்
செய்து பெற்றுக்
கொள்ளலாம்

விருதுகள்,
நினைவுச் சின்னங்கள்,
பதக்கங்கள்,
வெற்றிக் கேடயங்கள்

வெளிநாடுகளிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உயர்தர துணிகளைக் கொண்டு
ரி-சேட்களை நீங்கள்
விரும்பியவாறு தைத்துப்
பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான அலுவலகம் : 379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
கிளை : 356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Email : andradigital@gmail.com

Tel : 021 222 8929
021 221 7279
077 220 9527


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.